விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 12 வியாழக்கிழமை (26.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 097

# மகிந்த ராஜபக்ஷவின் வீழ்ச்சி தெற்காசியாவின் ஆச்சரியம்

## அமெரிக்கா தெரிவிப்பு



(வாஷிங்டன்)

இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்டமை தெற்காசியாவின் ஆச்சரியமாகவுள்ளது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி செயலாளர் நிஷா பிஸ்வால் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடி, குடும்ப ஆட்சி, அச்சுறுத்தி பிளவுபடுத்தும் கொள்கை, உறுதியற்ற நிலையில் சிக்கி தவித்த இலங்கையில் இடம்பெற்ற தேர்தலின் போது நம்பிக்கையளிக்கும் வகையில் மக்கள் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிங்கள மற்றும் 24ஆம் பக்கம் பார்க்க....

## திவிநெகுமவில் மோசடி பசிலை அழைக்க முயற்சி

### விசாரணைக்காக



(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் அரச நிதி மோசடி தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அவரை நாட்டுக்கு அழைப்பதற்கான உத்தரவொன்றை நீதிமன்றத்திடம் பெறவுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

திவிநெகும திணைக்களத்தில் நடந்துள்ளதாகக் கூறப்படும் பெரும் நிதி மோசடி 24ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் அமைச்சர் ஹெகலியவுக்கு யாழ்.நீதிமன்றம் அழைப்பாணை

### லலித், குகன் வழக்கு விசாரணைக்காக்

(கொழும்பு)

காணாமல் போன லலித், குகன் வழக்கு விசாரணைகளில் ஊடகத்துறையின் முன்னாள் அமைச்சரான ஹெகலிய ரம்புக்வெலவிற்கு யாழ். நீதிமன்றம் மூன்றாவது தடவையாக மீண்டும் அழைப்பாணை விடுத்துள்ளது. இவ்வழக்கின் சாட்சியாளரான மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான சுனில் ஹந்துன்நெத்திக்கும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.நீதவான் நீதிமன்றின் நீதவான் பெ.சிவகுமார் முன்னிலையில் நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணையின் போதே நீதவான் குறித்த அழைப்பாணையை விடுத்துள்ளார். மனிதவுரிமை செயற்பாட்டாளர்களும் 24ஆம் பக்கம் பார்க்க....

## சீனா பயணமானார் ஜனாதிபதி



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் சீனாவுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

யு.எல்.868 எனும் சாதாரண பயணிகள் விமானத்திலேயே ஜனாதிபதி மைத்திரி 24ஆம் பக்கம் பார்க்க....

## அரச அதிபர் பதவியேற்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக நாகலிங்கம் வேதநாயகன் நேற்றையதினம் உத்தியோக பூர்வமாக கடமையேற்றுக் கொண்டார். 24ஆம் பக்கம் பார்க்க....

## சந்திரிகாவுக்கு சந்தர்ப்பம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மீண்டும் பாராளுமன்றத்திற்குள் நுழைவதற்காக ஆயத்தமாகிக் கொண்டு இருப்பதாக அரசியல் வட்டா 24ஆம் பக்கம் பார்க்க....

## எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்பது குறித்து கட்சி முடிவெடுக்கும்

### சம்பந்தன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற விதிமுறைகளின் படி எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே என்ற நிலைமை வருமானால் அந்தப் பதவியை நாம் ஏற்பதா, இல்லையா என எமது கட்சி கூடி ஆராய்ந்து இறுதி முடிவெடுக்கும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசு அமைத்துள்ள நிலையில் சுதந்திரக் கட்சி ஆளும் கட்சியாக மாறிவிட்டது.

இந்நிலையில், நிமால் சிறிபால டி சில்வா ஆளும் கட்சியில் இருந்து கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்கமுடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

அவர் அந்தப் பதவியில் தொடர முடியாத நிலை ஏற்பட்டால் நாடாளுமன்றத்தில் மூன்றாவது பலம் பொருந்திய கட்சியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்க வேண்டிய நிலை ஏற்படும்.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் வழங்கிய ஆதரவுக்கு நன்றிக்கடனாக நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சிப் பதவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கி, சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக்க மைத்திரி, ரணில் அரசு முயற்சிக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர 24ஆம் பக்கம் பார்க்க....

## யாழிற்கு நாளை பிரதமர் விஜயம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாட்கள் உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாளை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளதுடன் பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவுள்ளதாக பிரதமர் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர், முதலில் யாழ்.நாகவிகாரைக்கு செல்லவுள்ளதுடன் பின்னர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள, கர்ப்பிணிகளுக்கு நிதி வழங்கும் நிகழ்விலும் கலந்து கொள்வார். 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அமைச்சுக்கு முன்னால் தொண்டராசிரியர் கவனயீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நீண்டகாலமாக தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றிவரும் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனத்தை வழங்குமாறுகோரி நேற்று வடமாகாண கல்வியமைச்சிற்கு முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப் பாட்டம் ஒன்றினை நடத்தியிருக்கின்றனர்.

காலை 10 மணி தொடக்கம் பி.ப 12.30 மணிவரை இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நீண்டகாலம் தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றிவரும் எமது நிரந்தர நியமனம் தொடர்பில் பல தரப்பினரிடமும், கோரிக்கை விடுத்தபோதும் அது தொடர்பில் பொறுப்பு வாய்ந்தவர்கள் எவ்விதமான நடவடிக்கை களையும் எடுத்திருக்கவில்லை.

இந்நிலையில் மற்றைய துறைகளில் 180 நாள்கள் வேலை செய்த தொண்டர் ஊழிய ர்களுக்கெல்லாம் நிரந்தர நியமனம் வழங்க ப்படும் நிலையில், தொண்டர் ஆசிரியர்கள் மட்டும் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டுக் கொண்டிருப்பதாக தொண்டர் ஆசிரியர்கள் குற்றஞ்சாட்டினர். (எ-11)

# நான்கு பொலிஸாரின் தண்டனையை உறுதி செய்தது உயர்நீதிமன்றம்

(கொழும்பு)

இரத்மலான, அங்குலான பிரதேசத்தில் இரண்டு இளைஞர்களை சுட்டுக்கொலை செய்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்டி ருந்த மரண தண்டனையை உயர்நீதிமன் றம் நேற்று உறுதிப்படுத்தியது.

அங்குலானை பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி உட்பட 4 பேருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண் டனை விதித்தது.

இந்த தீர்ப்பை எதிர்த்து இவர்கள் உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தனர்.

2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 வயதான தினேஷ் தரங்க பெர்னாண்டோ மற்றும் 26 வயதான தனுஷ்க அபோன்சு ஆகிய இளைஞர்களை அங்குலான பொலி ஸார் கைது செய்திருந்ததுடன் அவர்களை சுட்டுக்கொன்றனர்.

இந்த சம்பவம் தொடர்பான வழக்கு கொழு ம்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றதுடன் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக் கப்பட்டது.

அங்குலானை பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி பீ.டி. நியூட்டன், பொலிஸ் உத்தி யோகஸ்தர்களான இந்திரவங்ச குமாரசிறி, தம்மிக்க நிஹால் ஜயரத்ன, ஊர்காவற்படை வீரர் ஜனபிரிய சேனாரத்ன ஆகியோருக்கே இந்த மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், உயர்நீதிமன்றம் மரண தண்டனையை உறுதிப்படுத்திய தீர்ப்பை மேல் நீதிமன்ற நீதிபதி தேவிகா டி லிவேரா தென்னக்கோன் குற்றவாளிகள் முன்னிலை யில் அறிவித்தார். (எ-11)

# சம்பூர் காணிகளுக்கு ஏப்ரலில் விடுதலை

(திருகோணமலை)

கிழக்கு மாகாணத்தில் சம்பூரில் இராணு வக்கட்டுப்பாட்டிலுள்ள 800ஏக்கர் காணி களை விடுவிப்பதற்கு மீள்குடியேற்ற குழுவிற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவ தாவது,

கிழக்கு மாகாணம் திருகோணமலை யிலுள்ள சம்பூரில் இராணுவத்தின் கட்டுப் பாட்டிலுள்ள 818 ஏக்கர் பரப்பளவு கொண்ட காணிகளை விடுவிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இது தொடர்பான விசேட கூட்டமொன்று நேற்று முன்தினம் திருகோணமலையி லுள்ள ஆளுநர் அலுவலகத்தில் மீள்குடி யேற்ற மற்றும் இந்துசமய விவகார அமை ச்சர் டீ.எம். சுவாமிநாதன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதக் கடைசிக்குள் குறித்த காணிகள் விடுவிக்கப் படவுள்ளதாக தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், திருகோணமலை கடற்படையினரின் கட்டுப் பாட்டிலுள்ள 234 ஏக்கர் காணிகளையும் விடுவிக்கவுள்ளதாகவும் முடிவுசெய்யப்பட் டுள்ளது.

அதேவேளை கடந்த 23ஆம் திகதி யாழ். வலி.கிழக்கு பிரதேச எல்லைக் குட்பட்ட 233 ஏக்கர் காணிகள் ஜனாதிபதியினால் காணி உரிமை யாளர்களிடம் கைய ளிக்கப் பட்டமை குறிப்பிட த்தக்கது. (எ-11)

# புதிய அரசியல் கலாசாரம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இன்றைய அரசியல் முறைமை மற்றும் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டுக்கு புதிய அரசியல் கலாசாரத்தை அறி முகப்படுத்த வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் கலாசாரத்தின் ஆரம்ப கட்ட நடவடிக்கையாகவே, ஸ்ரீலங்கா சுதந்தி ரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரி பால சிறிசேனவை பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வைத்து அனைத்து தரப்பினரும் இணைந்து ஆதரவு வழங்கியதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாக வருவதற்கு முதல்முறையாக ஐக்கிய தேசி யக் கட்சி உதவியது எனவும் பிரதமர் கூறியு ள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி பிரதிநிதிகளுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்கும் வைபவத்தில் உரை யாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டு ள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வுக்கு ஆதரவு வழங்கிய ஸ்ரீ லங்கா சுதந் திரக் கட்சி அமைச்சரவையில் இணைந்து கொண்டமை மிக சிறந்த விடயமாகும்.

அரசாங்கத்துடன் இணையுமாறு அவர்க ளுக்கு கடந்த ஜனவரி மாதமே அழைப்பு விடுக்கப்பட்டது.

அதேவிதமாக சில கட்சிகள் அமைச்சுப் பத விகளை பெற்று அரசாங்கத்துடன் இணை ந்து செயற்படுவது போல், தேசிய நிறைவேற் றுச் சபையில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் இருக்கின்றன.

அனைவரும் மூன்று முனைகளில் இரு ந்து செயற்பட்டாலும் ஜனநாயகம் மற்றும் நல் லாட்சிக்காக செயற்பாடுகளை முன்னெடுப் பது மிக முக்கியமானது.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு பின்னர், அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு இது முன்பயிற்சியாக இரு க்கும். பொதுத் தேர்தலுக்கு பின்னர், முழு நாடா ளுமன்றத்தையும் அரசாங்கமாக மாற்றும் தேவை தனக்கிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியுள்ளார். (எ-11)


SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-455) (C-8284)

காணி விற்பனைக்கு
வரணி இடைக்குறிச்சியில் சில காணிகளும்,
வரணி வடக்கு வாழைத்தோட்டத்தில் இருந்து சொற்ப தூரத்தில் காணியும் விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
0757934132,
0212050862
(C-464)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



அமரர் முருகேசு - பாலசிங்கம்
(சந்தம்புளியடி - காரைநகர்)
அம்பிகையின் பாதத்தில் சரண் புகுந்தீர்கள்
ஆண்டுகள் இருபதுமுங்களை அஞ்சலித்தோம்
நம்பிக்கையோடு உங்கள் நினைவினை சுமப்பதனால்
நாளும் மகிழும் வேளையை நமக்களித்தீர்களப்பா
நினைவழியா நாட்களுடன்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
118/2, சிவராஜா அவெனியூ, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(C-461)


## இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
## யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்
## கல்வியாண்டு 2015/16

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் பின்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

| கற்கை நெறிகள் | அனுமதித் தகைமைகள் | மொழி | கற்கை நெறிக்கான காலம் | விண்ணப்பிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| சிங்கள மொழி கற்கைநெறி | 18 வயதினைப் பூரத்தி செய்த அனைவரும் இக் கற்கைநெறிக்கு விண்ணப் பிக்கமுடியும் | சிங்களம் | 1 வருடம் | 03.03.2015 - 31.03.2015 |
| தமிழ் மொழி கற்கைநெறி | 18 வயதினைப் பூர்த்தி செய்த அனைவரும் இக் கற்கை நெறிக்கு விண் ணப்பிக்க முடியும் | தமிழ் | 1 வருடம் | 03.03.2015 - 31.03.2015 |

இக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் பின்வரும் கற்கை நிலையங்களில் தற்போது விநியோகிக்கப்படுகின்றது.

| நிலையம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் | பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் | 021 - 2223374 |
| வவுனியா கற்கை நிலையம் | இல.366, கண்டிவீதி, தேக்கவத்தை, வவுனியா | 024 - 2222995 |
| கிளிநொச்சி கற்கை நிலையம் | 155ஆம் மைல்கல், கண்டிவீதி, கிளிநொச்சி | 021 - 2283970 |
| முல்லைத்தீவு கற்கை நிலையம் | ஆதிபராசக்தி அறிவியல் கல்லூரி, 4ஆம் வட்டா ரம், இரணைப்பாலைவீதி, புதுக்குடியிருப்பு | 076 - 6596615 |

மேலதிக விபரங்களுக்கு:
உதவிப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்,
பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியுடன்
தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

(சி-465)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்று சர்வதேச மகளிர் தினம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் சர்வதேச மகளிர் தின விழா இன்று வியாழக்கிழமை பி.ப 2மணிக்கு பிரதான மண்டபத்தில் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மகளிர் விவகார பிரதி அமைச்சர்திருமதிவிஜயகலா மகேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ்.கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய அதிபர் திருமதி சாந்தினி வாகீசனும் கலந்து கொள்ளவுள்ளனர். மகளிர் எனும் தொனிப் பொருளில்கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (இ-3)

### தேவை

அளவெட்டியில் இயங்கும் பலசரக்குக் கடை ஒன்றுக்கு அனுபவமுள்ள கணக்காளரும் விற்பனைப் பிரதிநிதியும் (Sales Man) தேவை.

தொடர்புகளுக்கு:- 077 2887617 (9884)

### வேலைவாய்ப்பு

வைத்திய நிலையம் ஒன்றுக்கு பயிற்சி பெற்ற தாதியும், பயிற்சி பெற விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும். ஓய்வுபெற்ற தாதி ஒருவரும் தேவை. (பகுதி நேரமாகவும் வேலை செய்யலாம்)

தொடர்புகளுக்கு:-0778730129 (9877)

### ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி




கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் நம்பகரமான சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). இலங்கையில் நாம் மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS வழங்குகிறோம். மொழி பெயர்ப்புகள். ஆசிரியர்கள்: யாழ். பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்). யாழ். வன்னி, மன்னாரைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் AF இல் படித்தே FRANCE, CANADA, SWITZERLAND... செல்கிறார்கள். O/L, A/L மாணவர்களுக்கு கட்டண குறைப்பு

DELF A1 International Diploma : வகுப்பு ஆரம்பமாகியுள்ளது. பரீட்சைக் கட்டணம் AF மாணவர்களுக்கு 3850 ஏனையோருக்கு 9900

உடன் அழைத்து புதிய வகுப்புகளுக்கு பதிவுசெய்யுங்கள்...

021 222 8093 61இ கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

கச்சேரி → புகையிரதக்கடவை → AF or ஆரியகுளம், ஸ்ரான்லி றோட் → றக்கா றோட; → AF (9898)

## அன்புவார ஒன்றுகூடல்

வடபிராந்திய ஸ்ரீ சத்தியசாயி நிறுவனங்களின் இணைப்புக்குழு நடத்தும் அன்புவார ஒன்றுகூடல் விழா எதிர்வரும்29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் இந்நிகழ்வில் சங்கானை சத்திய சாயி நிலையத்தினரின் நடனம், யாழ். மத்திய சாயி நிலையத்தினரின் மனித மேம்பாட்டுப் பாடல்கள்மற்றும்செஞ்சொற் செல்வர்கலாநிதிஆறு. திருமுருகன் வழங்கும்அன்புஎனும்தலைப்பிலான சிறப்புரையும் இடம்பெறவுள்ளது. (இ-5)

### மஹோற்சவம் 29ம் திகதி ஆரம்பம்

தாவடி அருள்மிகு ஸ்ரீஅம்பலவாண வேத விநாயகர் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினெட்டுத் தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது. (இ

### விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

விமானத்தில் வேலை செய்ய விருப்பமா? இது ஒரு அரிய சந்தர்ப்பம். தவறவிடாதீர்கள். விமான நிலையம் (தனியார் ) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை, சம்பளம் 18,000/=-35,000/= வரை தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும். (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள்.

(9901) 0766398366

### நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருமதி றூபவதி கேதீஸ்வரன்**

வாழிய வாழிய பல்லாண்டு
கிளிநொச்சி ஈன்ற பெண்ணாள்
குருவிச்சை இல்லா மனத்தாள்
பெருவிருப்புக் கொண்டு மண்ணை
பொலிவுறச் செய்தாய்! அன்னை!
சிறுகுறும்பு பொறுத்து நீயும் சிரிப்புடன்
பணிகள் செய்தாய்
அருமருந்தன்ன உன் சேவை
ஆற்றொழுக்காய் தொடரட்டும் உன்பணிகள்
ஆயிரம் மனங்கள் ஒன்றாய்
அணிதிரண்டு வாழ்த்தும் பெண்ணாள்
சீரிய நல்பணிகள் செய்த
மேன்மையுறு றூபவதி கேதீஸ்வரன்
தோரணம் போன்று வாழ்வை
துலங்கிட வைத்த அரசஅதிபர்
பணியினை வாழ்த்தி நிற்போம்
வாழிய! வாழிய! பல்லாண்டு

கரைச்சி பிரதேச கிராம,
மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம்,
கரைச்சி கிளிநொச்சி
(462)

### வாழ்த்துகின்றோம்



**திருமதி நளினி அகிலதாஸ் B.Ed, M.Ed**
முதன்மை ஆசிரியர் [ஆரம்பக்கல்வி]
யாழ்ப்பாணக் கல்வி வலயம்

தேசிய கல்வி நிறுவனத்தால்
பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில்
இன்று 26.03.2015 இல் நடைபெறும்
பட்டமளிப்பு விழாவில்
"முதுகல்விமாணிப்பட்டம்" பெறுவதையிட்டு
மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- அ.புருசோத்மன்- பொறியியல் பீடம்,மொறட்டுவ,
அ.விமோசனன்- பொறியியல் பீடம், மொறட்டுவ,
அ.சங்கீதன்- யாழ்.இந்துக் கல்லூரி

### அறிவித்தல்

01. மாநகரசபை எல்லைக்குள் வீதியோரங்களில் வியாபாரம் செய்வது 31.03.2015 ஆம் திகதி முதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

02. பண்டிகைக்காலங்களின் போது தற்காலிக வியாபாரங்களுக்கு தமது ஆதனங்களினை வாடகையடிப்படையில் வழங்கும் உரிமையாளர்கள் பின்வரும் விடயங்களை கருத்திற் கொள்ள வேண்டும்.

* வாடகைக்கு விடப்படும் ஆதனம் வர்த்தக நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுவதற்கான சோலைவரியினை செலுத்துதல் வேண்டும்.
* பெறப்பட்ட கட்டட அனுமதியில் குறிப்பிடுரைக்கப்பட்ட நோக்கத்திற்கு புறம்பாக பயன்படுத்தப்படுமாயின் மாநகர சபையின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும்.
* வாடகை பெறுவோர் மாநகர சபையின் வியாபார அனுமதிப்பத்திரத்தினை பெறுதல் வேண்டும்.

மீறுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
(சி-457)

## இராசி பலன்

26.03.2015
(பங்குனி 12, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.13 மணிக்கு
சஷ்டி காலை 6.27 மணிவரை
ரோகிணி முற்பகல் 7.00 மணிவரை
இராகுகாலம் 1.45-3.15 மணிவரை
சுபநேரம் 7.45-9.15 மணிவரை

வளவன்

**மேடம்:** தேவையற்ற சங்கடங்கள் ஏற்படலாம், போசன சுகக்குறைவான நாள், எடுத்த காரியங்களில் தாமதம் உருவாகும், செலவுகள் அதிகரிக்கும் நாள், சயனசுகக் குறைவான நாள்.

**இடபம்:** வெற்றிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சயன சுகமுண்டு,ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்:** சோம்பலை விலக்குவது நல்லது, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், புதிய திருப்பங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்புடலாம், சயன சுகக் குறைவான நாள்.

**கடகம்:** புதிய பொருட்சேர்க்கையுண்டு, முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், உற்சாகமான நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, பொதுவாழ்வில் புகழ்கூடும்.

**சிம்மம்:** பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், ஆரோக்கியமான நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் நாள், போசன சுகமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

**கன்னி:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும் நாள், எடுத்த செயலை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, புதிய திட்டங்கள் கைகூடும்.

**துலாம்:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டியநாள், செலவுகள் அதிகரிக்கும், எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும்.

**விருச்சிகம்:** மனோதைரியம் கூடும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**தனுசு:** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், ஆரோக்கியமான நாள், சுவாரஸ்யமான நாள், செய்தொழிலில் சிறப்புகள் வந்துசேரலாம், காரிய நன்மையுண்டு.

**மகரம்:** அஜீரணம் சம்பந்தப்பட்ட ரோகங்கள் ஏற்படலாம், தாழ்ந்த சுப[illegible]வமுண்டு, எடுத்த காரியத்தில் சில இடையூறுகள் ஏற்படலாம், அதி[illegible]காரிகளின் ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**கும்பம்:** மனச்சஞ்சலங்கள் கூடும் நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, ரோகபயமுண்டு, நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்:** நற்கீர்த்தியுண்டு, மனோதைரியம் கூடும், எடுத்த காரியம் எளிதில் கைகூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு, தனவரவு திருப்தி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 169

## பயத்தை எதிர்கொள்ளல்

...நீங்கள் உங்கள் வாழ்க்கையின் ஒரு கணத்தைக்கூட ஒரு போதும் முழுமையாக வாழ்ந்ததில்லை.

நீங்கள் எப்பொழுதுமே கடந்த காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோதான் வாழ்ந்திருக்கிறீர்கள். இதைத்தான் எல்லைக்குள் வாழ்வதில்லை என்கிறோம். அதனால்தான் இறக்கும் தருவாயில் நீங்கள் வேறெதிலோ ஆழ்ந்து நிறைவு பெறாமலும் செல்வதற்கு விருப்பமில்லாமலும் இருக்கிறீர்கள். அதனால்தான் மரணத்தைக் கண்டு அஞ்சுகிறீர்கள்.

நீங்கள் விழிப்புணர்வுடன் இறப்பதைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய தேவை என்ன என்று கேட்கக் கூடும். நான் சொல்கிறேன்.... மரணத்தைப் பற்றி நீங்கள் தெரிந்துகொண்டால் மட்டுமே, உங்களால் வாழ்க்கையைப் பற்றி சரியான புரிந்துகொள்ளுதலுடன் வாழ முடியும். இல்லாவிடில் நீங்கள் வாழ்க்கையை சரியான முறையில் வாழ மாட்டீர்கள்.

வாழ்க்கையில் நீங்கள் எல்லாவற்றையும் தள்ளிப் போட்டுக் கொண்டே இருக்கிறீர்கள். உங்கள் சந்தோஷத்தை தள்ளிப்போடுகிறீர்கள், உங்கள் வேலையைத் தள்ளிப் போடுகிறீர்கள்; எல்லாவற்றையுமே நாளைக்குத் தள்ளிப் போட்டு விடுகிறீர்கள். நாளை என்பதும் இன்று என்ற ரூபத்திலேயே வரும் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண் டும்! அது இன்றாக வரும்பொழுது நீங்கள்



மீண்டும் நாளைக்கு என்று சொல்லி விடுகிறீர்கள்! அது நீங்களே உங்களுடன் விளையாடிக்கொள்ளும் ஒரு விளையாட்டு.

இறுதியில் மரணம் வரும்பொழுது நீங்கள் தயாராக இல்லை! நீங்கள் நிறைய செய்ய வேண்டியது இருப்பதாக நினைக்கிறீர்கள். வாழ்க்கையே உங்களை ஏமாற்றிவிட்டதாக நினைக்கிறீர்கள். உண்மை என்னவென்றால் இவ்வளவு காலமாக நீங்கள்தான் உங்களை ஏமாற்றிக் கொண்டிருந்தீர்கள். இறுதியில் எல்லாவற்றிற்கும் பழியை வாழ்க்கையின் மீது போடுகிறீர்கள். அதனால்தான் நீங்கள் வாழ்வதற்கு மரணத்தைப் பற்றிய ஒரு தெளிவான புரிந்துகொள்ளுதல் வேண்டும் பிறகு எந்தவிதமான ஏமாற்றிக்கொள்ளுதலும் இல்லாமல் காலம் வரும்பொழுது நீங்கள் இறப்பதற்குத் தயாராகவே இருப்பீர்கள்.

இந்த தள்ளிப்போடும் மனப்பான்மையால் நாம் வாழ்க்கையில் பல விட யங்களை இழந்திருக்கி றோம். மக்கள் என்னிடம் கேட்கிறார்கள், ஸ்வாமிஜி உங்களால் எப்படி இவ்வளவு குறுகிய காலத்திற்குள் இவ்வளவு விடயங்களைச் செய்ய முடிகிறது? என்னுடைய வருடாந்திர காலண்டரைப் பார்த்து அவர்கள் வியப்பில் ஆழ்கிறார்கள்!

வருடம் முழுவதும் உலகம் முழுவதும், பல்வேறு விடயங்கள் நடந்து கொண்டிருப்பதைப் பார்த்து அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். நான் சொல்கிறேன். அது மிகவும் எளிமையானது. நான் நிகழ்காலத்தில் முழுமையாக வாழ்கிறேன். உங்களைப் போலத் தள்ளிப்போடுவதில்லை.

உங்களுடைய இந்த எதையும் தள்ளிப்போடும் போக்கு உங்களை வெறுமனே ஒரு இழப்பவரைப் போல எண்ண வைக்கிறது. ஆனால் இழப்பவரைப் போல உணர்ந்தால் நீங்கள் தள்ளிப்போடா மல் இருக்க எந்த முயற்சியும் எடுப்பதில்லை.

*(தொடரும்)*

பரமஹம்ஸ சுவாமி



# அதிசய உலகம்

சிலுவை காயங்களுடன் பிறந்த அதிசயக் குழந்தை!
மீண்டும் பிறந்த இயேசு கிறிஸ்து என பரபரப்பு!

பிலிப்பைன்ஸ் நாட்டில் பிறந்த குழந்தை ஒன்று கைகள் மற்றும் பாதங்களில் சிலுவை காயங்களுடன் பிறந்திருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிலிப்பைன்ஸின் குவென்சன் நகரில் கடந்த மார்ச் 15 ஆம் திகதி, குழந்தை ஒன்று கைகள் மற்றும் பாதங்கலில் தழும்புகளுடன் பிறந்தது. இந்த தழும்புகளை உற்று கவனித்த போது அது இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்த போது இருந்த தழும்புகளை ஒத்ததாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அதோடு குழந்தையின் நெற்றியிலும், முள் கிரீடம் வைக்கப்பட்டிருந்தது போலான தழும்பு காணப்பட்டது.

இந்த செய்தி மருத்துவமனை எங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த செய்தி அறிந்த கிறிஸ்துவர்கள் சிலர் இந்த குழந்தை இயேசு கிறிஸ்துவின் அடுத்த பிறவி என்றுக் கூறினர்.



சிறுது நேரத்தில், குவென்சென் நகரம் முழுவதும் இந்த செய்தி பரவியது. இதனை அடுத்து, கிறிஸ்துவ நம்பிக்கையாளர்கள் பலர் ஒன்று திரண்டு, ஜெஹோமர் கேஸ்டெலியோ என்ற பெயர் வைக்கப்பட்டிருந்த அந்த அதிசய குழந்தையை வந்து பார்த்தனர். மேலும், 1000க் கணக்கானோர் மருத்துவமனையில் குழுமி, பூமிக்கு மீண்டும் வந்ததற்கு நன்றி என்றும், வருக ஜெஹோமர் என்றும் கூறி பிரார்த்தனைகள் செய்தனர்.

இது குறித்து, மருத்துவர், மெர்லின் குரூஸ் கூறுகையில், குழந்தை பிறக்கும் போதே புர்புரா என்ற ஒருவகை குறைபாட்டுடன் பிறந்ததாக தெரிவித்தார். இந்த உடலில் உள்ள இரத்தம் ரத்த நாளங்களிலிருந்து வெளியேறி தோல் வழியாக வெளியில் தெரிவதுதான் இந்த புர்புரா என்றும், ஆனால் இந்த குழந்தை விடயத்தில் அது எப்படி சரியாக, கைகள், பாதங்கள் மற்றும் நெற்றியில் சரியாக அமைந்தது என்பது விச்சித்திரமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். குழந்தைக்கு தற்போது தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அதேவேளை குழந்தையை உலகம் முழுவதும் இருக்கும் கிறிஸ்துவ நம்பிக்கையாளர்கள் தெய்வீகக் குழந்தையாகவே பார்க்கின்றனர்.



# சமைப்போம் சுவைப்போம்

## உருளைக்கிழங்கு முறுக்கு



**தே.பொருட்கள்:**

அரிசி மா-1 கப்
உருளைக்கிழங்கு - 1
வெண்ணெய் -1 1/2 டேபிள் ஸ்பூன்
சீரகம் -3/4 டீஸ்பூன்
உப்பு -தே.அளவு
எண்ணெய் -பொரிப்பதற்கு தே.அளவு
தண்ணீர் -தே.அளவு

**செய்முறை:**

முதலில் உருளைக்கிழங்கை குக்கரில் போட்டு, தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்து 5 விசில் விட்டு இறக்கி குளிர வைக்க வேண்டும். பின் அதன் தோலை நீக்கவிட்டு, அதனை மிக்ஸியில் போட்டு நன்கு மென்மையாக அரைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் ஒரு பாத்திரத்தில் அரிசி மா, வெண்ணெய், சீரகம், பெருங்காயத் தூள், தே.அளவு உப்பு மற்றும் உருளைக்கிழங்கு பேஸ்ட் சேர்த்து கலந்துகொள்ள வேண்டும்.

பின்பு அதில் சிறிது சிறிதாக தண்ணீர் ஊற்றி, நன்கு மென்மையாக முறுக்கு மா பதத்திற்கு பிசைந்துகொள்ள வேண்டும்.

அடுத்து ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்கு தே.அளவு எண்ணெய் ஊற்றி சூடேற்ற வேண்டும். எண்ணெயானது சூடாவதற்குள், ஒரு தட்டில் துணியை விரித்துக் கொண்டு பின் முறுக்கு அச்சை எடுத்து, அதனுள் எண்ணெய் தடவி, அதனுள் சிறிது முறுக்கு மாவை வைத்து தட்டின் மேல் முறுக்கு போன்று சுற்ற வேண்டும். பின் அதனை எண்ணெயில் போட்டு பொன்னிறமாக பொரித்து எடுக்க வேண்டும். இதே போன்று அனைத்து மாவையும் முறுக்குகளாக சுட்டு எடுக்க வேண்டும். இப்போது சுவையான மற்றும் மொறுமொறுப்பான உருளைக்கிழங்கு முறுக்கு ரெடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகங்கள் படையெடுக்கும் இரத்தினபுரி கிராமம்

[illegible] கிராமத்தின் கடந்த சில நாட்களாக அதிகளவில் பாம்புகள் படையெடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில நாட்களாக கிரா மத்தின் பல்வேறு பகுதிகளில் நாகபாம்புகளை பொதுமக்கள் அவதானித்துள்ளனர்.

நிலைமை எல்லை மீறி போன தைத் தொடர்ந்து தமக்கு உதவு மாறு பொலிஸா ரின் உதவியை யும் நாடியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பாம்புக ளைப் பிடிக்கும் இளைஞன் ஒருவனை பொலி ஸார் அப்பகுதி க்கு வரவழைத்துள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

குறித்த இளைஞன் கடந்த 3 தினங்களில் 10 நாகங்களை பிடித்துள்ளார். இவர் பிடித்த நாகங் கள் ஒவ்வொன்றும் 5 முதல் 6 அடி நீளமானவையென தெரிவிக்கப்படுகின்றது. அவ்விளைஞன் நாகமொன்றினைப் பிடிக்கும் காட்சியும் கைய டக்கத் தொலை பேசியொன்றில் பதிவாகியுள்ளது. (இ)

# மகிந்த ராஜபக்ஷவை றோ தோற்கடிக்கவில்லையாம்!

## தமிழிசை மறுப்பு

**(சென்னை)**

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இந்தியப் புலனா ய்வு அமைப்பான 'றோ' தோற்கடித்ததாக கூறப்பட்டுள்ள குற்றச் சாட்டை மறுத் துள்ள பா.ஜ.க.வின் தமிழக மாநிலத் தலைவர் தமி ழிசை சௌந்தரராஜன், தமிழகத் தமிழர்கள் கொண்டிருக்கும் அனைத்து உரிமைகளையும் இலங்கை தமிழர்கள் கொண்டி ருக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.**

தொலைபேசியின் மூலம் இல ங்கையின் ஆங்கில இணைய த்தளத்துக்கு அளித்த செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜப க்ஷவை இந்திய புலனாய்வு அமைப்பான றோ தோற்கடித்ததாக சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டை அவர் மறுத்தார். மாற்றத்தை கோரிய தமிழர் களும் இந்தியாவில் ஏற்பட்ட அரசாங்க மாற்றமுமே மகிந்தவை தோற்கடித்தன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை யின் புதிய அரசாங்கத்தை பொறுத்த் வரையில் அது நல்லெண்ண நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றது. இந்த நிலையில் தமிழர் பிரச்சினையை தீர்க்காது போனால் அந்த நாடு பிரச்சினைகளை எதிர் நோக்க வேண் டியிருக்கும் என்றும் தமிழிசை தெரிவித்தார்.

இந் தியாவின் முன்னைய காங்கிரஸ்அர சாங்கம் 13 ஆம் அரசியலமைப்பு தொடர்பில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வில்லை என்றும் அவர் குற்றம் சுமத்தியுள் ளார். (இ-5)

## பிரதமர் பதவிக்கு ரணில் பொருத்தமானவரில்லை

(கொழும்பு)

100 நாள் வேலைத் திட்டத்தின் நோக் கங்களை நிறைவேற்றுவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொருத்தமானவர் இல்லை என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வானொலி நிகழ் வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஜாதிக ஹெல உறும யவின் ஊடக பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் பதவிக்கு பொருத்தமான ஒரு வரை நியமிக்குமாறும், அத்துரலிய ரத்ன தேரர் அல்லது மாதுளுவாவே சோபித தேரர் ஆகிய இருவரில் ஒருவரே அப்பதவிக்கு பொருத்தமானவர் எனவும் அவர் கூறி யுள்ளார்.

மேலும் தேர்தல் முறைமையினை இவ் வளவு விரைவாக மாற்றுவது அவசியமா என வும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (இ-5)

## உள்ளூராட்சி சபைகளின் காலத்தை நீடிக்க கோரல்

(கொழும்பு)

எதிர்வரும் 31 ஆம் திகதியு டன் நிறைவ டையவுள்ள உள்ளூ ராட்சி மன்றங்களின் நிர்வாக காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீடி க்கு மாறு ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்ட மைப்பினால், உள்ளூராட்சி துறை அமைச்சரி டம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் செயலாளர், முன்னாள் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த விடுத்துள்ள அறி க்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள் ளது.

இந்த காலப்பகுதியில் எல்லை நிர்ண யங்கள் தொடர்பாக வர்த்த மானி அறிவித் தல் விடுக்கப்பட்டு, புதிய முறைக்கு அமைய உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை நடத்த தேர் தல்கள் திணைக்களம் வாய் ப்பு வழங்க வேண்டும் என கோர ப்பட் டுள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தல்க ளுக்காக தேர்தல் தொகுதி மற்றும் விகிதாசார முறையை அறிமுகப்ப டுத்துவதற்கும், விருப்பு வாக்கு முறையை இரத்து செய்வது தொட ர்பிலும் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (இ-5)


### ஒய்வூதியர்களுக்கான கடன் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் பான் ஏஷியா வங்கி யாழ்ப்பாணக்கிளை

**ஓய்வூதியர்களுக்கான கடன் வசதியின் சலுகைகள்**

- கடனைப் பெற்றுக்கொள்ள பிணைகள் தேவையில்லை.
- ரூ. 1,000,000/- வரை கடன் தொகை
- 7 வருட மீள செலுத்தும் காலம்
- 70 வயது வரை கடனை மீள செலுத்தக் கூடிய வசதி
- கடனைப் பெறுபவருக்கு மரணம் சம்பவிக்கும் போது குடும்பத்தினருக்கு கடன் சுமையை வழங்காமல் காப்புறுதியினால் கடன் தொகை விலக்களிக்கப்படும் மேலும் பின்னுரித்தாளருக்கான விசேட பணச்சலுகைகள் (ரூ. 100,000/- கடனிற்கு கடன் காப்பீட்டிற்காக ரூ. 602/- மட்டுமே)

**ஓய்வூதியர்களுக்கான சிறப்பு சேமிப்புக் கணக்கின் மேலதிக சலுகைகள்**

- உங்கள் விசேட சேமிப்புக் கணக்கிற்கு கவர்ச்சிகரமான வட்டி
- VISA குறி உள்ள எந்தவொரு ATM இலும் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் வசதி
- தனிப்பட்ட சேமிப்புப் புத்தகம் வழங்கப்படும்
- ரூ. 200/- ஆரம்ப வைப்பாக வைப்புச் செய்து கணக்கை ஆரம்பிக்க முடியும்
- இச்சலுகை ரூ. 10,000/- திற்கு அதிகமாக மாதாந்த ஓய்வூதியத் தொகையை பெற்றுக்கொள்பவர்களுக்கு வழங்கப்படும்
- ஓய்வுபெற்ற வங்கி ஊழியர்களும் இச்சலுகையினை பெறமுடியும்
- விதவை ஓய்வூதியப்பணம் பெறுபவர்களும் இச்சலுகையினை பெறமுடியும்

இந்த கடன் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 29.03.2015 (ஞாயிறு) காலை 10.00 மணிக்கு யாழ் வைத்தீஸ்வரா கல்லூரி, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தில் (வண்ணார் பண்ணை சிவன் கோவில் அருகாமையில்) நடைபெறவுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு,
**PAN ASIA BANK PLC.**
பான் ஏஷியா வங்கி
570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**தொலைபேசி இல.**
021- 4925118 / 021- 4976777 / 021- 4925119

Company Reg. No. PQ 46

www.sarva.lk

பான் ஏஷியா வங்கி



### யா / யாழ் மத்திய கல்லூரி
### பழைய மாணவர் சங்கம் - யாழ்ப்பாணம்

**வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2015**

| | | |
|---|---|---|
| தலைமை | : | திரு.என்.தமிழழகன் (பழைய மாணவர் சங்கம் - யாழ்ப்பாணம்) |
| காலம் | : | 11.04.2015 சனிக்கிழமை |
| நேரம் | : | முற்பகல் 9.30 மணிக்கு |
| இடம் | : | றொமைக்குக் மண்டபம் |

**நிகழ்ச்சி நிரல்**

- இறைவணக்கம்
- வரவேற்புரை
- தலைமையுரை
- அதிபர் உரை
- சென்றவருட பொதுக்கூட்ட அறிக்கை
- செயற்பாட்டறிக்கை
- கணக்கறிக்கை
- பிரேரணைகள் (இருப்பின்) சமர்ப்பித்தல்
- புதிய நிர்வாகசபைத் தெரிவு
- வேறு விடயங்கள்
- நன்றியுரை
- கல்லூரிக் கீதம்

அங்கத்தவர்கள் அனைவரையும், தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு : பிரேரணைகள் இருப்பின் கீழ்க்காணும் முகவரிக்கு எதிர்வரும் 02.04.2015 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

பழைய மாணவர் சங்கம்,
யாழ்.மத்திய கல்லூரி
யாழ்ப்பாணம்.

திரு.பா.பிரதீபன்
செயலாளர்

"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 61 பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம்


வடமாகாண விவசாய அமைச்சுக்கு உட்பட்ட விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் அமைய அடிப்படையில் பணியாற்றிய 61 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்ச்சி திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு நிரந்தர நியமனம் பெற்றவர்களுக்கு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் உரையாற்றும் போது,


வடமாகாண விவசாயத் திணைக்களத்துக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணியின் எண்ணிக்கை 510. ஆனால், 361 பேரே தற்போது சேவையில் உள்ளனர். இன்னும் 149 வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்துக்கென அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் எண்ணிக்கை 571. ஆனால் 315 பேர் மட்டுமே பணியில் உள்ளனர். 256 பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இதே போன்று, நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 124 வெற்றிடங்களும், கூட்டுறவு திணைக்களத்தில் 40 வெற்றிடங்களும் நிரப்பப் படாமல் உள்ளன.

ஆளணிப்பற்றாக்குறைவு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குப் பாரிய தடையாக இருப்பதாகவும், இவற்றை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை திணைககளத் தலைவர்களும் அமைச்சின் செயலாளரும் மேற்கொண்டுவருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (இ)




# அரசியல் கைதிகளினை நிபந்தனையின்றி விடுதலை செய்யக்கோரி யாழில் பேரணி!

## லலித், குகன் குறித்து துண்டுப்பிரசுரமும் விநியோகம்



(யாழ்ப்பாணம்)

**கடத்தப்பட்டு காணாமல் போகசெய்யப் பட்டோரின் விபரத்தை வெளியிட கோரியும் அரசியல் கைதிகளினை நிபந்தனையின்றி விடுதலை செய்யக்கோரியும் யாழ்.பேருந்து நிலையத் தில் நேற்றைய தினம் பேரணியும் துண்டுப் பிரசுரம் விநியோகித்தலும் இடம்பெற்றுள்ளது.**

இப்போராட்டத்தினை முன்னிலை சோஷலிச கட்சியினர் முன்னெடுத்திருந்ததோடு போராட்டத்தில் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான அஜித்குமார உட்பட கட்சியின் அமைப்பாளர்கள் ஆதரவாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

யாழ்.பேருந்து நிலையம் முன்பாக காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட டம் ஆஸ்பத்திரி வீதி வழியாக பேரணியாக சென்று, தருவதாகக்கூறிய ஜனநாயகம் எங்கே? லலித்.குகன் எங்கே? என தலைப்பிடப்பட்ட துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டிருந்தன.

அத்துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,உங்களுக்கு தெரியும் கடந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் நாம் அனைவரும் கடுமையான துன்பங்களினை எதிர்நோக்கியிருந்தோம். தூக்குத்தண்டனை கடத்தல்,காணாமலாக்குதல், கைது, கொலை இவற்றுள் முழு நாடும் சிக்குப்பட்டிருந்தது. இப்படியான பல சம்பவங்களுக்கு மத்தியில் லலித், குகன் ஆகியோர் கடத்தப்பட்டமை பலத்த எதிர்ப்புக்குள்ளான பிரச்சினையாகும்.

யுத்தம் முடிவடைந்த பின்னரும் லலித்,குகன் வடக்கிற்கு வந்ததும் கிழக்கிற்கு சென்றதும் கஷ்டப்படுகின்ற மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பதற்கேயாகும். குகன் அது சம்பந்தமாக நம்பிக்கை கொண்டு லலித்துடன் சேர்ந்து கொண்டார்.கடந்த மூன்றரை வருடங்களுக்கு முன்னர் அதாவது கடந்த 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதியன்று கடத்தப்பட்டார்கள்.

இன்னும் இந்த ஆட்சியாளர்களினால் லலித், குகனுக்கு என்ன நடந்தது என்று எந்த தகவலையும் தெரிவிக்க முடியவில்லை. லலித் குகன் மட்டுமல்ல கடத்தப்பட்ட பலர் என்ன ஆனார்கள் என்று இதுவரை எந்த வித தகவலையும் அரசாங்கம் வெளியிடவில்லை. அவர்களது குடும்பத்தினர் தங்களது பிள்ளைகளின் வருகையை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கின்றார்கள். கடந்த காலங்களில் வடக்கிலும் தெற்கிலும் நடந்த கடத்தல் மற்றும் கொலை சம்பவங்கள் தொடர்பில் இன்னும் எவ்வித தகவலினையும் புதிய அரசாங்கம் இதுவரையிலும் வெளியிடவில்லை.

புதிய அரசாங்கம் ஜனநாயகம் தருவதாக கூறிக்கொண்டு வந்த போதிலும் இதுவரையிலும் இப்பிரச்சனைகளுக்கு எந்த தீர்வையும் எட்ட அரசாங்கத்தினால் முடியவில்லை.

எனவே நாட்டிற்கு ஜனநாயகம் தருகின்றோம் என்று சொன்ன புதிய அரசாங்கம் இன்னும் ஜனநாயகத்தை கொடுக்கவில்லை தருகின்றோம் என்று கூறி மக்களை ஏமாற்றி வருகின்றார்கள். அதனால் மக்களின் ஜனநாயக உரிமையை பெற்றுக்கொள்வதற்கு மக்கள் அதிகாரம் அவசியம்.

மக்கள் சக்தி அவசியம் இடதுசாரிய சக்தி அவசியம்.வடக்கிலும் தெற்கிலும் ஒன்று சேர்ந்து கட்டியெழுப்பவுள்ள பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் சக்தி அவசியமாகும். லலித் ,குகன் போராடியது இந்த இலக்குகளிற்காகவே. லலித்,குகனை கடத்திய ஆட்சியாளர்களுக்கு அவர்களை விடுதலை செய்ய வலியுறுத்துவதுடன் அவர்கள் கேட்டுக்கொண்ட இலக்குகளையும் இணைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (இ-4)




## மெய்வல்லுநர் போட்டி நாளை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் வி.கருணலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கல்வியமைச்சின் ஆசிரியர் கல்வி நிர்வாக பிரதம ஆணையாளர் எல்.எம்.டி.தர்மசேன பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய கணக்காளர் கே.பிரதீபனும் கௌரவ விருந்தினராக இ.எஸ்.பி. நாகரட்ணமும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## மரண தண்டனை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

சக இராணுவ வீரரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற இராணுவ வீரருக்கு 14 வருடங்களின் பின்னர் யாழ்.மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

சாவகச்சேரியில் கடந்த 2001 ஆம் ஆண்டு இடம் பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பிலேயே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐந்தாம் திகதியன்று சாவகச்சேரியில் அமைந்திருந்த இராணுவ முகாம் ஒன்றில் துப்பாக்கி வெடிச்சத்தம் திடீரென கேட்டுள்ளது. இத்துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பில் சக இராணுவ வீரர்கள் ஒன்று கூடி தேடிய போது குறித்த முகாமில் பாலராஜகே ஜீவந்த ஜெயோமி பாலராஜ் என்ற இராணுவ வீரர் ஒருவர் துப்பாக்கி சூட்டு காயத்துடன் உயிரற்ற நிலையில் வீழ்ந்து கிடந்துள்ளார்.

குறித்த உயிரிழப்பு சம்பவம் தொடர்பில் ஆரம்பத்தில் தற்கொலை என கூறப்பட்ட போதிலும் குறித்த முகாமில் இருந்த மற்றுமொரு இராணுவ வீரரான சில்பத்சாரி நிகதிகே ஜயந்த ரூபசிறி என்பவரின் துப்பாக்கியில் உள்ள வேட்டுக்கள் குறைவுற்று காணப்பட்டுள்ளன. இதன் அடிப்படையிலும் ஏனைய சந்தேகங்களின் அடிப்படையிலும் குறித்த கொலைக்கு காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டிருந்தார்.

பின்னர் குறித்த இராணுவ வீரர் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பல வருடங்களுக்கு மேலாகவும் வழக்கும் நடைபெற்றும் வந்துள்ளது. இந்நிலையில் குறித்த வழக்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய யாழ. மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டு வழக்கு நடைபெற்று வந்துள்ளது.

இவ்விசாரனைகளின் போது குறித்த கொலைச்சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி குற்றம் சாட்டப்பட்ட இராணுவவீரரின் துப்பாக்கி என நிரூபணம் ஆனதோடு ஏனைய குற்ற சான்றுகளும் நிரூபணம்செய்யப்பட்டன.எனினும் குற்றம் சாட்டப்பட்ட சந்தேகநபர் தான் குடித்து விட்டு மதுபோதையில் இருந்ததாகவும் அதனால் தன்னுடைய துப்பாக்கியினை பயன்படுத்தி வேறு சிலர் இக்குற்றத்தினை புரிந்திருக்கலாம் எனவும் கூறிவந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த கொலை தொடர்பான வழக்கு விசாரணைகள் முடிவுற்று யாழ்.மேல் நீதிமன்றில் நேறறு முன்தினம் தீர்ப்பிற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போது குறித்த இராணுவ வீரர் மீதான கொலைக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே குறித்த கொலை குற்றவாளியான இராணுவ வீரருக்கு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட குறித்த இராணுவ வீரர் தனது குற்றத்தினை இறுதி வரை மறுத்ததோடு தனக்கு இரண்டு பிள்ளைகளும் மனைவியும் இருப்பதாகவும் அதனடிப்படையில் தான் ஜனாதிபதியிடம் பொது மன்னிப்பை கோரவுள்ளதாகவும் மன்றில் தனது இறுதி விருப்பத்தினை நீதிபதியிடம் தெரியப்படுத்தினார். குற்றவாளியின் இறுதி விருப்பத்தின் பேரில் பொது மன்னிப்பு கோரலிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (இ-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசின் நன்மதிப்பை சீர்குலைக்க சூழ்ச்சி!

## ஜோன் அமரதுங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அரசாங்கத்தின் நன்மதிப்பை சீர்குலைக்க சூழ்ச்சித் திட்டம் தீட்டப்படுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க குற்றம் சாட்டியுள்ளார். இதேவேளை பல்வேறு வழிகளில் அரசாங்கத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.**



பல இடங்களிலிருந்து உடற்பாகங்கள் மீட்கப்படுதல் தொடர்பில் எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நன்மதிப்பை சீர்குலைக்கும் நோக்கிலேயே இவ்வாறு செய்யப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எங்கள் பக்கத்திலிருந்து இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறவில்லை.

எதிர்க்கட்சியினர் தரப்பிலிருந்து இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் கொலை செய்யப்பட்டமை குறித்து விசாரணை நடத்துகின்றோம்.


17ஆம் திருத்தச் சட்டம்இ ரத்து செய்யப்பட்டமை பாரிய பிரச்சினையாக அமைந்துள்ளது.

19ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக மீண்டும் சுயாதீன ஆணைக்குழுக்கள் நிறுவப்பட உள்ளன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களுடன்ஒப்பீடு செய்யும்போது தற்போது மிகவும் சொற்பளவிலான சம்பவங்களே இடம்பெற்றுள்ளன என ஜோன் அமரதுங்க நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.(இ-5)

# பொதுத் தேர்தலில் போட்டியிட தயாராகுகிறார் மாலக சில்வா

(கொழும்பு)



எதிர்காலத்தில் அரசியலுக்கு நிச்சயம் வருவேன் என முன்னாள் அமைச்சர்மேர்வின்சில்வாவின்மகன் மாலக சில்வா தெரிவித்துள்ளார்.

இரவு விடுதியில் வெளிநாட்டு பெண் ஒருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் கொழும்பு நீதிமன்றத்திற்கு வருகை தந்த போது, ஊடகத்திடம் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தனக்கு தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பை வழங்குவதற்கு அனைத்து கட்சிகளும் ஆயத்தமாக உள்ளதாகவும் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்கும் தானும் ஆயத்தமாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இரவு நேர விடுதிகளுக்கு சென்றதனால்தான் பிரச்சினைகளில் சிக்கிக்கொண்டுள்ளேன். அதை தவிர வேறு அரசியல்வாதியை தாக்கியதும் இல்லை, தேர்தல் மேடைகளை தாக்கியதும் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷவையும, சந்திரிகாவையும் தான் மதிப்பதாக மாலக சில்வா தெரிவித்தார்.(இ-5)

# பதவியுயர்வு கிடைத்தாலும்கூட அரசியலை விடப்போவதில்லை

நான் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடுவேன் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தனக்கு கிடைத்துள்ள புதிய உத்தியோகபூர்வ சீருடையின் கௌரவத்தை பேணும் வகையில் அரசியல் வாழ்க்கையில் ஈடுபடுவேன் அவர் தெரிவித்தார்.

மேலும் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் பட்சத்தில் அதற்கு எதிராக முன் நிற்பதாகவும், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதேவேளை கிழக்கு மாகாணத்திலும் ஜனநாயக கட்சியை கொண்டு செல்வதற்கு தீர்மானித்துள்ளதாக சரத் பொன்சேகா அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு விசேட கருத்தரங்கு

எமது திணைக்களத்தினால் வருடந்தோறும் நடத்தப்படும் அறநெறி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இவ்வாண்டும் கண்டி, மாத்தளைஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி வரை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குரிய கற்பித்தல் நெறி முறைகள், யோகாசனம், பண்ணிசை மற்றும் கதை சொல்லுதல் போன்ற நெறிமுறைகள் ஆசிரியர்களுக்குக் கற்பிக்கப்படவுள்ளன. மேற்படி கருத்தரங்கில் கண்டி, மாத்தளையைச் சேர்ந்த சகல அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றேன். கலந்து கொள்ள வுள்ள ஆசிரியர்களுக்கு தங்குமிட வசதிகள், உணவு வழங்கல்,காகிதாதி உபகரணங்கள் ஆகியன சகல வசதிகளும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

மேலும் கருத்தரங்கின் முடிவில் கலந்து கொண்டமைக்கான சான்றிதழ்களும் ஆசிரியர்களுக்கானநூல்களும் சீருடைகளும் வழங்கப்படவுள்ளன என்பதையும் அறியத் தருகின்றேன் என பிரதிப் பணிப்பாளர் அ. உமா மகேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ

# அரசாங்க விரோதச் சூழ்ச்சித்திட்டம் இடம்பெற்றதாக உறுதியாகவில்லை!

**அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு**

(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி அரச விரோத சூழ்ச்சித் திட்டம் இடம்பெற்றதாக உறுதியாகவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற தினமன்று இரவு ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள அரச விரோத சூழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்கக்கூடிய சாட்சியங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

குறித்த நாளில் சூழ்ச்சித் திட்டம் இடம்பெற்றமை குறித்து எனக்கும், ஜனாதிபதிக்கும் தெரியும். எனினும் அதனை நிரூபிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இராணுவத்தினர் முக்கிய இடங்களில் நிலைநிறுத்தப்பட்டிருந்தனர், எனினும், பாதுகாப்பு மற்றும் மோதல்களை தவிர்க்க இவ்வாறு இராணுவத்தினர் நிலை நிறுத்தப்பட்டனர் என ஒருவரினால் சொல்ல முடியும்.

இது தொடர்பில் சட்டமா அதிபர் மற்றும் பாதுகாப்பு தரப்பு பிரதிநிதிகளும் தங்களது நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளனர் என நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

சூழ்ச்சித் திட்டம் மூலம் ஆட்சியை கைப்பற்ற முயற்சிக்கப்படவில்லை என பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 50 சூரிசெவ் 7இல்<br>உயரம்: 5’9"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/3954 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 86 செவ் 8இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/3983 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 27<br>உயரம்:6’<br>தகைமை/தொழில்: பட்டதாரி (சவுதி அரேபியா)<br>தொ.இ: B/3955 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 33 1/4 சூரி செவ்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/3984 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்:பூராடம்<br>கி.பா: 37<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/3960 | பிறப்பு: 1985<br>இந்துநட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 19<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்: BSC/அரச தொழில்<br>தொ.இ: G/3985 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 46 செவ் 1இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: BA/ பொலிஸ் உத்தியோகத்தர்<br>தொ.இ: B/3961 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 13 3/4 சூரிசெவ் 12இல்<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்: A/L/ ஆசிரியர்<br>தொ.இ: G/3986 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் தேவையை முன்னிலைப்படுத்தி பணியாற்றுவதற்கு ஆவலாகவுள்ளேன்

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றாக விளங்கும் கிளிநொச்சி மாவட்டத்தின் மக்களின் தேவைகளை இனம் கண்டு முன்னிலைப்படுத்தி அவர்களுக்கு சிறந்த பணியாற்ற வேண்டும் என்பதே எனது முதன்மையான நோக்கமாகும் என மாவட்ட அரச அதிபராக பெறுப்பேற்றுக் கொண்ட சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்துள்ளார்.**



கிளிநொச்சி மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக நேற்று மதியம் 12 மணிக்கு யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதன்போது அவருக்கு கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த செயலர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் வெகு விமர்சையாக வரவேற்பளித்தனர்.

பின்னர் பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றது. பொறுப்பெற்ற பின் ஊடகவியலாளர்களிடம் பேசிய அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கடந்த கால யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கிளிநொச்சி மாவட்டமும் ஒன்றாகும். இந்த மாவட்ட மக்கள் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எனவே மக்களின் தேவைகளை இனம் கண்டு முன்னிலைப்படுத்தி அவர்களுக்கு சிறந்த பணியாற்ற வேண்டும் என்பதே எனது முதன்மையான நோக்கமாகும்.

அதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாதிக்கப்பட்ட கிராமங்களை அடையாளப்படுத்தி அவற்றினை அபிவிருத்தி செய்வதன் ஊடாக நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்ய ஆவலாகவுள்ளேன்.

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் பணிபுரியும் சகல உத்தியோகத்தர்களும் பூரண ஒத்துழைப்பு நல்குவார்கள் என நம்புவார்கள் என நம்புகின்றேன். மாவட்டத்தை சிறந்த நிலைக்கு முன்னேற்றுவதற்கு ஊடகத்தினரும் என்னோடு சேர்ந்து பணியாற்ற வேண்டும் என அன்போடு கேட்டுக் கொள்கின்றேன் அவர் மேலும் தெரிவித்தார். (இ-277)

வன்னி வலம்



கிளிநொச்சியை தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கும் மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கான தேசிய சங்கத்தின் புதிய அலுவலக கட்டடம் கடந்த திங்கட் கிழமை திறந்து வைக்கப்பட்டது. வைத்திய கலாநிதி இ.அகிலன், மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன், பூநகரி பிரதேச சமூக சேவைகள் அலுவலர் செ.சுரேந்திரா, ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.சின்னராசா, ஓய்வு நிலை அதிபர் க.இராஜேந்திரம் உட்பட பலர் கலந்து கொண்டனர். திறப்பு விழா நிகழ்வில் 11 மாற்றுத் திறனாளிகளுக்கு மெத்தைகள் உதவி உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன. பல சமூக ஆர்வலர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(படங்கள்: சிவநகர் செய்தியாளர்)

# நிரந்தர சமாதானத்துக்காக ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்

(குருமன்காடு)

நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருந்தாலும், எமது அடிப்படை பிரச்சினைகளிலிருந்து நிரந்தரமான அரசியல் தீர்வைக்காண நாம் எல்லோரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டிய காலம் இது வென்றும், எமது இறுதி இலக்கை அடைவதற்கு இன்னும் பல மைல்கள் தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளதென்றும், அதற்கு எமக்குள் ஐக்கியப்பட்ட செயற்பாடே முக்கியம் என்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

பண்டாரிக்குளம் - உக்குளாங்குளம் மகளிர் அமைப்பு, தனது இரண்டாம் வருட நிறைவை முன்னிட்டு, உக்குளாங்குளம் சீர்திருத்த விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த 20 ஆம் திகதியன்று நடத்திய விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, இன்று இங்கு நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் எமது பாரம்பரிய விளையாட்டுகளும் இடம்பெற்றிருந்தன. இவ்வாறான விளையாட்டுகளை நடத்தி எமக்கிடையே ஒற்றுமையையும் சந்தோசத்தையும் பகிர்ந்து கொள்வதன் ஊடாக எமக்குள் இருக்கும் முரண்பாடுகளைகளைந்து கொள்ள முடியும். அத்தோடு எமது கிராமிய பாரம்பரிய விளையாட்டுகள் அழிவடையாமல் பாதுகாத்து இனிவரவுள்ள இளம் தலைமுறையினருக்கும் அவற்றை கையளிக்க முடியும்.

இத்தகைய நோக்கங்களையுடைய கிராமமட்ட பொதுஅமைப்புகளை வலுப்படுத்த வேண்டிய தேவையும், பெரும் பொறுப்பும் கடமையும் உள்ளூராட்சி மன்றங்கள், மாகாணசபை, பாராளுமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு உண்டு. இதனுடன் தொடர்புடைய அமைச்சு மற்றும் பிரதேச செயலகங்களுக்கும் இப்பொறுப்பு உண்டு. இந்த அமைப்புகள் பல்வேறு குறைகள் தேவைகளுடன் இயங்கி வருகின்றன.

மகளிர் அமைப்புக்கான கட்டடம் ஒன்று தேவைப்படுவதாக எம்மிடம் கோரிக்கை விடுத்துள்ளீர்கள். எதிர்வரும்காலங்களில் உங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற உரிய நடவடிக்கை களை நாம் எல்லோரும் ஒன்றிணைந்து மேற்கொள்வோம். பண்டாரிக்குளம் - உக்குளாங்குளம் மகளிர் அமைப்பினர் இன்றைய விளையாட்டுப் போட்டியை சிறப்பாக நடத்தி முடித்திருக்கிறீர்கள். பாராளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்கள் அனைவரையும் அழைத்து கௌரவித்தமைக்கு நன்றி தெரிவிப்பதாகவும் ஆனந்தன் எம்.பி மேலும் தெரிவித்தார்.

பண்டாரிக்குளம் - உக்குளாங்குளம் மகளிர் அமைப்பின் பொருளாளர் திவ்யா தலைமையில் நடைபெற்ற விளையாட்டு விழாவில், பிரதம விருந்தினர்களாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், வினோநோதராதலிங்கம், வடமாகாண சுகாதாரத்துறை அமைச்சர் சத்தியலிங்கம், வடமாகாணசபை உறுப்பினர்கள் ஜி.ரி.லிங்கநாதன், எம்.தியாகராஜா, வைத்தியகலாநிதி சிவமோகன் ஆகியோரும், வவுனியா கோட்டக் கல்வி பணிப்பாளர் எம்.பி.நடராஜ், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஜெயக்கெனடி, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ராதிகா, உடற்கல்வி ஆசிரியர் வி.ஜெயந்தினி, உக்குளாங்குளம் கிராம சங்கத் தலைவர் பரமேஸ்வரன், பண்டாரிக்குளம் கிராம சங்கத் தலைவர் தியாகராசா, சித்தி விநாயகர் ஆலயத் தலைவர் சந்திரபத்மன், உக்குளாங்குளம்- பண்டாரிக்குளம்கிராமசேவையாளர் சுஜித்தா, சமுர்த்தி உத்தியோகத்தர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கிராம மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (இ-250)

# சமுர்த்தி நிவாரண முத்திரை இன்னும் வழங்கப்படவில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குமாரபுரம் கிராம சேவையாளர் பிரிவில் மூன்று கிராமங்களுக்கு சமுர்த்தி நிவாரண முத்திரை, இதுவரை காலமும் வழங்கப்படாது தொடர்ந்தும் தாம் புறக்கணிக்கப்பட்டு வருவதாக அக்கிராமங்களிலுள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். குறித்த கிராமத்தில் 345 குடும்பங்கள் வாழ்கின்ற போதிலும் கடந்த வருடத்திலிருந்து கிராமத்தில் சிறு குழுக்கள், சமுர்த்தி சங்கங்கள் என்பன அமைக்கப்பட்டுள்ளன.

இதனால், மக்கள் மிகவும் ஆர்வத்துடன் சேமிப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர். குமாரபுரம் கிராமசேவகர் பிரிவில் மூன்று கிராமங்கள் உள்ளன. குமாரபுரம், பால்பண்ணை, முறிப்பு ஆகிய மூன்று கிராமங்களே காணப்படுகின்றன. இந்நிலையில் இவ்வருடம் ஜனவரி மாதம் சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்காத கிராமங்களுக்கு புதிதாக சமுர்த்தி கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக, தமக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன், கிராமத்துக்கு வரும் அதிகாரிகளும் சமுர்த்தி கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

எனினும் இந்த வருடத்தின் மூன்று மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் சமுர்த்தி கொடுப்பனவுகள் வழங்குவது தொடர்பில் சாதகமான பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இம்மக்களின் பிரச்சினைகள் குறித்து முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக மகா சங்க முகாமையாளர் எம். தேவகுமாரிடம் வினவிய போது, "கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட சமுர்த்தி கொடுப்பனவுகள் வழங்கப்படாத கிராமங்களுக்கு புதிதாக கொடுப்பனவுகளை வழங்குமாறு கோரி, பிரதேச செயலாளர், மாவட்ட செயலாளர் ஊடாக சம்பந்தப்பட்ட திணைக்களத்துக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் அது தொடர்பில் இதுவரை பதில் எதுவும் கிடைக்கவில்லை. சமுர்த்தி கொடுப்பனவுகள் வழங்கப்படாத கிராமங்களுக்கு கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுப்பதற்கு நாம் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்" என்றும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டும் பிரியாவிடையும்

## திருமதி ரூபவதி கேதீஸ்வரன்



கடந்த ஐந்து வருட காலமாக கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கும் எமது நிறுவனத்திற்கும் பல வழிகளிலும் சிறப்புற சேவையாற்றி தற்பொழுது மாற்றம் பெற்று செல்லும் மதிப்புக்குரிய அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் அவர்களின் சேவையினைப் பாராட்டுவதுடன் தற்பொழுது எமது மாவட்டத்தில் இருந்து மாற்றம் பெற்று செல்வதையிட்டு மிகுந்த வேதனையடைவதுடன் எமது பிரியாவிடைச் செய்தியினையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள்,
பணியாளர்கள், தனியார் பேருந்து
உரிமையாளரின் (உத்தரவாதம்)
வரையறுக்கப்பட்ட நிறுவனம்,
கிளிநொச்சி மாவட்டம்

(சி-458)

# மகிழ்வோடு வரவேற்கின்றோம்

## திரு. சுந்தரம் அருமைநாயகம்



பெயரிலேயே சாந்தமுடையவரும் எமது மாவட்டத்திற்கு வருகை தருபவருமான மதிப்பிற்கு அரசாங்க அதிபர் திரு. சுந்தரம் அருமைநாயகம் ஐயா அவர்களின் வருகையினையொட்டி மகிழ்வடைவதுடன் வருக வருகவென மிக மகிழ்வோடு வரவேற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துநர்கள்,
பணியாளர்கள், தனியார் பேருந்து உரிமையாளரின் (உத்தரவாதம்)
வரையறுக்கப்பட்ட நிறுவனம், கிளிநொச்சி மாவட்டம்

(சி-458)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நரக வாசம்!

பிரம்மதத்தன் காசியை ஆண்ட போது அந்நகரில் புகழ் பெற்ற வியாபாரி ஒருவன் இருந்தான்.

அவனது மகன் மித்திரவிந்



தன்.

அவன் புரிவதெல்லாம் பாவச் செயல்களே. இதனால் மன முடைந்து அவனது தந்தை இறந்து போனான்.

அவனது தாயோ "இனிமேலாவது நல்லது செய்து புண்ணியம் சம்பாதி.

கெட்ட காரியங்களைச் செய்யாதே" என்று அவனுக்கு அறிவுரை கூறினாள்.

ஒருநாள் அவனது தாயார் "இன்று பௌத்த விகாரையில் பிரசங்கம் செய்ய யாரோ வருகிறார்களாம்.

இரவு முழுவதும் பிரசங்கம் நடக்குமாம். போய் நீயும் கேட்டு விட்டு வா.

உனக்கு நாளை செலவிற்குப் பணம் கொடுக்கிறேன்" என்றாள்.

மறுநாள் தன் செலவிற்குப் பணம் கிடைக்கிறதே என எண்ணி மித்திரவிந்தன் அவ்வாறே செய்வதாகக் கூறிப்போனான்.

ஆனால் அவன் பௌத்த விகாரைக்குச் சென்று பிரசங்கமா கேட்டான்? பிரசங்கம் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க மித்திர விந்தன் ஒரு மூலையில் போய் படுத்துத் தூங்கினான்.

காலையானதும் எழுந்து முகம கழுவிக் கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

அவன் தான் சொன்னபடி கேட்டதற்காக அவனது தாய் மகிழ்ந்து போய் நல்ல சமையல் செய்து சாப்பாடு போட்டாள்.

பிறகு அவன் தன் கைச்செலவிற்காகத் தாயாரிடம் இருந்து நூறு ரூபாய் வாங்கிக் கொண்டு வீட்டிலிருந்து எழும்பிச் சென்றான்.

அந்த நூறு ரூபாயைக் கொண்டு வியாபாரம் செய்து சிறுகச் சிறுக இலாபம் அடைந்து முடிவில் இருபது லட்சம் ரூபாய் எப்படியோ சேர்த்து விட்டான்.

எல்லாம் அநியாய வழியில் சம்பாதித்ததுதான். அந்தப் பணத்தோடு அயல்நாடுகளில் வியாபாரம் செய்ய அவன் கப்பலில் புறப்பட்டுச் சென்றான்.

புறப்படு முன் தாயாரிடம் தான் மேலும் லாபம் அடைய அயல்நாடுகளுக்கு வியாபாரம் செய்யப் போவதாகக் கூறவே அவளும் "மகனே, நீ எனக்கு ஒரே மகன்.

இப்போதுதான் உன்னிடம் நிறையப் பணம் இருக்கிறதே. இன்னமுமா சம்பாதிக்க வேண்டும்? இருப்பதை தான தர்மம் என்று புண்ணிய காரியங்களில் செலவு செய்து சுகமாக இருக்கலாமே" என்று கூறித் தடுத்தாள்.

ஆனால் அவன் தன் தாயின் பேச்சைக் கேட்காமல் அவளைப் பிடித்துக் கீழே தள்ளிவிட்டு இரண்டு அடிகள் கொடுத்து அவளை எழுந்து வராமல் செய்து விட்டு கிளம்பிப் போனான். அவன் ஏறிச் சென்ற கப்பல் எட்டாவது நாளன்று நடுக்கடலில் நின்று விட்டது. அது முன்னே செல்லவில்லை.

அது கண்டு கப்பலில் இருந்த மாலுமிகள் "இந்தக் கப்பலில் யாரோ ஒரு பாவி இருக்கிறான். அவன் யார் எனத் திருவுளச் சீட்டு போட்டுக் கண்டு பிடிக்கலாம். அவனை ஒரு படகில் ஏற்றிக் கடலில் விட்டு விட்டால் நம் கப்பல் நகரும்" என்றனர்.

மறுநிமிடமே திருவுளச்சீட்டு போடப்பட்டது. மித்திரவிந்தனின் பெயர்தான் முதல் தடவையில் வநதது. மேலும் இரண்டு தடவைகள் போட்டுப் பார்த்த போதிலும் அவன் பெயர்தான் வந்தது. உடனே ஒரு படகை கடலில் இறக்கி அதில் மித்திரவிந்தனை வைத்து அவர்கள் விட்டு விட்டார்கள். அவனது படகு எங்கோ செல்ல அக்கப்பலும் அங்கிருந்து நகர்ந்தது.



மித்திரவிந்தனின் படகு வெகு நாட்களுக்குப் பிறகு ஒரு தீவை அடைந்தது. அவன் அத்தீவில் இறங்கியதும் ஒரு படிகக்கல் மாளிகையைப் பார்த்தான். அந்த மாளிகையில் நான்கு பெண் பிசாசுகள் வசித்து வந்தன. அவை ஒரு வாரகாலம் அனைத்து சுக போகங்களை அனுபவித்தும் அடுத்த வாரம் தாம் செய்த பாவங்களுக்குப் பிராயச்சித்தம் செய்து கொண்டு கடும் விரதங்களைக் கடைப் பிடித்தும் வந்தன.

மித்திரவிந்தன் அப்பிசாசுகளுடன் ஒரு வாரகாலத்தைச் சுகமாகக் கழித்தான். அடுத்த வாரம் விரதம் என்றதும் அவன் அவற்றிடம் சொல்லிக் கொள்ளாமல் கூட தன் படகில் ஏறிப் புறப்பட்டு விட்டான். அப்படகு பல நாட்களுக்குப் பிறகு அவனை இன்னொரு தீவில் கொண்டுபோய்விட்டது.

(தொடரும்)




- 1199 - இங்கிலாந்து மன்னன் முதலாம் ரிச்சார்ட் பிரான்சை முற்றுகையிடும்போது படுகாயமடைந்தான். 11 நாட்களின் பின்னர் இவன் இறந்தான்.
- 1431 - பிரெஞ்சு வீராங்கனை 19 வயது ஜோன் ஒஃப ஆர்க் மீதான முன் விசாரணைகள் ஆரம்பமானது.
- 1552 - குரு அமர் தாஸ் சீக்கியரின் மூன்றாவது மத குருவானார்.
- 1812 - வெனிசுவேலாவின் கரக்காஸ் நகர் நிலநடுக்கத்தில் அழிந்தது.
- 1871 - இலங்கையில் முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது. 2,405,287 பேர் பதிவாகினர்.
- 1872 - கலிபோர்னியாவில் லோன் பைன் என்ற இடத்தில் 7.2 ரிக்டர் அளவு நிலநடுக்கம் பதிவு செய்யப்பட்டது.
- 1917 - முதலாம் உலகப் போர்: காசாப் பகுதியில் இடம் பெற்ற முதலாவது சமரில் பிரித்தானியப் படைகளின் முன்னேற்றம்- சுமார் 17,000 துருக்கியர்களால் தடுக்கப்பட்டது.
- 1934 - ஐக்கிய இராச்சியத்தில் வாகன ஓட்டுநர்களுக்கான பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: போலந்தில் அவுஷ்விட்ஸ் வதை முகாமில் முதற்தடவையாக பெண்கள் சிறைக்கைதிகளாயினர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானுடனான இவோ ஜீமா சண்டை முடிவுக்கு வந்ததாக ஐக்கிய அமெரிக்கா அறிவித்தது.
- 1953 - ஜொனாஸ் சால்க் தனது போலியோ தடுப்பூசியை அறிமுகப்படுத்தினார்.
- 1958 - ஐக்கிய அமெரிக்க இராணுவம் எக்ஸ்புளோரர் 3 விண்கலத்தை ஏவினர்.
- 1971 - கிழக்கு பாகிஸ்தான் பாகிஸ்தானிடம் இருந்து விடுதலையை அறிவித்தது. வங்காளதேச விடுதலைப் போர் ஆரம்பமானது.
- 1979 - இஸ்ரேல்-எகிப்து அமைதி ஒப்பந்தம் வோஷிங்டனில் கைச்சாத்தானது.
- 1997 - சுவர்க்கத்தின் வாயில் என்ற மதக் குழுவில் தற்கொலை செய்துகொண்ட 39 பேரின் உடல்கள் கலிபோர்னியாவில் கண்டெடுக்கப்பட்டன.
- 2006 - மியன்மாரின் புதிய தலைநகராக நாய் பிடோ என்ற புதிய நகரம் இராணுவ ஆட்சியாளர்களால் அறிவிக்கப்பட்டது.
- 2000 - விளாடிமீர் புடின் ரஷ்யாவின் ஜனாதிபதியாகத் தெரிவானார்.
- 2005 - தமிழீழ தேசிய தொலைக்காட்சி கிளிநொச்சியில் ஆரம்பமானது.
- 2006 - முதலாவது அறிவியல் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது.

**பிறப்புக்கள்**

- 1874 - றொபேட் ஃபுறொஸ்ட் அமெரிக்கக் கவிஞர் (இ. 1963)
- 1913 - பால் ஏர்டோசு, அங்கேரிய கணிதவியலாளர் (இ. 1996)
- 1916 - கிறிஸ்டியன் ஆன்பின்சன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1995)
- 1938 - அந்தனி லெகெட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1940 - நான்சி பெலோசி, அமெரிக்க அரசியல்வாதி
- 1941 - ரிச்சர்ட் டாக்கின்ஸ், படிவளர்ச்சி உயிரியலாளர்
- 1951 - கார்ல் வைமன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1962 - ஜான் ஸ்டாக்டன், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புக்கள்**

- 1827 - லுடுவிக் ஃவான் பேத்தோவன், ஜேர்மனிய மேற்கத்திய செவ்விசை இயற்றுநர் (பி. 1770)
- 1892 - வால்ட் விட்மான், அமெரிக்கக் கவிஞர் (பி. 1819)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு



மம்முட்டி-ரஜினி- தளபதி

..."ரஜினியே கொலை குற்ற வாளி என மம்முட்டி முடிவுசெய்து ரஜினியை பொலிசில் மாட்ட வைக்கிறார். ரஜினி ஜெயிலுக்கு கொண்டு செல்லப்படுகிறார்.

சில நாட்களிலேயே, தனது அடியாளின் மரணத்துக்கும் ரஜினிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது மம்முட்டிக்கு தெரியவருகிறது. அதனால் ரஜினியை ஜெயிலிலிருந்து விடுவிக்கிறார்.

ரஜினி பற்றி ஏற்கனவே அரசல்புரசலாக தெரிந்து வைத்திருந்த பிரபல ரவுடி அம்ரிஷ்பூரி, அவரை தன்னுடன் இருக்கும்படி கேட்டுக் கொள்கிறார். "ராஜா மாதிரி வாழ வைக்கிறேன்" என்று நம்பிக்கை கொடுக்கிறார். ஆனால், அவர் தனது நண்பன் மம்முட்டியின் பரம எதிரி என்பதை புரிந்துகொண்ட ரஜினி, அம்ரிஷ்பூரியின் விருப்பத்தை நிராகரிக்கிறார். "என் நண்பனின எதிரியுடன் ஒருநாளும் கைகோர்க்க மாட்டேன்" என்று மறுத்து விடுகிறார்.

இந்த தகவல் மம்முட்டிக்குத் தெரிய வந்ததும் நெகிழ்ந்து போகிறார். "நீ என்னுடன் இருக்க வேண்டியவன். இனி நீதான் என் தளபதி" என்று உணர்ச்சி வசப்படுகிறார். இப்போது மம்முட்டி அணியில் மிகப்பெரும் சக்தியாக ரஜினி விளங்குகிறார்.

**காதல்**


அடிதடி, ரகளை மட்டுமே வாழ்க்கை என்றிருந்த ரஜினிக்குள் காதல் எட்டிப் பார்க்கிறது. பணக்கார குடும்பத்தின் ஷோபனா, அவரைக் கவர்கிறார். ரஜினியின் தயாள குணம, கம்பீரம் ஷோபனாவைக் கவர, அவரும் காதல் வசப்படுகிறார்.

ஆனால் இந்தக் காதலுக்கு ஆயுள் குறைச்சல். ரஜினி மீதிருந்த "தாதா" முத்திரையும், அனாதை" என்ற அடைமொழியும் காதலியை அடைய தடையாக இருக்கின்றன.

மாவட்டத்துக்கு புதிய கலெக்டராக பொறுப்பேற்கும் அரவிந்த்சாமி, தனது எல்லைக்குள் தலைவலியாக இருக்கும் தாதாக்களை களையெடுக்க விரும்புகிறார். கலெக்டரின் பதவி ஏற்பு விழாவின்போதே தாதாக்கள் தங்கள் கோஷ்டி சண்டையை ஆரம்பிக்கிறார்கள். ஆனால் அது திட்டமிட்டு நடந்த சண்டை என்பதும், தனது நண்பன் மம்முட்டியை கொல்ல அம்ரிஷ்பூரி ஏற்பாடு செய்தது என்பதும் ரஜினிக்கு தெரியவர, மம்முட்டியை கொல்ல முயன்றவனை தீர்த்துக்கட்டி விடுகிறார்.

இந்த வழக்கில் சாட்சி சொல்ல வருகிறார் ஜெய்சங்கர். அவர் மூலமாக, தான் அனாதையல்ல, தனது தாயார் ஸ்ரீவித்யா, தனது தம்பிதான் மாவட்ட கலெக்டராக இருக்கும் அரவிந்த்சாமி என்ற உண்மையை தெரிந்து கொள்கிறார், ரஜினி.

*(தொடரும்)*



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து– 100

...**கா**வக்காரச் சக்கணன் ஆடு வளக்குறதுல ஒரு வல்லாளகண்டன். ஆடு இருமுனா என்னா அர்த்தம். செருமுனா என்ன அர்த்தம், செனையாடு எத்தன குட்டிபோடும்.... அதுல எத்தன கெடா; எத்த மருக்க.... எல்லாம் சொல்வாரு.

அவரு ஆட்டுக் குன்னே பெறந்தவரா? இல்ல ஆட்டுக்கே பெறந்தவராங்கிற கொழப்பம் ரொம்ப நாளா இருக்கு ஊருக்குள்ள; தீந்த பாடு இல்ல. அவருதான் சொல்லிக் குடுத்தாரு:

கெடாய்க்கு மட்டும் அப்படியே விட்டுரக் கூடாதாம் மொதல்ல மொளைக்கிற கொம்ப வெரசா வளராதாம்; வளந்தாலும் பலமிருக்காதாம்.

நாளப் பின்ன முட்டுக்கெடா எதாச்சம் முட்ட வந்தா அடிதாங்காம முறிஞ்சு போயிருமாம். கொம்பு ஒடிஞ்சா ஒடிஞ்ச எடம் புண்ணு வச்சிருமாம்; புண்ணுவச்ச எடம் புழுவு வச்சிருமாம்.

அதனால் புடுங்கி எறிஞ்சிரணுமாம் மொதல்ல மொளைக்கிற கொம்ப. சக்கணன் சொன்னாச் சரியாயிருக்கும்.

கெடாய்க்குக் கொம்பு புடுங்குறா கருவாச்சி.

பிள்ளையத் தூக்கிப் போடுற மாதிரி கெடாயத் தூக்கி மடியில போட்டுக்கிட்டா. செல்லமாக் கொஞ்சிக் தாடையத் தடவிக் குடுத்துக் கொம்ப இழுத்துப்பாத்தா; வரல.

ஆன மட்டும் திருகிப்பாத்தா; அசையல. [illegible] போடு [illegible]



மொளைச்ச கொம்பு வாரதுக்குப் பதிலா மூள வெளிய வந்துட்டா? வேணாஞ்சாமின்னு விட்டுட்டா.

படக்குன்னு குனிஞ்சு வாயில கவ்விக் கடவாப்பல்லுல அணச்சுக் கடக்குன்னு ஒரு கடிகடிச்சா கொம்ப. களக்குன்னு கழண்டு துண்டா வந்திருச்சு கொம்போட கூடு.

கூடு கழண்டோடி விழுந்ததுல [illegible] கொப்புளிக்குது ரத்தம். [illegible]பிற ரத்தத்துமேல அடுப்புச் சாம்பல அள்ளிச் சப்புன்னு அடிக்கவும் சட்டுன்னு நின்னுபோச்சு ரத்தம். அதுக்குப் பெறகு ஆறேமாசத்துல சும்மா திருகிவளந்து திமிறி நிக்குது கொம்பு.

கருவாச்சி கெடாக் கொம்பு வருசநாட்டு யானையக்கூட வகுந்துபுடும் வகுந்துன்னு பேசுது ஊரு.

பூலித்தேவன்னு என்ன நேரத்துல பேருவச்சாளோ, வேங்கப்புலி மாதிரி படர்ந்த நிக்கிது பதினெட்டு மாசத்துல. ஊருக்கெல்லாம் புலியாத் தெரியிற கெடா அவகிட்ட மட்டும் குட்டி போட்ட பூனையாக் காலுக்குள்ளயே சுத்திவருது. ஆட்டுமொழி அவளுக்குப் புரியுது. அவமொழி ஆட்டுக்குப் புரியுது. அவ ஒரு வார்த்தையும் சொல்லாம உதட்டுல பிர்ருன்னு ஒலியெழுப்புனா, எக்கால் போட்டு அது எம்புட்டு ஒசரத்துல மேஞ்சுக்கிட்டிருந்தாலும் இந்தா வாரேன்னு ஓடி வந்துருது. கெச் கெச் கெச்ன்னு பல்லி கத்துன மாதிரி கத்துனா, தப்பான பாதைய விட்டுச் சரியான பாதையில கூடிருது. பூலித்தேவன முன்னுக்க விட்டு இவ முள்ளுக்கிள்ளு தச்சு உக்காந்து போனா கருவாச்சி வாசனையக் காண மேன்னு முன்னுக்குப்போன கெடா ஓடிவந்து இவ மூஞ்சிய மோந்து பாத்துக் கூட்டிக்கிட்டுப் போகுது.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மிருதுதிறன்களின் விருத்தியில் பாடசாலை கலைத்திட்டம்

## School Curriculum in Soft skills Development

ஒரு நாடு பொருளாதார ரீதியாக அபிவிருத்தியடைவதற்கு கல்விக்கும் பொருளாதாரக் கட்டமைப்பிற்குமிடையே சிறப்பான தொடர்பு காணப்படல் வேண்டியது அவசியமாகும்.

இது அந்நாட்டில் நடைமுறையில் காணப்படும் கல்வித் தொகுதியினூடாக வெளியீடாக கிடைக்கப் பெறும் பொருத்தமான மனித மூலதனங்கள் (Human capitals) தேசிய, சர்வதேசிய ரீதியில் தொழில் உலகுடன் போட்டி போடக் கூடிய நிலைமையினை அடைதல் மூலம் சாத்தியமாக்கப்படுகின்றது. மேலும் கல்விச் செயற்பாடுகள் ஊடாக கிடைக்கப்பெறும் மனித மூலதனங்கள் நடைமுறை வாழ்க்கை முறைகளுக்கும் நாட்டின் சகல அபிவிருத்திச் செயற்பாடுகளிற்கும் தமது அறிவு, ஆற்றல்களை பிரயோகிக்க கூடியவர்களாக இருக்க வேண்டும். இதனையே எமது நாட்டில் நடைமுறையிலிருக்கும் தேர்ச்சி மட்ட கலைத் திட்டம் கருப்பொருளாக கொண்டுள்ளது.

இவ்வாறான மனித மூலவளங்களை உருவாக்குவதில் பாடசாலைக் கல்வி மிக முக்கியமான பங்கினை ஆற்றுகின்றது. மேலும் கல்வியானது மனிதவலு விருத்திக்கும் அதன் பயன்பாட்டிற்கும் தேவையான அடிப்படைச்செயற்பாடுகளுக்கான அடித்தளத்தையும் வழங்குகின்றது. இருந்த போதிலும் இன்றைய கல்விமுறையினூடாக ஒரு நாட்டின் தேசிய, சர்வதேச ரீதியிலான அபிவிருத்திக்கு என்ன வழங்கப்படுகின்றது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

அத்தோடு, குடும்ப அமைப்புக்களிடையே காணப்படும் ஸ்திரமற்றதன்மை, இளைஞர் யுவதிகளிடம் காணப்படும் விரக்தி நிலை குறிப்பாக படித்தவர்களிடையே காணப்படும் வேலையில்லாப்பிரச்சினை போன்றன கல்விச் செயற்பாடுகளுக்கும் அதன் மூலமான எதிர்பார்ப்புக்களுக்குமிடையேயான இடைவெளி (Gap) அதிகமாகிக் கொண்டு செல்கின்றமையை வெளிப்படுத்துகின்றது. இந்நிலைப்பாடு எமது நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் காணப்படுகின்ற யதார்த்த நிலை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

அந்த வகையில் இவ்வாய்வுக் கட்டுரையானது மிருதுதிறன் என்னும் எண்ணக்கருவின் தோற்றம், மிருதுதிறன் என்ற எண்ணக்கரு எதை விளக்குகின்றது?, மிருதுதிறன்களின் முக்கியத்துவம், பாடசாலைக் கலைத்திட்டமும் மிருதுதிறன்களும், மிருதுதிறன்களும் வேலையுலகும், மிருதுதிறன்களின் விருத்தியில் ஆசிரியர்களின் வகிபாகம் எத்தகையது என்பன தொடர்பான விடயங்களை முன்வைப்பதாக அமைகின்றது.

**மிருதுதிறன் என்னும் எண்ணக்கருவின் தோற்றம் (Origin of the concept of the Soft skill).**

மிருதுதிறன் என்ற சொற்பிரயோகம் எமக்கும் எமது நாட்டிற்கும் மிகக் குறுகிய தசாப்த காலப் பகுதியில் உணரப்பட்ட ஒரு விடயமாக அமைகின்ற போதிலும் மேலைநாடுகளில் இதன் முக்கியத்துவம் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்தே உணரப்பட்டுள்ளது.

அதிலும் சிறப்பாக தொழிற்றுறையினரிடமிருந்தே இதன் முக்கியத்துவம் பெருமளவில் வெளிக்கொணரப்பட்டது. ஒரு நாட்டின் கல்விகற்ற இளைஞர் யுவதிகள் மத்தியில் காணப்படும் வேலையில்லாப்பிரச்சினைக்கான காரணம் தொடர்பான கேள்விக்கு ஆய்வாளர்கள் கூறும் பதில் எம்மை சிந்திக்க வைத்துள்ளது. அதாவது "எமது நாட்டில் மட்டுமல்லாது உலக நாடுகளிலும் பட்டம் பெற்றவர்களிடையே தலைநிறைந்த அறிவு (Head full of knowledge) மட்டுமே காணப்படுகின்றது.

குறித்த தொழிற்றுறை வேண்டிநிற்கும் தொழிற்றிறன்கள் (Employability skills) அவர்களிடம் போதியதாகக் காணப்படவில்லை" என்பதாகும். அதாவது வேலையுலகிற்கும் படித்த இளைஞர் யுவதிகளுக்குமிடையில் பொருத்தப்பாடு மிகக் குறைவாக உள்ளமையே அவர்கள் தமக்கு பொருத்தமான உயர்வான தொழில்களைப் பெற்றுக் கொள்ள தடையாக உள்ளது.

எனவே தற்போதைய தொழிலுலகம் வேண்டி நிற்பது எதனை என்பது தொடர்பாக நாம் விழிப்படைய வேண்டிய காலத்தில் உள்ளதோடு தொழில் உலகில் தொழில் தருவோர் (Empolyers) தொழில்கொள்வோர்ம (Employees) எதிர்பார்ப்பது என்ன என்பது தொடர்பாகவும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

தொழிலுலகத்தினர் கூறுவதெல்லாம் " what we know is not nearly as important as what we do with what we know , and how well we do it" அதாவது நாங்கள் என்ன தெரிந்து வைத்துள்ளோம் என்பதனை விட நாங்கள் தெரிந்து வைத்துள்ளவற்றைக் கொண்டு என்னத்தை செய்கின்றோம், அதை எவ்வாறு செய்கின்றோம் என்பதேயாகும்.". எவ்வாறு வேலை செய்யப் போகின்றோம் (How we do it) என்பதற்கு வழிகாட்டுவதாக மிருது திறன்கள் (Soft skills) என்னும் எண்ணக்கரு அமைகின்றது.

**மிருது திறன்கள் - விளக்கம் ( What are soft skills)**

மிருது திறன்கள் என்பவை அவை பயன்படுத்தப்படும் இடம், நிலை என்பவற்றுக்கேற்ப பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன. மக்கள் தொடர்புத் திறன்கள் ( People's skills) அல்லது ஆளுமைததிறன்கள் (Personality skills), அறிகைசார் திறன்கள் (Cognitive skills), கூட்டுத்திறன்கள (Core skills), பிரதான திறன்கள் (Key skills), அவசியத் திறன்கள் (Necessary skills), முக்கிய திறன்கள் (Essential skills) , பரிமாறபடக்கூடிய திறன்கள், (Transferable skills), அளவு கோடிடப்பட்ட திறன்கள் (Graduate skills), தொழிற்றிறன்கள் (Employment related skills), தொழிலுக்கானதும் வாழ்நாட்கற்றலுக்குமான திறன்கள் (Employability and lifelong learning skills), தேர்ச்சிகள் (Competencies) ,competences, இயலுமைகள் (Capabilities), இயல்புகள (Characteristics), பண்புகள் (Qualities) , பண்புக் கூறுகள் (Attributes) எனக் குறிப்பிடலாம் (Curtis & McKenzie, 2001). Wikipedia, மிருதுதிறன்கள் தொடர்பாக "மிருது திறன்கள் என்பவை ஒரு தனிமனிதன் தனது வேலைத்தளத்தில் உள்ளேயும், வெளியேயும் பரந்தளவில் தனது வாடிக்கையாளர்களுடனும், சக தொழிலாளர்களுடனும் வினைத்திறனான முறையில் இடைவினையுறவு (Interacts) கொள்ள உதவும் ஆற்றலாகும்" எனக்குறிப்பிடுகின்றது. Most & Tilly ( 2001) மிருது திறன்கள் தொடர்பாக குறிப்பிடுகையில் "பாரம்பரியமான கட்டமைப்புச் சார்ந்த அல்லது தொழில்நுட்ப அறிவு சார்ந்த என்பதிலிருந்து வேறுபட்டு ஆளுமைப் பண்புகள், மனப்பாங்குகள், நடத்தைகளை உருவாக்குகின்ற திறன்கள் (Skills), ஆற்றல்கள் (Abilities), பண்புகள்/ சிறப்பான தன்மைகள் (Traits). மிருதுதிறன்கள் எனப்படுகின்றன" என்கின்றார்.

Sujiva Dewaraja ( Chair man of SLASSCOM and the head of the IT sector at the John keels group, 2012) இலங்கையில் படித்து பட்டம் பெற்றவர்களின் நிலை தொடர்பாக கூறும போது "அவர்களிடம் காணப்படும் பாடஅறிவு மிக மிக நன்றாகவேயுள்ளது. ஆனால் பிரச்சினை (Problem) அல்லது இடைவெளி (Gap) என்பது அவர்களிடம் காணபபடும் மிருதுதிறன்கள் தொடர்பானதாகும" என்கின்றார். அவர் மேலும் மிருதுதிறன்கள் தொடர்பாக குறிப்பிடுகையில்

"மிருதுதிறன்கள் என்பவை பாட அல்லது கல்வி அறிவு என்பதற்கும் அப்பால் ஒரு வேலைத் தளத்தில், செயற்படுவதற்கு தேவையான விடயங்களாகும். அதாவது குழுவாக வேலை செய்யும் ஆற்றல், மக்களிடம் இடைவினை கொள்ளும் திறன்கள், தொடர்பாடல் திறன்கள், பிரச்சினை தீர்க்கும் ஆற்றல், தேடிக் கற்கும ஆற்றல், தலைமை தாங்கும் ஆற்றல், நேரமுகாமைத்துவத் திறன், பொறுமை, நேர்மை, தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல், தர்க்கசிந்தனை போன்றவை என்கின்றார்.

மிருதுதிறன்கள் என்பவை ஒவ்வொருவரிடமும் உள்ளார்த்தமாக காணப்படும் ஆற்றல்களாகும் (In born abilities).

ஆனால் இவை காண ப்படும் அளவு ஆளுக்கு ஆள் வேறுபடுகின்றது. பாடசாலைக் காலத்தில் மாணவர்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்த இம் மிருதுதிறன்கள் உதவுவதோடு இவை அவர்களுடைய நாளாந்த, வேலையுலக வாழ்க்கைக்கும் அவசியமானவையாகும. எனவே பாடசாலைகளில் நடைபெறும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் இத்திறன்களை விருத்தி செய்வதல் மிகக் கூடிய பங்களிப்பை வழங்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**மிருது திறன்களின் முக்கியத்துவம் (Importance of Soft skills)**

மிருதுதிறன்களின் அவசியம் பின்வருமாறு உணரப்பட்டுள்ளது அவையாவன,

1. ஆளிடைத் தொடர்புகளை (Inter & Intrapersonal relation ships) உசிதமான முறையில் மேற் கொள்ள உதவுதல்.

2. சரியான பொருத்தமான முடிவுகளை ( Correct decisions) மேற்கொள்ளல்.

3. பயனுறுதி மிக்க தொடர்புகளை ( Effective communications) மேற்கொள்ளல்.

4. நல்ல பதிவை அல்லது எண்ணத்தை ( impression) ஏற்படு த்திக் கொள்ள உதவுதல்.

5. வாண்மை விருத்திக்கான (Professional developments) சந்தர்ப்பங்களைப்பெற்றுக்கொள்ள உதவுதல்

6. தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்ளவும் பெற்றுக் கொண்ட தொழிலைத் தக்க வைத்துக் கொள்ளவும் வாய்ப்பளித்தல்.

**பாடசாலைக் கலைத்திட்டம் (School Curriculum)**

கலைத்திட்டம் என்பது கல்விக்குறிக்கோள்களைக் கட்டியெழுப்ப உதவும் முதுகெலும்பு போன்றது. மேலும் கல்விசார் நிறுவனமொன்றின் இதயம் போன்றது. இதனூடாகவே முறையான கல்வி நிறுவனங்களான பாடசாலைகள் கல்விசார் அனுபவங்களை கற்றல்-கற்பித்தற் செயன்முறையின் மூலம் மாணவர்களுக்கு வழங்குகின்றன. பாடசாலைக் கலைத்திட்டத்தின் பங்குதாரர்களாக விளங்குபவர்கள் தனித்து மாணவர்களும், ஆசிரியர்களும், அவர்கள் மூலமாக நிறைவேற்றப்படும் கற்றல் - கற்பித்தல் அனுபவங்களும் மட்டுமல்ல. இவற்றோடு பாடசாலையில் காணப்படும் வளங்கள், ஆசிரியர்களினால் பயன்படுத்தப்படும் கற்பித்தல் முறைகள், பாடசாலை நிகழ்வுகள், பாடமேம்பாட்டு செயற்பாடுகள், வகுப்பறைக் கவின்நிலை, பாடசாலையின் கவின் நிலை என்பனவுமாகும்.

எமது நாட்டுப்பாடசாலைகளில் 2007ஆம ஆண்டில் இருந்து நடைமுறையிலிருக்கும் தேர்ச்சிமையக் கலைத்திட்டமானது அறிந்து வைத்துள்ளவற்றைத் திருத்தியமைப்பதிலும், இதுவரையில் கண்டறியப்படாதவற்றைத் தேடுவதிலும், எதிர்காலம்வேண்டி நிற்பவற்றை உருவாக்குவதிலும் கவனஞ்செலுத்துகின்றது என்பதும் நோக்கப்படவேண்டிய விடயமாகின்றது. அந்த வகையில பாடசா லைக் கலைத்திட்டம் மிருது திறன்களின் விருத்தியில் பங்களிப்பு செய்யப்படவேண்டியதன் அவசியம் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

**பாடசாலைக் கலைத்திட்டமும் மிருதுதிறன்களும் (School Curriculum & Soft skills)**

பாடசாலைக் கலைத்திட்டத்தினூடாக ( School Curriculum) மிருதுதிறன்களை வளர்த்துக் கொள்ள முடியும் என்பது ஆய்வாளர்க ளின் கருத்தாக அமைகின்றது. எமது நாட்டின் பாடசாலைக் கல்வி முறையில் ஒவ்வொரு பிள்ளை யும்

தரம் 1 - தரம் 5 வரை ஆரம்பக் கல்வியையும் தரம் 6-தரம் 9 வரை கனிஷ்ட இடைநிலைக் கல்வியையும் தரம் 10 - தரம் 13 வரை சிரேஷ்ட இடைநிலைக் கல்வியையும் பெற்றுக் கொள்கின்றார்கள்.

பாடசாலைக் கலைத்திட்டமானது

1. பாடக் கலைத்திட்டம் (Subject/ formal curriculum)

2. இணைபாடவிதானக் கலைத்திட்டம் (Co- curriculum)

3. மறைக் கலைத்திட்டம் ( In formal curriculum)

என மூன்று பிரிவாகக்காணப்பட்டாலும் பாடக் கலைத்திட்டத்தினூடாக எல்லாமாணவர்களும் முழுமையாக நகர்த்தப்படும் போது, இணைபாடவிதான செயற்பாடுகளிலும், மறைகலைத்திட்டத்திலும் அதற்கு பொருத்தமான தெரிவு செய்யப்பட்ட மாணவர்களே பங்கேற்கிறார்கள். எனவே இந்த மிருது திறன்களை வளர்ப்பதில் பாடக் கலைத்திட்டமே மிகக்கூடிய பங்களிப்பை வழங்கக் கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அந்த வகையில் மிருதுதிறன்கள் கலைத்திட்டத்தின் ஊடாக

1. தெரிவு செய்யப்பட்ட ஒரு பாடத்தினூடாக ( **Standalone Subject model**) முன்னெடுத்தல்

பாடக்கலைத்திட்டத்தில் ஏதாவது ஒரு பாடத்தினை தெரிவு செய்து மிருது திறன்களை விருத்தியடையச் செய்ய உதவும் செயற்பாடுகளை பெருமளவில் இணைத்துக் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை முன்னெடுத்தல்.

2. பாடக் கலைத்திட்டத்தில் உள்ள அனைத்துப் பாடங்களினூடாகவும் (**Embeded Model**) முன்னெடுத்தல்.

எல்லாப் பாடங்களினூடாகவும் இச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

3. பாடமேம்பாட்டு நிகழ்ச்சிகளினூடாக (**Subject Improvement Programs**) முன்னெடுத்தல்

ஒவ்வொரு பாடத்திற்கும் அது தொடர்பான பாடமேம்பாட்டு நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. உதாரணமாக விஞ்ஞான பாடத்திற்கு விஞ்ஞான தினம், விஞ்ஞானக் கண்காட்சி, விஞ்ஞான மன்றம், வானியல் பாசறை, விநாடி-வினாப் போட்டி, களஆய்வு, சுற்றுலா, செயற்றிட்டம், சஞ்சிகை வெளியீடு, பாடம் சார் மென்பொருள் தயாரிப்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

4. பாடசாலை நிகழ்வுகளினூடாக ( **School Life Activities**) வளர்த்தல்.

1. இல்ல விளையாட்டுப் போட்டி
2. தமிழ் தினம்
3. மாணவர்களின் ஒன்று கூடல், மாணவ மன்றச் செயற்பாடுகள்
4. பல்வேறு விழாக்கள்.

போன்ற பெரும்பாலான மாணவர்கள் பங்கேற்கும் இத்தகைய வைபவங்களினூடாக மிருது திறன்கள் மாணவர்களிடம் வளர்த்தெடுக்கப்படலாம் என்பது தெளிவான விடயமாகும்.

(தொடரும்...)

திருமதி. சுமதி ஸ்ரீசுந்தரராஜா
ஆசிரிய கல்வியியலாளர்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசாங்கம் ஓர் நேரக்குண்டே!

## மகிந்த கூறுகிறார்



(கொழும்பு)

**தேசிய அரசாங்கம் என்பது ஓர் நேரக் குண்டாகும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நாரஹன்பிட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய அரசாங்கம் என்கிறார்கள், கூட்டணி அரசாங்கம் என்கிறார்கள். எனினும், இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பெரும் குழப்பமாக உள்ளது.

மத்திய வங்கியில் பாரிய மோசடி இடம்பெற்றுள்ளது.

தேசிய அரசாங்கம் என்ற நேரக் குண்டை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கையில் எடுத்துக்கொண்டதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

வரலாற்றில் நாம் பாரிய தவறுகளை இழைத்துள்ளோம். அதனை இல்லை என்று சொல்லவில்லை. பௌத்த பிக்குகள் கூறிய தனைப் போன்று நாம் குற்றவாளிகளை தண்டிக்கவில்லை.

போரின் பின்னர் நான் வித்தியாசமான ஓர் நிலைப்பாட்டையே கொண்டிருந்தேன. அபிவிருத்திப் பணிகள் பற்றிக் கவனம் செலுத்திய நான் வேறு விடயங்கள் பற்றிய சிந்திக்கவில்லை.

இப்போதுதான் தெரிகிறது நண்பர்கள் யார், விரோதிகள் யார் என்பது. இன்னும் கொஞ்சம் காலம் காத்திருந்தால் ஏனைய விரோதிகளையும் கண்டுகொள்ள முடியும்.

சுதந்திரக் கட்சி என்பது டார்லி வீதியில் அமைந்துள்ள அலுவலகமோ அல்லது கைச்சின்னமோ கிடையாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு பண்டாரநாயக்க குடும்பத்தினர் எத்தனை தடவை வெளியேறியிருக்கின்றார்கள்.

ஒட்டுமொத்த குடும்பத்திற்கு எதிராகவும் தற்போது பொய்யான குற்றச்சாட்டு சுமத்துகின்றனர்.

எமது குடும்பத்தில் ஒருவரையேனும் கைது செய்ய முயற்சிக்கப்படுகின்றது.

நாமல் ராஜபக்ஷவின் பெயரை குறிப்பிடுமாறு சந்தேக நபர் ஒருவரை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் துப்பாக்கி வைத்து மிரட்டியுள்ளார்.

இதுவே இன்று நடைபெறும் நல்லாட்சியாகும். அரச ஊடகங்கள் மிக மோசமாக அரசாங்கத்திற்கு சார்பாக செயற்படத் தொடங்கியுள்ளன என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மக்கள் தலைவர் மகிந்த ராஜபக்ஷ

## கலைஞர் கௌரவம்

நாட்டின் மக்கள் தலைவர் மகிந்த ராஜக்ஷவே என பிரபல திரைப்பட நடிகரும் கலைஞருமான ஜக்சன் அந்தனி தெரிவித்துள்ளார்.

நாரஹன்பிட்டி அபயராம விஹாரையில் நேற்று முன்தினம் கலைஞர்கள் சிலர் முன்னாள் ஜனாதிபதியை சந்தித்த போது, ஜக்சன் இதனைத் தெரிவித்துள்ளார்.

மீண்டும் அரசியலுக்கு வந்து நாட்டுக்கு தலைமை தாங்க வேண்டும், அவ்வாறு தலைமை தாங்குவதன் மூலம் கலைஞர்களுக்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த நாட்டுக்கே நன்மை ஏற்படும் என கலைஞர்கள் முன்னாள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர். மகிந்த ராஜபக்ஷ மீதான மக்கள் நம்பிக்கை வீழ்ச்சி யடையில்லை. மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் கலைஞர்கள் நல்ல முறையில் செயற் பட அவகாசம் இருந்தது. எனினும் தற்போது அந்த நிலைமை கிடையாது. சூழ்ச்சித் திட்டமொன்றின் மூலம் அரசாங்க ஆட்சி அதிகாரம் கைப்பற்றப்பட்டுள்ளது என ஜக்சன் அந்தனி மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | சாவகச்சேரி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 60 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 80 | 60 | 60 |
| தக்காளி | 80 | 80 | 80 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 40 | 60 | 50 | 40 |
| கோவா | 80 | 30 | 60 | 40 | 40 |
| கரட் | 200 | 120 | 140 | 100 | 100 |
| பூசணி | 80 | 60 | 60 | 50 | 50 |
| புடோல் | 80 | 40 | 60 | 40 | 40 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 40-90 | 60 | 80 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 80 | 90 |
| பாகற்காய் | 140 | 100 | 80 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 80 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 80 | 60 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 80 | 70 | 80 |
| லீக்ஸ் | 200 | 160 | 180 | 160 | 150 |
| பீற்றூட் | 40 | 50 | 80 | 80 | 40 |
| கறிமிளகாய் | 200 | 140 | 120 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 320 | 300 | 400 |
| போஞ்சி | 200 | 100 | 160 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | 60 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 60 | 100 | 60 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 50 | 50-60 | 50 | 60 |
| இராசவள்ளி | 150 | 120 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 140 | 160 | — | 80 |
| முள்ளங்கி | 30 | 30 | 80 | 40 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 20 |




மது மதுமிதா




பாலன் குமார்




மிது மிதுர்சா




லக்ஸ்மன் லவண்




தரணி தரணிகா




கரோலின் கெனி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facepook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19ஆவது திருத்தமும் சிறுபான்மையினரும்



புதிய அரசாங்கம், வர்த்தமானிமூலம் அறிவித்துள்ள 19 ஆவது அரசியலமைப்புத் திருத்த வரைவில் பல முக்கிய விடயங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இந்நாட்டு தமிழ், முஸ்லிம் மக்கள் அதன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இரண்டு கருத்துக்களை நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள். அவை நல்லிணக்கம் தொடர்பான கருத்துக் களாக இருப்பதே அதற்குக் காரணமாகும்.

அந்த அரசியலமைப்பு திருத்தத்தில், ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை விபரிக்கும் பகுதியில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன் படி, சமய மற்றும் இன ஐக்கியத்தை உறுதிப்படுத்துவதும் அவற்றை பாதுகாப்பதற்கான வசதிகளை வழுங்குவதும் ஜனாதிபதியின் கடமைகளில் ஒன்றாகும்.

அதேபோல், ஜனாதிபதி, தேசிய நல்லிணக்கத்தையும் ஒருமைப்பாட்டையும் மேம்படுத்த வேண்டும் என அந்த நகல் திருத்தத்தின் மற்றொரு வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை நல்ல விடயங்கள்தான். ஆனால, ஜனாதிபதி இதனை எவ்வாறு செய்ய வேண்டும் என்ற பொறிமுறை அதில் குறிப்பிடப்படாததால், இந்த திருத்தத்தின் மூலம் எதிர்காலத்தில், ஜனாதிபதி ஒருவர் நிச்சயமாக இன மற்றும் சமய நல்லிணக்கத்துக்காக செயற்படுவார் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தற்போதைய அரசாங்கத்தின் ஏனைய தலைவர்களும் கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதியளித்த பல முக்கிய விடயங்கள் புதிய திருத்த வரைவில் இல்லை. குறிப்பாக நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்கான ஏற்பாடுகள் இந்த வரைவில் இல்லை. இந்த வரைவும் அரசாங்கத்தின் 100 நாட்கள் திட்டத்தின் பிரகாரம் குறித்த நாளில் சமர்ப்பிக்கப்படவும் இல்லை. அது இன்னமும் வர்த்தமானி என்ற நிலையிலேயே இருக்கிறது.

இந்த அரசியலமைப்பு திருத்தம் தமக்கு அவ்வளவு பொருத்தமான விடயம் அல்ல என்பதைப் போல், தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகள் அக்கறையின்றி இருப்பதை இப்போது காணலாம். ஆனால், இந்த விடயம் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு மிகவும் முக்கியமானதாகும்.

ஏனெனில், இந்த விடயத்தில் ஒரு தவறு நடந்தால் அதனைத் திருத்த மேலும் பல தசாப்தங்கள் காத்திருக்க வேண்டியிருக்கும். நிறைவேற்ற இருப்பது சாதாரண பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றக்கூடிய சாதாரண சட்டமல்ல. மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றக் கூடிய அரசியலமைப்பு திருத்தமே.

எதிர்காலத்தில், இது பாதகமானது என்று உணர்ந்து அதனை மாற்ற முற்பட்டால் அதற்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குப்பலம் தேவைப்படும். எதிர்காலத்தில் எந்தவொரு கட்சிக்கும் மூன்றில் இரண்டு வாக்குப்பலம் கிடைக்கும் என்று கூறுவது கடினமாக இருக்கிறது. எனவே, இது உதாசீனமாக இருக்க வேண்டிய விடயம் அல்ல.

உதாரணமாக, ஜனாதிபதியை நீதிமன்றத்துக்கு வகைசொல்லும் நிலைக்கு கொண்டு வருவோம் என தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதியும் தற்போதைய அரசாங்கத்தின் தலைவர்களும் கூறினர். இது, தென் பகுதி அரசியல்வாதிகளுக்கு மட்டும் முக்கியமான விடயம் அல்ல. சிறுபான்மை மக்கள் தொடர்பாக ஜனாதிபதி எடுக்கும் ஒரு நடவடிக்கை, அம் மக்களுக்கு பாதகமானதாக இருந்து அம்மக்கள், ஜனாதிபதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் வாய்ப்பு இருந்தால் அது அம்மக்களை பாதுகாத்துக்கொள்ள உதவாதா?

ஆனால், வாக்குறுதியளித்தபடி ஜனாதபதி, நீதிமன்றத்துக்கு வகைசொல்லும் வகையிலான ஏற்பாடுகள் 19ஆவது அரசியலமைப்புத் திருத்த வரைவில் இல்லை. தற்போதைய அரசியலமைப்பில் உள்ள வாசகங்களே அதிலும் உள்ளன. தொழில் ரீதியாகவோ அல்லது தனிப்பட்ட முறையிலோ ஜனாதிபதி செய்த எந்தவொரு செயலுக்கு எதிராகவும் நீதிமன்றத்துக்குச் செல்ல முடியாது என்றே அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் 19 ஆவது அரசியலமைப்பு திருத்த வரைவின் மூலம், ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிபால சிறிசேனவும் அவருக்கு உதவிய அப்போதைய எதிர்க்கட்சிகளும் வாக்குறுதியளித்த விடயங்களில் முக்கிய சில விடயங்கள் தொடர்பாக மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

நிறைவேற்று ஜனாதிபதி முறை, 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை இரத்துச் செய்தல், 17 ஆவது அரசிலமைப்புத் திருத்தததின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களை மீண்டும் நடைமுறைப்படுத்தல் மற்றும் தகவல் அறியும உரிமையை சட்டமாக்குதல் ஆகியவையே அவையாகும். ஆனால், அரசாங்கம் மிகவும் அழுத்த மாக வாக்குறுதியளித்த தேர்தல் முறை தொடர்பான மாற்றங்கள் இதில் குறிப்பிடப் படவில்லை. தற்போதைய விகிதாசார தேர் தல் முறையை இரத்துச் செய்வதை சிறு கட்சி களும் வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு வெளியே வாழும் சிறுபான்மை இனக்கட்சிகளும் விரும்புவதில்லை.

ஏனெனில், தொகுதிவாரி தேர்தல் முறை வந்தால் அம்மக்களின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்கோ அல்லது மாகாண சபைக்கோ அல்லது உள்ளூராட்சி மன்றங்களுக்கோ தெரிவுசெய்யப்படும் வாய்ப்பு மிகவும் குறைந்துவிடும். வடக்கு, கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளுக்கு விகிதாசார தேர்தல் முறையும் தொகுதிவாரி தேர்தல் முறையும் ஒன்றுதான். எனவே, அவர்கள் தேர்தல் முறையை மாற்றுவது தொடர்பாக அவ்வளவு அக்கறை காட்டுவதில்லை.

சிறு கட்சிகளினதும் வடக்கு, கிழக்குக்கு வெளியே செயற்படும் சிறுபான்மை இனக் கட்சிகளினதும் இந்த எதிர்ப்பின் காரணமாகவே விகிதாசார முறையினதும் தொகுதி வாரி முறையினதும் கலப்பு முறையொன்றை அறிமுகப்படுத்துவதாக அரசாங்கம் வாக்குறுதியளித்து இருந்தது.

ஏதோ ஒரு காரணத்தால் ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு இப்போது பின்வாங்குகிறது போலும். ஆனால், அதற்காகவும் அரசியலமைப்பை திருத்த வேண்டியிருக்கிறது. ஏனெனில், விகிதாசார தேர்தல் முறையானது சாதாரண சட்டமொன்றின் மூலமாக அல்லாது அரசியலமைப்பின் மூலமாகவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, ஐக்கிய தேசியக் கட்சியையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் கட்டுப்படுத்திக்கொள்ள முடிந்துள்ளது. எனவே, அரசியலமைப்பு மாற்றத்துக்கான மூன்றில் இரண்டு வாக்குகளைப் பெறுவதற்கு இதுவே சிறந்த சந்தர்ப்பமாகும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறை தொடர்பாகவும் அரசாங்கம் தாம் வாக்குறுதியளித்ததை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவில்லை. நிறைவேற்று ஜனாதிபதியின் சில அதிகாரங்களை குறைக்கவே 19 ஆவது அரசியலமைப்பு திருத்த வரைவு சிபாரிசு செய்கிறது. அதன் பிரகாரம், அமைச்சர்களை நியமிக்கவோ அல்லது அமைச்சர்களுக்குரிய விடயங்களை தீர்மானிக்கவோ ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை. இந்த வரைவின் மூலம் அந்த அதிகாரம் பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதவேளை, 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு 18 ஆவது திருத்தத்தின் மூலம் இல்லாதொழிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களும் அவற்றை நியமிக்கும் அரசியலமைப்புச் சபையும் 19 ஆவது திருத்தத்தின் மூலம் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, ஜனாதிபதி நினைத்தவாறு நாட்டின் பிரதான பதவிகளுக்கு ஆட்களை நியமிக்க முடியாது. அதற்காக அவர் அரசியல மைப்புச் சபையின் அங்கிகாரத்தை பெறவேண்டும். ஆனால், மாகாண ஆளுநர்களை நியமிப்பதில் ஜனாதிபதி சுயமாக இயங்க முடியும்.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை கவிழ்க்க முன்னணியில் நின்று செயற்பட்ட, மாதுளுவாவே சோபித தேரரின் நீதியான சமூகமொன்றுக்கான தேசிய இயக்கம், அத்துரலியரத்ன தேரரின் தலைமையிலான பிவிதுருஹெட்டக் தேசிய சபை, மக்கள் வடுதலை முன்னணி, ஜாதிக ஹெறல உறுமய போன்ற அமைப்புக்களில் ஹெறல உறுமய தவிர்ந்த ஏனைய சகல அமைப்புக்களும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றா கவே இரத்துச்செய்து நாடாளுமன்றத்துக்கு நிறைவேற்று அதிகாரத்தை வழங்க வேண்டும் என்றே கூறி வந்தன. ஹெறல உறுமய மட்டும் ஜனாதிபதியின் சில அதிகாரங்களை குறைத்தால் போதுமானது என்றது.

ஹெறல உறுமயவின் பிரதான நபர், அமைச்சர் சம்பிக்க ரணவக் கவே. அவரது அழுத்தத்தினாலேயே அரசாங்கம், நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்யாது ஜனாதிபதியின் சில அதிகாரங்களை மட்டும் குறைக்கும் வகையில் 19 ஆவது அரசிய லமைப்புத் திருத்த வரைவை முன்வைத்துள்ளதாக சிலர் கூறுகின்றனர்.

சம்பிக்க ரணவக்க, எதிர்காலத்தில் ஜனாதிபதியாக வரும் நோக்கத்திலேயே நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக இரத்துச் செய்வதை விரும்பவில்லை என சோபித்த தேரர் தலைமை தாங்கும் நதியான சமூகமொன்றுக்கான தேசிய அமைபபின் முக்கியஸ்தர்களில் ஒருவரான கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவஸ்ரீ கூறுகிறார். இது சிறுபான்மை மக்களுக்கு ஒரு திடுக்கிடும் தகவலாக அமையும் என்பதில் சந்தேகமே இல்லை.

நிறைவேற்று ஜனாதிபதி, சிறுபான்மை மக்களுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றமொன்றைப் போல் செயற்படுவார் என ஒரு காலத்தில் முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் காலஞ்சென்ற எம்.எச்.எம். அஷ்ரப கூறி வந்தார். ஒருவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு சிறுபான்மை மக்களின் வாக்குகள் நிச்சயமாக அவசியமாகும் என்பதால் அவர் கட்டாயம் அம் மக்களின் கோரிக்கைகளை கருத்திற் கொள்ள வேண்டியிருக்கும் என அஷ்ரப் அப்போது வாதாடினார்.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அஷ்ரபின் வாதத்தை பொய்யாக்கினார். ஒருவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு சிறுபான்மை மக்களின் வாக்குகள் நிச்சயமாக அவசியமாகும் என்பது உண்மைதான். அது கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தெட்டத் தெளிவாக இருந்தது.

உண்மையிலேயே கடந்த தேர்தலின் போது, மைத்திரிபாலவின் வெற்றியை நிர்ணயித்தவர்கள் சிறுபான்மை மக்களே. ஆனால், ஒரு கடும் இனவாதி ஜனாதிபதியானால் அவர் இந்த உண்மையை புறக்கணிக்கக் கூடும் என்பதை ராஜபக்ஷ புலப்படுத்தி விட்டுச் சென்றிருக்கிறார். அவர், அதன் விளைவுகளை இப்போது அனுபவிக்கிறார் என்பது வேறு விடயம். ஆனால், மற்றொரு கடும் இனவாதி ஜனாதி பதியானால் அவர் இந்த உண்மையை கருத்திற் கொண்டு செயற்படுவார் என்பதற் கும் உத்தரவாதம் இல்லை. எனவே, நிறை வேற்று ஜனாதிபதி முறை தொடர்பாக தற்போது அரசியல் அரங்கில் காணப்படும் நகர்வுகள், சிறுபான்மை மக்கள் உதாசீனப்படுத்தக் கூடியவையல்ல.

ஜனாதிபதி, நாடாளுமன்றத்துக்கு வகை சொல்லும் வகையில் 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் அமையும் என அரசாங்கத்தின் தலைவர்கள் கூறினார்கள். அத் திருத்தத்தில் அதைப் பற்றி ஒரு வாசகமும் இருக்கிறது. ஆனால், அதன்மூலம் ஜனாதிபதி, நாடாளுமன்றத்துக்கு வகைசொல்லும் நிலை ஏற்படுமா என்பது சந்தேகமே. ஏனெனில், ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு வகை சொல்ல வேண்டும் என்று சம்பந்தப்பட்ட வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர அவர் எவ்வாறு வகை சொல்லப் போகிறார் என்பது பற்றி அதில் குறிப்பிடப்படவில்லை.

புதிய நகல் திருத்தத்தின்படி, முப்பது அமைச்சர்களே இருப்பர். பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் மொத்தமாக 40 பேர் இருப்பர். ஆனால், தேசிய அரசாங்கம் ஒன்று உருவானால் 45 அமைச்சர்களும் 45 பிரதி அமைச்சர்களும் நியமிக்கப்படுவர். தேசிய அரசாங்கம் என்பது, உண்மையிலேயே தேசிய நெருக்கடி நிலையொன்றின் காரணமாகத்தான் உருவாக்கப்படுமாக இருந்தால், அதனை சமபந்தப்பட்ட கட்சிகள் உணர வேண்டும். அவ்வாறாயின் அவர்கள மேலதிகமாக அமைச்சுப் பதவிகள் வேண்டும் என்று கேட்க மாட்டார்கள்.

அதேவேளை, தேசிய அரசாங்கம் என்று கூறிக் கொண்டு பிரதான கட்சிகள் ஒன்றுசேரும் நிலை ஏற்பட்டால், சிறுபான்மைக் கட்சிகள் புறக்கணிக்கப்படும் நிலையும் ஏற்படலாம். எனவே, தத்தமது நிலையை பலப்படுத்திக் கொள்வதற்காகத்தான் அரசாங்கத்தின் தலைவர்கள் அரசியலமைப்பை மாற்றப் போகிறார்களா என்ற சந்தேகமும் ஏற்படுகிறது.

-எம்.எஸ்.எம்.ஐயூப்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

## நிதியமைச்சர் தெரிவிப்பு

**(கொழும்பு)— நாட்டின் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதி செய்ய இந்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதி மைத்திரிபாலவின் சீன விஜயத்தின் போது பொருளாதார சந்தர்ப்பங்கள் தொடர்பிலும் பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளது.

தற்போது ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அரசாங்கம் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் அரசாங்கமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

சீன ஜனாதிபதியும் பிரதமரும் ஊழல் மோசடிகளுக்கு எதிராக செயற்படுவார்கள்.

ஜனாதிபதி மைத்திரிபாலவின் சீன விஜயத்தின் போது துறைமுக நகரத் திட்டம் குறித்தும் பேசப்பட உள்ளது.

பொருளாதாரம் தொடர்பில் மிக விரிவாக ஆராயப்படும் என ரவி கருணாநாயக்க சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர் காணலில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-5)

# யுவதிக்கு மன்னிப்பு வழங்குமாறுகோரி கிழக்கு முதல்வர் ஜனாதிபதிக்கு கடிதம்

மட்டக்களப்பு சித்தாண்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி உதயசிறி (வயது-27) என்ற யுவதி சிகிரியா ஓவியத்தில் தனது பெயரை எழுதினார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் சிறைவாசம் அனுபவித்து வருகின்றார்.

சிறைவாசம் அனுபவிக்கும் குறித்த யுவதிக்கு மன்னிப்பு வழங்குமாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

குறித்த யுவதிக்கு மன்னிப்பு வழங்குதல் தொடர்பாக நேற்று முன்தினம் கொழும்பில் வைத்து கிழக்கு மாகாண முதலமைச்சர் முக்கிய அமைச்சர்கள் பலருடனும் கலந்தாலோசனை நடத்தினார்.

குறித்த யுவதிக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய தேவையான சகல நடவடிக்கைகளையும் தான் மேற்கொள்ளவுள்ளதாக கூறிய முதலமைச்சர், இதன் பின்னர் சிகிரியா மாத்திரமன்றி எங்கு சுற்றுலா சென்றாலும் சட்ட, விதி முறைகளை மாணவர்களுக்கு அல்லது தம்முடன் அழைத்துச் செல்லும் ஏனையோருக்கு அறிவுரையாக வழங்கி அழைத்து செல்லுதல் கட்டாயமாகும் என்றும் தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் கல்முனை மாணவி ஒருவரும் குறித்த சிகிரிய சுவரில் எழுதியதால் கைது செய்யப்பட்டு பலரின் முயற்சிகளுக்கு மத்தியில் விடுதலை செய்யப்பட்டதும் நானறிந்தேன்.

ஆனால் மீண்டும் கல்முனை பாடசாலை மாணவிக்கு நீதிமன்றத்தால் அழைப்பாணை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக எனக்கு தகவல் கிடைத்துள்ளது.

அது சம்பந்தமாகவும் குறிப்பிட்ட அதிகாரிகளுடன் தொடர்புகளை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமத் மேலும் தெவித்தார். (இ-5)

# அரசாங்கத்திற்கு சொந்தமான 23 வாகனங்கள் மகிந்தவிடம்

## விரைவில் பறிமுதலாகும் என ராஜித தெரிவிப்பு

சட்டவிரோதமான முறையில் அரசுக்குச் சொந்தமான 23 வாகனங்களை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வைத்துள்ளார் என்றும், இதனை பறிமுதல் செய்வதற்கு புதிய அரசுக்கு பூரண அதிகாரம் உள்ளது என்றும், அது மட்டுமல்லாது உயர்நீதிமன்ற அனுமதியும் உள்ளது என்றும் சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள எம்.பிக்கள் தற்போது தேசிய அரசுடன் இணைந்து செயற்பட தீர்மானித்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுள்ளனர். இது தொடர்பில் பலரும் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

எனினும், இந்த விடயம் நாங்கள் தேர்தலின்போது கூறிய விடயமே. எதிர்க்கட்சிகளை இணைத்துக் கொண்டே எமது அரசியலை முன்னெடுப்போம் என்று நாங்கள் தெரிவித்திருந்தோம். இதே வேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியைச் சந்தித்தபோது அவர் பயன்படுத்திய 23 வாகனங்களை எடுத்துச் சென்றுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு பெருமளவு அரச வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதி கிடையாது. ஆகக்கூடியது 3 வாகனங்களையே அவர் வைத்திருக்க முடியும். இந்த விடயத்தில் அந்த வாகனங்களை பறிமுதல் செய்வதற்கு புதிய அரசுக்கு பூரண அதிகாரம் உள்ளது.

எனவே, மகிந்தவிடம் உள்ள அரச வாகனங்களை நாம் பறிமுதல் செய்வோம். இதற்கு உயர் நீதிமன்ற அனுமதியும் உள்ளது. இதேவேளை, முன்னாள் பிரதமர்களுக்கு விசேட கொடுப்பனவு, வாகனம் மற்றும் எரிபொருள் என்பன வழங்குவதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம். அதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது. இதற்கமைய அவர்களுக்கு மாதாந்தம் 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## உழைப்பும் அருளும்

மனித உழைப்பும் இறைவனின் அருளும் இருந்தால் நிச்சயமாக வாழ்க்கையில் வெற்றிபெறமுடியும் என்பதற்கு இரண்டு சம்பவங்களை உதாரணங்களாகச் சொல்கிறார்கள். ஒருநாள் டால்ஸ்டாய் என்கிற அறிஞரிடம் ஒருத்தர் கேட்டாராம் எனக்கு ஏதாவது உதவி பண்ணமுடியுமா என்று. பின்பு மிகவும் கஷ்டத்தில் இருக்கிறேன். பணம் கொடுங்கள் என்று அவரிடம் கேட்டாராம்.

ஏறக்குறைய அது அவர் பிச்சை எடுக்கிறது போலத்தான் இருந்தது. ஆனால் டால்ஸ்டாய் உடனே அவருக்குச் சில விடயங்களை உணர்த்த வேண்டும் என்று ஆசைப்பட்டாராம். உங்களுக்கு நிறையப் பணம் தருகிறேன். 20 ஆயிரம் ரூபாய் தருகிறேன். அதை வாங்கிக்கொண்டு உங்கள் இரண்டு கண்களையும் எனக்குத் தரமுடியுமா என்று கேட்டாராம்.

அய்யய்யோ என்னால் அது முடியாது என்றாராம் வந்தவர். உங்கள் கைகளையாவது கொடுங்கள். உங்கள் ஒவ்வொரு கைக்கும் 10 ஆயிரம் ரூபாய் தருகிறேன் என்றாராம் அவர். அய்யய்யோ அது முடியாது என்றாராம் அந்த மனிதர். சரி உங்கள் காதுகளைக் கொடுங்கள். அதற்குப் பணம் தருகிறேன் என்றாராம். ஐயோ உடல் உறுப்புக்களைத் தர நான் தயாராக இல்லை என்றாராம் அவர்.

சரி உங்கள் மூளையையாவது கொடுங்கள். 10 இலட்சம் தருகிறேன் என்றார். அதையும் அவர் தரமாட்டேன் என்றார் அவர். அப்பொழுதுதான் டால்ஸ்டாய் சொல்கிறார் நான் இதுவரை சொன்ன தொகையையெல்லாம் கூட்டிப்பாருங்கள். கோடியைத் தாண்டும். இவ்வளவு கோடி ரூபாய் பெறுமதியுள்ள உறுப்புக்களை உடம்பில் வைத்துக்கொண்டு அதனால் உழைத்துப் பணம் சம்பாதிக்காமல் யாராவது பணம்தரமாட்டார்களா என்று அலைகிறீர்களே? இறைவன் உங்களுக்கு எவ்வளவு வலிமையான உறுப்புக்களைக் கொடுத்திருக்கிறான். அதைப் பயன்படுத்தவேண்டாமா? என்று சொல்லி அவர் தவறை அவருக்கு உணர்த்தினார்.

ஊனமுற்றவர்கள்கூட தங்களுடைய ஆற்றலைக் காட்டி ஏதாவது துறையில் முன்னேறி வாழவேண்டும் என்று நினைக்கும் போது உறுப்புக்கள் எல்லாம் நன்றாகவே இருக்கும்போது சில பேருக்கு யாரிடமாவது கேட்டுவாங்கிச் சாப்பிட்டுக்கொண்டு வாழ மாட்டோமா என்ற இந்த எண்ணம் இருக்கிறது பாருங்கள். அதை அவர்கள் போக்கிக்கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சம்பவம் இங்கே சொல்லப்படுகிறது.

அதுபோலவே இறைவனுடைய அருள் என்று சொல்கிறோமல்லவா. அதற்கும் வாய்ப்புக்கள் வரும்போது இறைவனுடைய அருள் வெளிப்படும். கடலில் ஒருகப்பல் பயணம் செய்தது. திடீர் என்று புயற்காற்று வீசியது. அந்தக் கப்பல் மூழ்கிவிட்டது. அநேகமாக எல்லோரும் உயிரிழக்கக்கூடிய நிலையில் இருந்தபொழுது ஒருவர் மட்டும் உயிர் பிழைத்தார். நீச்சல் அடித்து அடித்து போய்க் கொண்டிருந்தார் அவர். அப்போது பார்த்தால் ஒரு சிறிய தீவு வந்தது. அந்தத் தீவில் வேறு யாருமே இல்லை. தன்னுடைய முதுகில் அமர்ந்து வந்த சில உடைமைப் பொருட்கள்தான் அவரிடம் அப்போதைக்கு இருந்தது. இப்பொழுது அதை வைத்துக் கொண்டார். ஆங்காங்கே இருந்த சில மரங்களை எடுத்தார். ஒருசிறிய குடிசை மாதிரி போட்டுக்கொண்டார். அந்தக்குடிசைக்குள்ளே தங்க ஆரம்பித்தார். தீப்பெட்டியெல்லாம் கூட அவரிடம் இருந்தது.

அக்கம்பக்கத்தில் இருக்கிற சின்னச் சின்ன பிராணிகளை வேட்டையாடிவந்து நெருப்பில் அதைப்பொசுக்கி அதைச் சாப்பிடும் வழக்கத்தை உருவாக்கினார். எத்தனைநாள் இப்படியே போக முடியும். அதனால் ஆண்டவனைப் பார்த்து பிரார்த்தனை செய்தார். இறைவா! ஏதாவது ஒரு கப்பல் என்னைக் கண்டுபிடித்து என்னைப் பூமிக்குக் கொண்டு போவதற்கு ஏற்பாடு செய்யக்கூடாதா? என்று ஒவ்வொரு நாளும் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார் அவர்.

ஒருநாள் வேட்டையாடுவதற்காக வெளியில் போய்விட்டு வரும் போது பார்த்தால் அவர் போட்டிருந்த அந்தச் சிறிய குடிசையும் எப்படியோ தீப்பிடித்து எரிந்து போயிருந்தது. உடனே இவருக்கு மனதில் ரொம்பசோகம். இறைவா! நான் இவ்வளவு பிரார்த்தனை செய்தும்கூட நான் இருக்கின்ற குடிசையை நீ எரித்துவிட்டாயே! இது என்ன நியாயம் என்று அழுது புலம்பினாராம். ஆனால் சிறிது நேரத்தில் பார்த்தால் ஒரு சிறிய கப்பல் அந்தத் தீவுப்பக்கமாக ஒதுங்கியது. கடலில் மூழ்கியவர்களைத் தேட வந்த கப்பல் அது. அங்கிருந்து கைகளை அவர்கள் அசைத்திருக்கிறார்கள். அதைப் பார்த்து இவர் வேகமாக அதை நோக்கி ஓடினார். அவர்களும் இவரைக் காப்பாற்றி அவர்கள் கப்பலில் ஏற்றிக்கொண்டார்கள்.

நான் இங்கே இருக்கிறதை எப்படி கண்டுபிடித்தீர்கள் என்று கேட்டார் இவர். அப்பொழுது அவர்கள் சொன்னார்கள். இந்தத் தீவில் புகை வருவதை நாங்கள் பார்த்தோம். புகை வருவதால் இங்கே மனிதர்கள் யாராவது இருக்கிறார்களா என்று பார்க்க வந்தோம். இங்கே உங்களைப் பார்த்தோம். அதனால் உங்களைக் காப்பாற்றுகிற வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது என்றார்கள்.

அப்பொழுதுதான் அவர் இறைவனை நினைத்திருக்கிறார். இந்தக் குடிசையை எரிய வைத்தது மூலமாக அந்தப் புகையைக் காட்டி தனக்கு உதவி செய்யக் கூடியவர்களைக் கொண்டுவந்து சேர்த்த அந்த இறைவனுக்கு அவர் நன்றி சொன்னார்.

இந்தப்புகை வேறுவிதமான விளைவுகளையும் ஏற்படுத்தும். சுதந்திரப் போராட்டக்காலத்தில் ராஜேந்திரபிரசாத் ஒரு தடவை பயணம் செய்து கொண்டிருந்தார். பக்கத்தில் இருந்த ஒருவர் சிகரெட் புகைத்துக்கொண்டிருந்திருக்கிறார். அதை அவருக்குச் சுட்டிக்காட்டவேண்டும் என்பதற்காக இந்தச் சிகரெட் உன்னுடையதுதானே என்றார். ஆமாம் என்னுடையதுதான் என்றார் அவர். அப்படியாயின் அதில் இருந்து வருகின்ற புகையும் உங்களுக்குச் சொந்தமானதுதானே என்றாராம் அவர். ஆமாம். அப்படியாயின் அந்தப்புகையை நீங்கள் வைத்திருக்கவேண்டியதுதானே. ஏன் என் மேல் படுகின்றமாதிரி அனுப்புகிறீர்கள் என்றார். எவ்வளவு நாசூக்காக எதிராளியின் தவறை இவர் சுட்டிக்காட்டியிருக்கிறார் பாருங்கள்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 ஆவது ஆண்டில் தடம் பதிக்கும் நொதர்ன் சென்ட்ரல் வைத்தியசாலை

## விரைவில் டயலிசிஸ், சிறுநீரக மாற்று சிகிச்சைப் பிரிவுகள் அமைக்க திட்டம்

**வைத்தியசாலை ஸ்தாபகரும் தலைவருமான எஸ்.பி.சாமி**



யாழ்ப்பாண மக்களுக்கு சிறந்த வைத்திய சேவையை வழங்கிவரும் நொதர்ன் சென்ரல் வைத்தியசாலை இன்று மார்ச் மாதம் 25 ஆம் திகதி 4 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது.

கடந்த 3 வருட காலமாக யாழ். மக்களுக்கு மட்டுமல்லாது வடக்கு கிழக்கில் வாழும் மக்களுக்கும் நியாயமான கட்டணங்களில் தரமான வைத்தியசேவை வழங்கிவரும் நொதர்ன் சென்ட்ரல் வைத்தியசாலை எதிர்காலத்தில் மக்கள் நலன் கருதி மேலும் பல நவீன வைத்திய சேவைகளை வழங்கவுள்ளதாகவும் இதன் முதற்கட்டமான கொழும்பு வெஸ்டர்ன் இன்போமரி வைத்தியசாலையுடன் இணைந்து விரைவில் டயலிசிஸ் சிகிச்சைப் பிரிவும் அதனைத் தொடர்ந்து சிறுநீரக மாற்று சிகிச்சைப் பிரிவும் ஆரம்பிக்கவுள்ளதாக நொதர்ன் சென்ட்ரல் வைத்தியசாலையின் ஸ்தாபகரும் தலைவருமான எஸ்.பி. சாமி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், நொதர்ன் சென்ட்ரல் வைத்தியசாலையின் 3 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வழங்கிய நேர்கணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது,

கடந்த 6 மாதகாலத்தில் 28 இதய சத்திர சிகிக்சைகளை மேற்கொண்டுள்ளோம். கடந்த 7 மாதகாலமாக ஐ.வி.எப். சிகிச்சை முறையான சோதனைக் குழாய் குழந்தை சிகிச்சை முறைகளை மேற்கொண்டு வருகிறோம். பல வருடங்களுக்கு முன்னால் வடக்குப் பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் வாழும் மக்கள் நவீன சிகிச்சை வசதிகளைப் பெற முடியாத நிலை இருந்து வந்தது. இவர்கள் கொழும்புக்கே வந்து தமது சிகிச்சைகளை பெறுவதற்கு செல்ல வேண்டிய நிலைக்கு உட்பட்டு வந்தனர். இவ்வாறானவர்களின் சிரமத்தை நீக்கும் பொருட்டு பிந்திய சிகிச்சை வசதிகளை இம்மக்களும் எவ்வித இடர்பாடு மின்றி தமது சொந்த மண்ணில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவாவில் உருவாக்கப்பட்டதே நொதர்ன சென்ட்ரல் வைத்தியசாலை.

எவ்வித சுயநல நோக்கமும் இன்றி நியாயமான கட்டணங்களில் நோயாளிகளுக்



குத் தேவையான தரமான மருத்துவ சேவையை நாம் வழங்கி வருகின்றோம். எமது வைத்தியசாலையில் இருதய சத்திரசிகிச்சையையும் ணூாய் சிகிச்சை முறையையும் நாம் ஆரம்பித்தமை நோயாளிகளுக்கான பெரும் வரப்பிரசாதமாகவே கருதுகிறோம்.

மேலும் குழந்தைகள் இல்லாதவர்கள் சோதனைக்குழாய் முறை மூலம் குழந்தையைப் பெற்றுக்கொள்வது எமது மண்ணில் கனவாகவே இருந்து வந்தது. இவ்வாறானவர்கள் பெரும் பணத்தினை செலவழித்து இந்தியாவுக்குச் சென்று அங்கு தங்கியிருந்து சோதனைக்குழாய் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்கான சிகிச்சை முறைகளை மேற்கொண்டு வந்தனர். இந்த நிலை தொடரக்கூடாது என்ற நல்நோக்கத்திலும் சேவை மனப்பான்மையிலும் சோதனைக்குழாய் குழந்தை (IVF) சிகிச்சை முறையை இந்த வைத்தியசாலையில் வெற்றிகரமாக வழங்கி வருகிறோம் என்று அவர் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், சாதாரண சத்திரசிகிச்சைகள், நரம்பியல் சத்திர சிகிச்சைகள், கண் சத்திரசிகிச்சை, காது, மூக்கு, தொண்டை (ENT) பகுதிகளுக்கான சத்திர சிகிச்சை, பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை போன்ற சத்திரசிகிச்சைகளும் இவ் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் மகப்பேற்று சிகிச்சை நிலையத்தில் சாதா ரண மற்றும் சத்திரசிகிச்சை மூலம் குழந் தைகள் பிரசவம் இடம்பெற்று வருகிறது.

அல்ட்ராசாவுண்ட், எக்ஸ்ரே E.C.G, EMG, EEG, ECHO உட்பட அனைத்து ஸ்கானிங் பரிசோதனைகளும் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இரண்டு அல்லது மூன்று மாதங்களில் னியூணூா ஸ்கானிங் வசதியும் ஏற்படுத்தப்படவுள்ளது. மக்களுக்கு இவ்வாறான வசதிகளை வழங்கக் கிடைத்தமையை பெரும் வரப்பிரசாதமாகவே கருதுகிறோம்.

எமது வைத்தியசாலையில் 24 மணி நேரம் இயங்கும் ஆய்வுகூடமும் மருத்துவமும் உள்ளன. எமது வைத்திசாலை 24 மணிநேரமும் இயங்கும் வைத்திசாலை என்பதால் மக்கள் எந்நேரமும் இங்கு தேவையான சிகிச்சையை பெற்றுக்கொள்ளலாம்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது வைத்தியசாலை பெரும் வெற்றியுடன் தனது சேவையைத் தொடர்ந்து வருவதற்கு இங்கு பணியாற்றும் வைத்திய ஆலோசகர்களும் வைத்தியர்களுமே பெரும் காரணமாவர். எவ்வித பிரதிபலனும் கருதாது அவர்கள் ஆற்றும் மகத்தான வைத்தியப்பணி காரணமாகவே எமது வைத்தியசாலை வெற்றிகரமாக இயங்கிவருகிறது. இத்தருணத்தில் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களுக்கு தொடர்ந்தும் எமது ஒத்துழைப்பை வழங்க கடமைப்பட்டுள்ளோம் என்றார்.

# பிட் அடிப்பதிலும் லேட்டஸ்ட் தொழில்நுட்பம்!






"கொப்பி அடித்து வாழ்வரே வாழ்வார் மற்றவரெல்லாம் பெயில் ஆகி போவார் "என்ற பிட்டுலகின் பொன் மொழியில் நவீன பொன்மொழி "அகர முதல பிட்டெல்லாம் வாட்ஸ் அப் பிட்டாகுமா? "என்பதே. லேட்டஸ்ட் technology என நாம் நினைத்திருப்பதை சீனர்கள் சில வருடங்களுக்கு முன்னரே செய்து விட்டார்கள். நாம்தான் இதிலும் தாமதம்.

உலகிலேயே சீனாவில் உள்ள மாணவர்கள்தான் மிகவும் அதி கூடிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, பரீட்சையில் கொப்பி அடிக்கிறார்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சீனாவில் உள்ள மாணவர்கள் HI TECH கில்தான் திருட்டுத்தனத்தை செய்கிறார்கள்.

இவர்களிடம்தான் ஜேம்ஸ் பாண்ட் ஸ்டைல் (007) ஜாக்கெட் உள்ளதாம். அதில் சிறிய கேமரா, தொலைபேசி, ஒட்டுக் கேட்க்கும் கருவி (காதுக்குள் மாட்டுவது) எல்லாம் இருக்கிறது.

மேலும் சிறிய ரக பேனாவிலுள்ள, கேமரா வில் பரீட்சைப் பேப்பரை அப்படியே படம் எடுத்து, வெளியே உள்ள நபர்களுக்கு அனுப்புகிறார்கள். வெளியே உள்ள நபர்கள் அதனை வாசித்து, உடனே பதிலை சொல்ல, காதுகளில் உள்ள சிறிய உள் வாங்கியில் அதனைக் கேட்டு எழுதுகிறார்கள் மாணவர்கள்.

இதற்கு மேல் ஒருபடி மேலேபோய், புற ஊதாக் கதிர்கள் (அல்ரா வைலட்) பேனாக்களை கொண்டு, விடைகளை கைகளில்



எழுதிக்கொண்டு, பரீட்சை மண்டபத்திற்கு சென்றுவிடுகிறார்களாம்.

பின்னர் தாம் கொண்டு வந்துள்ள பேனாவில் உள்ள புற ஊதாக்கதிர்களை கண்டறியும் லைட் (அதனை அடித்து பார்த்தால்) கைகளில் உள்ள விடை தெரிந்துவிடுமாம். ஆனால் இவர்கள் கைகளில் என்ன எழுதி வைத்திருக்கிறார்கள் என்று சாதாரண கண்களால் பார்த்தால் எவருக்கும் எதுவும் தெரியாது. இப்படி அதி கூடிய தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்து கொப்பி அடிக்கிறார்கள் சீன மாணவர்கள். இதனால் சீனாவில் பெரிய பரீட்சைகள் நடக்கும் வேளை, போலீசார் அழைக்கப்பட்டு பலத்த சோதனைகள் நடத்தப்படுகிறதாம். இதன் பின்னரே மாணவர்கள் உள்ளே அனுமதிக்கப் படுகிறார்கள்.

பரீட்சைக்கு எப்படி கொப்பி அடிக்க முடியும் என்று சொல்லித்தர மற்றும் அதற்கான பொருட்களை விற்க என்று அங்கே பல கடைகள் உள்ளது.

**யூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்துக்குள்ளான விமானத்தில் 16 பாடசாலை மாணவர்கள்!

விபத்துக்குள்ளான ஜெர்மன்விங்ஸ் விமானத்தில் ஜெர்மன் பாடசாலை ஒன்றைச் சேர்ந்த 16 மாணவர்கள் இருந்தனர் என்று அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரான்ஸின் ஆல்ப்ஸ் மலைப் பகுதியில் விபத்துக்குள்ளான ஜெர்மன்விங்ஸ் விமானத்தின் சிதிலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அந்த விமானத்தில் ஜெர்மன் பாடசாலை ஒன்றைச் சேர்ந்த 16 மாணவர்கள் இருந்தனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனிடையே விமானம் பறத்தல் குறித்த தகவல்களை, தரவுகளை பதிவு செய்யும் கறுப்புப் பெட்டிகளில் ஒன்று விபத்து நடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பிரெஞ்சு உள்துறை அமைச்சர் பெர்னார்ட் கேஸிநேவ் தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்தப் பெட்டி, விமானம் பறக்கும்போது அது பறப்பது குறித்த தொழில்நுட்பத் தரவுகளை பதிவு செய்யும் கருவியா அல்லது கடைசி நேரத்தில் விமானிகளின் அறையில்(காக்பிட்) நடக்கும் உரையாடல்கள் மற்றும் ஒலிகளைப் பதிவு செய்யும் கருவியா என்பது தெளிவாகவில்லை.

விபத்துக்குள்ள விமானம் தூள் தூளாகச் சிதறியுள்ளதாகவும், எந்தவொரு பகுதியும் இதுவரை முழுமையாக கிடைக்கவில்லை என்று பிரெஞ்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். விமானத்தில் பயணித்த 150 பேரும் உயிரிழந்து விட்டதாகக் கருதப்படுகிறது. (இ-5)

# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் 400 சிறுவர்கள் இணைப்பு

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு



(பெய்ரூட்)

**சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் முக்கிய இரண்டு நகரங்களில் ஆட்சேர்ப்பு மையங்களை நிறுவி 400 சிறுவர்களை தமது அமைப்பில் இணைத்துள்ளதாக சிரியாவின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றஞ்சாட்டியுள்ளது.**

சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கடந்த ஆண்டு ஜூன் 28ஆம் திகதி தனிநாடு உருவாக்கினார்கள். அதில் இருந்து தங்கள் இயக்கத்துக்கு ஆட்களை சேர்த்து வருகின்றனர்.

குறிப்பாக தங்கள் இயக்கத்தில் சிறுவர்களை சேர்க்க கவர்ச் சிகரமான திட்டங்களை அறிவித்துள்ளனர். அவர்களை தங்கள் இயக்கத்தின் சிங்க குட்டிகள் என அழைகின்றனர்.

சிரியாவில் அல்மாயாதின் மற்றும் அல்பொகாமல் ஆகிய 2 நகரங்களில் ஆட்சேர்ப்பு முகாம்களை அமைத்துள்ளனர். மேலும் சிரியாவில் தங்கள் பகுதியில் வாழும் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களிடம் சென்று அவர்களது குழந்தைகளை தங்கள் முகாமில் இராணுவம் உள்ளிட்ட பயிற்சி பெற அனுப்பும்படி தூண்டுகின்றனர்.

அங்கு குழந்தைகளின் மனதில் வன்முறையை விதைக்கின்றனர். ஆயுதங்கள் கையாள்வது எதிரிகளை தாக்கிசமாளிப்பது உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கின்றனர். அவர்களுக்கு பண ஆசை, ஆயுதங்கள் மற்றும் கார் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.

இதுபோன்ற சொகுசு வாழ்க்கை ஆசையில் இதுவரை 400 சிறுவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் இணைந்துள்ளனர். இந்த தகவலை சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பு துறை தெரிவித்துள்ளது.

மேலும், வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமானவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தில் சேர ஆர்வமாக சிரியா வருகின்றனர். அதுபோன்று அவுஸ்திரேலியாவில் இருந்து புறப்பட்ட 200 பேர் தடுத்து நிறுத்தப்பட்டனர். அவர்களில் 3 பேர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## அந்தரத்தில் நின்று அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திய மனிதர்



இஸ்ரேலில் மாயாஜாலக் கலைஞர் ஒருவர் அந்தரத்தில் நின்று அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார். இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ்வில் உள்ள வணிக வளாகத்தில் ஹெசிடீன் என்ற மாயாஜாலக் கலைஞர், அங்கு உள்ள சுவர் ஒன்றில் எந்த கைபிடியும் இல்லாமல் அந்தரத்தில் தொங்கியவாறே நின்றார்.

இதனை அங்கு உள்ள நடைபாதையில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து ரசித்தனர். இதேபோல் அந்தரத்தில் தொங்கியவாறே அவர் ஐந்து மணி நேரம் நின்றார். தற்போது தான் முதன்முறையாக காயங்கள் ஏதுமின்றி இந்த மாயாஜாலத்தை நிகழ்த்தியுள்ளதாக ஹெசி டீன் தெரிவித்துள்ளார். (இ-5)

## பதவிக்காலம் குறித்து நெல்சன் மண்டேலா எழுதிய நினைவுக்குறிப்புக்கள் புத்தகமாகிறது



தென்னாபிரிக்காவில் நிறவெறி ஆட்சி முடிவுக்கு வந்த பின் முதல் ஜனாதிபதியாக தான் வகித்த பதவிக்காலம் பற்றி, நெல்சன் மண்டேலா எழுதிய நினைவுக் குறிப்புகள் அவரது மறைவுக்குப் பின்னர், அடுத்த ஆண்டு புத்தகமாக பிரசுரமாகிறது.

அவர் ஏற்கனவே எழுதி பெரிய எண்ணிக்கையில் விற்ற சுயசரிதையான, "A Long Walk to Freedom" என்ற நூலின் தொடராக அமையவிருக்கும் இந்தப் புத்தகம், நெல்சன் மண்டேலாவின் கையெழுத்து வரைவின் அடிப்படையில் அமைந்திருக்கும். இந்த கையெழுத்து வரைவின் அடிப்படையில், மண்டேலாவின் ஆலோசகர்கள், இந்த புத்தகத்துக்கு இறுதி வடிவம் தருவார்கள்.

மண்டேலா தனது ஆட்சிக் காலத்தில் எதிர்கொண்ட சிரமங்களையும், சமகால தென்னாப்பிரிக்காவில் நிலவும் பிளவுகளையும் பற்றி வெளிப்படையாக கூறும் ஒரு புத்தகமாக இது அமையும் என்று இதன் வெளியீட்டாளர்களான, பான் மாக்மில்லன் தெரிவிக்கிறது. நெல்சன் மண்டேலா 2013 டிசெம்பரில் காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## டிஸ்கோ நடனம் ஆடிய மிச்சேல் ஒபாமா!



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மனைவி மிச்சேல். இவரிடம் தொலைக்காட்சியில் [illegible] [illegible] பேட்டி எடுத்தார். அப்போது, ஜனாதிபதி பதவி காலம் முடிந்ததும் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறிய பின் அமைய இருக்கும் வாழ்க்கை குறித்தும், அவரது குழந்தைகளின் எதிர்காலம் குறித்தும் கேள்விகள் கேட்கப்பட்டன. அதற்கு மிச்சேல் ஒபாமா பதில் அளித்தார்.

பேட்டி முடிந்ததும் தொலைக்காட்சி நிலையத்தில் உள்ள நடன அரங்கில் நடைபெறும் டிஸ்கோ நடனத்தில் பங்கேற்கும்படி மிச்சேலை நிகழ்ச்சி நடத்துநர் டிஜெனரஸ் அழைப்பு விடுத்தார்.

அதை ஏற்றுக் கொண்ட மிச்சேல் அங்கு சென்று கலைஞர்களுடன் இணைந்து டிஸ்கோ நடனம் ஆடினார். இந்த நிகழ்ச்சி தொலைக்காட்சியிலும் யூ.டியூப்பிலும் ஒளிபரப்பாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ-5)

## எச்சரிக்கை

இங்கிலாந்து பாராளுமன்ற குழு, காசநோய் தாக்கம் பற்றி ஆராய்ந்து ஒரு அறிக்கையை அந்த நாட்டு பாராளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. அதில், எந்த மருந்துக்கும் கட்டுப்படாத கொடிய காசநோய் பரவ இருக்கிறது என்றும், இன்னும் 35 ஆண்டுகளில் இந்த நோய்க்கு உலகம் முழுவதும் 7 கோடியே 50 இலட்சம் பேர் பலியாகலாம் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்த நோய் தாக்கம் காரணமாக உலகின் பொருளாதாரம் ஒரு சதவீதம். அதாவது, ஐரோப்பிய நாடுகளின் ஒரு ஆண்டு உற்பத்தி அளவுக்கு பாதிக்கும் என்றும் அதில் கூறப்பட்டு இருக்கிறது.

எனவே, இப்போதே இந்த காசநோய் தடுப்பு நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்றும் அவர்கள் வற்புறுத்தியுள்ளனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசிலிருந்து விலக தாமதிக்கமாட்டேன்

## ஹிருணிகா எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்பார்த்தவை நடக்காது போனால் தாம் உட்பட்ட ஒவ்வொருவரும் அரசாங்கத்தில் இருந்து விலக தாமதிக்கமாட்டார்கள் என்று மேல் மாகாணசபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.

தாம் உட்பட்ட சில பெண்களே உயிராபத்துக்கு மத்தியிலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஜனாதிபதி தேர்தலின் போது ஆதரவளித்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் மைத்திரிபால தோல்வியடைய வேண்டும் என்பதற்காக பிரசாரம் செய்த பலருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் பலர் இப்போது சிறையில் இருக்க வேண்டியவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை முன்னாள் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவை மீண்டும் தேசிய அரசாங்கத்தில் அமைச்சராக நியமித்தமையை ஹிருணிகா கண்டித்துள்ளார்.

தம்மை பொறுத்தவரை பெண்களை மதிக்கத் தெரியாதவர்கள் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டியவர்கள் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

# 19ஆவது அரசியலமைப்பு முரண்பாட்டைத் தீர்க்க சர்வஜன வாக்கெடுப்பு

(கொழும்பு)

**19ஆவது அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள சில விடயங்கள் ஒன்றுக்கொன்று முரண்படுவதனால் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தும் நிலை ஏற்படும் என எதிரக்கட்சி தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் அதற்கு அரசாங்கமே பொறுப்பேற்று கொள்ள வேண்டும்.

குறிப்பாக 19ஆவது திருத்தச் சட்டத்தின்படி அமைச்சரவைக்கு தலைமை தாங்குபவர் யார் என்பது உள்ளிட்ட சில விடயங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு காணப்படுகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்பொன்றுக்கு செல்லாத முறையிலேயே இந்த அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் குறித்த முரண்பாடுகளின் காரணமாக சர் ஜன வாக்கெடுப்பொன்றை நடத்தும் நிலை ஏற்படலாம் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த சட்ட திருத்தம் சர்வஜன வாக்கெடுப்பிற்கு செல்லாத வகையிலேயே கொண்டு வரப்படும் என தெரிவித்த போதிலும், சர்வஜன வாக்கெடுப்பிற்கு செல்லும் நிலைமையையே தோற்றுவிக்கும்என அத்துரலிய ரத்ன தேரர் தெரிவிததுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இந்துசமய,தமிழிலக்கிய ஆய்வரங்கு

(கொழும்பு)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்துசமயம், தமிழிலக்கியம் தொடர்பாக வருடந்தோறும் ஆய்வரங்கொன்றைப் பல்வேறு கருப்பொருள்களின் அடிப்படையில் நிகழ்த்திவருகின்றது இத்தொடரின் ஓர் அம்சமாக இவ்வருடமும்9,10ஆம்திருமுறைகளானதிருவிசைப்பா, திருப்பல்லாண்டு திருமந்திரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு திருமுறைகளும் சைவத் திருநெறியும் என்னும் தலைப்பிலான ஆய்வரங்கினை ஏப்ரல் மாதம் 3,4,5ஆம் திகதிகளில் நடத்துவதற்கான எற்பாடுகளைத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

இவ்வாய்வரங்கானது திருமந்திரம்,திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியவை எடுத்தியம்பும் இலக்கியமரபு, இசைமரபு,திருமந்திரத்தில் சைவசித்தாந்தக் கருத்துக்கள், திருமந்திரத்தில் சைவப்பிரிவுகள், திருமந்திரப் பதிப்புக்கள், திருமந்திரமும் வாழ்வியலும்,திருமந்திரமும் சமூகமும், திருப்பல்லாண்டு, திருவிசைப்பா ஆகியவற்றின் பக்திச்சுவை, திருமந்திர உபதேசம் ஆகிய தலைப்புக்களின் கீழ் பல்வேறு அமர்வுகள் நடைபெறவுள்ளன.

ஆய்வரங்க அமர்வுகள் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சிறிய மண்டபத்தில் ஏப்ரல் 4,5 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம்மாலை 4 மணிவரைநடைபெறும்.

ஆய்வரங்குத் தொடக்க வைபவம் எதிர்வரும் 3 ஆம் திகதியன்று கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் பி.ப 4.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இவ்வைபவத்தின் பிரதம விருந்தினராக மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் தே.ம.சுவாமிநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்வாய்வரங்கில் திருப்பனந்தாள் ஆதீன இணைஅதிபர் தவத்திரு சுந்தரமூர்த்தி தம்பிரானின் அருளுரையும் பேராசிரியர் கி.சிவகுமாரின் சிறப்புச் சொற்பொழிவும் திருமுறைக் கலாநிதி திருத்தணி சுவாமிநாதனின் பண்ணிசை அரங்கமும் இடம்பெறும். இவ்வைபவத்தில்

* இலங்கைத் தமிழ் வழக்குச் சொற்கள்

*2014 ஆம் ஆண்டுநடைபெற்ற ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பான திருவாதவூரரும் சைவத்திரு நெறியும்

* திருமுறைகளும் சைவத்திரு நெறியும் என்னும் சிறப்புமலரும் வெளியிடப்படும்.

இந்நூல்களின் அறிமுகவுரையை பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா நிகழ்த்தவுள்ளார்.

எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை ஆய்வரங்க அமர்வுகள் காலை 9மணி முதல் மாலை 4 மணி வரையும் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் விரிவுரை மண்டபத்திலும் மாலை கலைநிகழ்ச்சிகள் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் மாலை 5மணி முதல் இரவு 8மணி வரையும் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினர்களாக மீள்குடியேற் றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் தே.ம. சுவாமிநாதனும் வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்வைபவத்தில் திருப்பனந்தாள் ஆதீன இணைஅதிபர் தவத்திரு சுந்தர மூர்த்தி தம்பிரானின் தலைமையில் பேராசிரியர் அரங்க ராமலிங்கம் (சென்னைப் பல்கலைக் கழகம்), பேராசிரியர் கி.சிவகுமார் ஆகியோரின் உரையரங்கமும் திருமுறைக் கலாநிதி திருத்தணிசுவாமிநாதன் குழுவினரின் பண்ணிசை அரங்கமும் இடம்பெறும்.

எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஆய்வரங்க அமர்வுகள் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்திலும் மாலை கலைநிகழ்ச்சிகள் கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்திலும் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தின் பிரதம விருந்தினர்களாக மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் தே.ம. சுவாமிநாதன், மேல்மாகாண ஆளுநர் கே.சி.லோகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்வைபவத்தில் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் அரங்கராமலிங்கத்தின் தலைமையில் பேராசிரியர் கி.சிவகுமார் தமிழ்நாடு, சோ.பத்மநாதன், முன்னாள் அதிபர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை,பலாலி அருள்மொழி, ஆசி கலாபூஷணம் வித்துவான் வசந்தா வைத்தியநா தன் சிறப்புச் சொற்பொழிவாளர் ஆகியோரின் உரையரங்கமும் திருமுறைக்கலாநிதி திருத்தணி சுவாமிநாதன் குழுவினரின் பண்ணிசை அரங்கமும் இடம்பெறும்.

இவ்வாய்வரங்கில் பார்வையாளர்களாகத் தமிழிலக்கியம், இந்து சமயம்,வரலாறு ஆகிய துறைகளில் ஆர்வம்மிக்க பல்கலைக்கழக மாணவர்கள்,பாடசாலை ஆசிரியர்கள், வெளிவாரிப் பட்டதாரிகள், மாணவர்கள்,உயர்தர வகுப்பில் இப்பாடங்களைக் கற்கும் மாணவர்கள் இந்து சமய, இலக்கிய ஆர்வம் மிக்கோர் அனைவரும் கலந்து பயன் பெறலாம் எனத் திணைக்களம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# நல்லாட்சி தொடர்பில் அளுத்கமகே அதிருப்தி

(கொழும்பு)

நல்லாட்சி எனக் கூறும் அரசாங்கம் தற்போது மாட்டு ஆட்சியை நடத்தி வருவதாக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

தற்போது அமைச்சுப் பதவிகளை வகித்து வருவோர் மற்றும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நல்லாட்சி பற்றி ஜனாதிபதி செயலமர்வு ஒன்றை நடத்த வேண்டும்.

அரசாங்கத்தின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ள நிலையில் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்தோம்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களை தண்டிக்க வேண்டாம் என நாம் கூறவில்லை.

குற்றம் செய்திருந்தால் அவர்களை தண்டிக்க வேண்டியது அவசியமானது.

எனினும் கடந்த காலங்களில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட பலர் தற்போது ஆளும் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளனர்.

ஆளும் கட்சியில் இணைந்து கொண்டு தங்களது பிழைகளை மூடி மறைத்துக்கொண்டுள்ளன[illegible]

கையூட்டல், மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் செய்யப்பட்ட முறைப்பாடுகளில் 80 வீதமானவை போலியான முறைப்பாடுகள்என அவர் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி பரராஜசிங்கம் சாந்தகுமாரி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் சாந்தகுமாரி நேற்று முன்தினம் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று புதன்கிழமை பி.ப ஒருமணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



### திருமதி மார்க்கண்டு நீலாம்பாள்

உடுவிலைப்பிறப்பிடமாகவும், கனடா Scarborough ஐ வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு நீலாம்பாள் கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்றுவியாழக்கிழமை காலை 8மணி தொடக்கம்மு.ப11 மணி வரை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### ஆனந்த் நவரெட்ணராஜா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும்,கனடா Brampton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்த் நவரெட்ணராஜா கடந்த 21 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மு.ப.10மணி வரை Brampton Crematorium & Visitation Center INC 30 Bramwin Ct, Brampton, ON L6T 5A9, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி மகாராஜா - நல்லம்மா

சாவகச்சேரி நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட மகாராஜா நல்லம்மா கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு.ப.11.45மணி தொடக்கம் பி.ப 3மணிவரை Skogskyrkogarden, Sockenvagen, 122 33 Stockholm,Sweden என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### சிங்கராசா அபிராம்பிள்ளை

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Leverkusen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராசா அபிராம்பிள்ளை கடந்த 21ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று வியாழக்கிழமை காலை 8.30மணியளவில் St.Hildegard, Hinden by rgstrabe 25,51373 Leverkusen, Germany என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### சண்முகலிங்கம் ஸ்ரீரஞ்சன்

திருநெல்வேலி தலம் காவல் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் லண்டன் Lewisham ஐ வதிவிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் ஸ்ரீரஞ்சன் கடந்த சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை மு.ப. 10மணி தொடக்கம் பி.ப. 2 மணிவரை Tudor Livesey Memorial Hall, 225 Perry Hill, London SE6 4HD, United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக அரசு பரிந்துரைத்தால் இலங்.அகதிகளுக்கு குடியுரிமை

## மத்திய இணையமைச்சர் தெரிவிப்பு

(சென்னை)

**இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை அளிக்க தமிழக அரசு பரிந்துரைத்தால், அதுகுறித்து மத்திய அரசு பரிசீலிக்கும் என மத்திய இணை அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.**



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் பெத்திக்குப்பத்தில் இலங்கை அகதிகள் முகாம் உள்ளது. இங்கு யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு உள்ளிட்ட பகுதிகளின் 943 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 136 பேர் அகதிகளாக தங்கியுள்ளனர்.

இந்நிலையில், கும்மிடிப் பூண்டி இலங்கை அகதிகள் முகாமினை மத்திய உள்விவகாரங்களுக்கான இணை அமைச்சர் கிரண் ரிஜிஜு நேற்று முன்தினம் காலை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அவரிடம் முகாம் தலைவர் சிவகுமார் கோரிக்கை மனு ஒன்றை அளித்தார். அந்த மனுவில், இலங்கை தமிழ் பகுதியில் 13 ஆவது சட்டத்திருத்தம் கொண்டுவர வேண்டும்.

அகதி முகாம்களில் உள்ள உயர்கல்வி மாணவர்களுக்கு அரசு கல்வி கட்டணம் அளிக்க வேண்டும், கல்வி பயின்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும். கடவுச்சீட்டு, விசா வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

பின்னர் அகதிகள் மத்தியில் அமைச்சர் பேசும்போது, 'தமிழக அரசு, அகதிகளுக்கு அடிப்படை வசதிகள் மட்டுமல்லாமல், அரசின் பல்வேறு திட்டங்கள் மூலம் உதவிகளை செய்து வருகிறது. முகாமில் எவ்வளவு காலம் அகதிகள் வசிக்க விரும்புகிறார்களோ, அவ்வளவு காலம் வரை, அவர்களுக்கு தேவையான கல்வி, வேலை வாய்ப்பு தொடர்பான அனைத்து உதவிகளையும் அரசு செய்யும்.

அகதிகளுக்கான கடவுச் சீட்டு, விசா தொடர்பான அகதிகளின் கோரிக்கைகள் குறித்து, வெளியுறவுத்துறை அமைச்சகம்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த போது, 'இலங்கை அகதிகளுக்கு குடியுரிமை அளிக்க தமிழக அரசு பரிந்துரைத்தால், அதுகுறித்து மத்திய அரசு பரிசீலிக்கும். ஐ.நா.சபையில் அகதிகள் தொடர்பான எந்த ஒப்பந்தத்திலும் இந்தியா கையெழுத்திடவில்லை. இருப்பினும், நாடு முழுவதும் உள்ள அகதிகள் முகாமில் வசிக்கும் அகதிகள் நலனில் மிகுந்த அக்கறை செலுத்தப்படுகிறது. மேலும், அகதிகளுக்கான கொள்கை குறித்து தேவைப்பட்டால் விவாதித்து அரசு முடிவெடுக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது உள்துறை அமைச்சகத்தின் இணை செயலர் பதக், தமிழக அரசின், பொது மற்றும் மறுவாழ்வுத் துறையின் முதன்மை செயலர் ஜிதேந்தரநாத் ஸ்வான், தமிழகத்துக்கு வெளியே வசிக்கும் தமிழர் நலனுக்கான ஆணையர் ஆனந்த் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி 2ஜி வழக்கின் இறுதிவாதம்

## சி.பி.ஐ.தனி நீதிமன்றம் அறிவிப்பு

(டில்லி)

இந்தியா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய 2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில், வருகின்ற ஏப்ரல் 15 ஆம் திகதி இறுதிவாதம் தொடங்கும் என்று சி.பி.ஐ. தனி நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்தியா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கில் முன்னாள் தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசா, கனிமொழி எம்.பி., சித்தார்த் பெகுரா, ஆர்.கே.சந்தாலியா உள்ளிட்டவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கின் விசாரணை, டில்லி சி.பி.ஐ.தனி நீதிமன்றத்தில் நீதிபதி ஓ.பி.சைனி முன்னிலையில் நடந்து வருகிறது.

இதில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்தனர். சி.பி.ஐ. தரப்பில் ரிலையன்ஸ் நிறுவனத் தலைவர் அனில் அம்பானி, அவரது மனைவி டினா அம்பானி, கார்ப்பரேட் நிறுவனங்களின் தரகர் நீரா ராடியா, முன்னாள் அட்டர்னி ஜெனரல் ஜி.இ.வாகன்வதி உள்ளிட்ட 150 இற்கும் மேற்பட்டோர் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்தனர்.

குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் தரப்பில் ஆ.ராசா, கனிமொழி, கலைஞர் டி.வி.யின் முன்னாள் இயக்குநர் சரத்குமார் உள்ளிட்ட 29 பேர்களின் சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டன.

இந்நிலையில், கனிமொழியின் கோரிக்கையின்படி, அவர் கலைஞர் டி.வி.யின் இயக்குநர் பதவியில் இருந்து விலகியதற்கான கடிதத்தின் நகலை நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில், மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அதிகாரி நவில் கபூர் நேற்று சி.பி.ஐ. தனி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

இதையடுத்து சாட்சி விசாரணை முடிந்துள்ள நிலையில், இந்த வழக்கில் இறுதி வாதம் அடுத்த மாதம் (ஏப்ரல்) 15 ஆம் திகதி தொடங்கும் என்று நீதிபதி ஓ.பி.சைனி அறிவித்து அதற்கான உத்தரவை பிறப்பித்தார். (இ-5)

# தேசிய திரைப்பட விருதுகள் அறிவிப்பு; சிறந்த தமிழ்ப்படமாக 'குற்றம் கடிதல்'

62 ஆவது தேசிய திரைப்பட விருதுகள் நேற்று அறிவிக்கப்பட்டன. தமிழ் திரைப்பட உலகின் அறிமுக இயக்குநர் பிரம்மாவின் "குற்றம் கடிதல்", சிறந்த தமிழ்த் திரைப்படத்துக்கான தேசிய விருதை வென்றுள்ளது. "ஜிகர் தண்டா" திரைப்படத்தில் நடித்த பாபி சிம்ஹா துணை நடிகராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சிறந்த பாடலாசிரியருக்கான விருதை நா.முத்துக்குமார் பெறுகிறார். "சைவம்" படத்துக்கு பாடல் எழுதியதற்காக இந்த விருது வழங்கப்படுகிறது. "ஜிகர்தண்டா" எடிட்டர் விவேக் ஹர்ஷனுக்கு சிறந்த படத்தொகுப்பாளருக்கான விருது கிடைத்துள்ளது.

சிறந்த குழந்தைகளுக்கான படமாக, தமிழ்த் திரைப்படமான "காக்கா முட்டை" தேர்வு செய்யப்பட்டுள்ளது.

உன்னிகிருஷ்ணன் மகள் உத்ரா உன்னிகிருஷ்ணன் சிறந்த பாடகிக்கான விருது பெற்றுள்ளார். இவர் "சைவம்" படத்தில் அழகே அழகு பாடலைப் பாடினார்.

சினிமா குறித்த சிறந்த எழுத்துக்கான விருது (பிரைட் ஆஃப் தமிழ் சினிமா) ஜி.தனஞ்செயனுக்கு வழங்கப்படுகிறது.

கன்னட படமான "நான் அவனல்ல அவளு"வில் நடித்த விஜய், சிறந்த நடிகருக்கான தேசிய விருதைப் பெறுகிறார். "குயின்" படத்தில் நடித்த கங்கனா ரணவத்துக்கு சிறந்த நடிகைக்கான தேசிய விருது கிடைத்துள்ளது.

சிறந்த பொழுதுபோக்கு திரைப்படமாக ப்ரியங்கா சோப்ரா நடித்த "மேரிகோம்" தேர்வு செய்யப்பட்டுள்ளது. மராத்திய மொழி திரைப்படம் "கோர்ட்" சிறந்த திரைப்படமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. (இ-5)

பாரதச் செய்தி

# காங்கிரஸின் செய்தி தொடர்பாளராக தென்னிந்திய நடிகை குஷ்பு நியமனம்



காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய செய்தி தொடர்பாளராக தென்னிந்திய நடிகை குஷ்பு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தி.மு.க.வின் தலைமை கழகப் பேச்சாளராக வலம் வந்த நடிகை குஷ்பு, அண்மையில் அக்கட்சியில் இருந்து விலகினார். இதையடுத்து கடந்த ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி காங்கிரசில் இணைந்தார்.

இதையடுத்து, தமிழக காங்கிரஸ் சார்பில் நடக்கும் ஆர்ப்பாட்டங்கள் உள்ளிட்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் குஷ்பு கலந்து கொண்டு பேசினார்.

அப்போதே குஷ்புவுக்கு கட்சியில் பெரிய அளவிலான பதவி வழங்க உள்ளதாக பல்வேறு விதமான செய்திகள் உலா வந்தன.

இந்நிலையில், நடிகை குஷ்புவை காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய செய்தி தொடர்பாளராக நியமனம் செய்து, அக்கட்சியின் தலைவி சோனியா காந்தி உத்தரவிட்டுள்ளார். (இ-5)

# 112 வயதான பெண் மரணம்

கேரள மாநிலம் திருச்சூரை சேர்ந்தவர் குஞ்சன்னம் அந்தோணி. 112 வயதாகும் இவர் இந்தியாவிலேயே அதிக வயதுடையவர் என்று கருதப்படுபவர்.

இதற்காக குஞ்சன்னமுக்கு கடந்த 2014ஆம் ஆண்டு லிம்கா சான்றிதழ் வழங்கப்பட்டது.

உடல் நலம் பாதிக்கப்பட்ட குஞ்சன்னம் கடந்த திங்கட்கிழமை இரவு திருச்சூரில் உள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.


ஆனால் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் காலை அவர் மரணமடைந்தார்.

திருமணம் ஆகாத குஞ்சன்னத்திற்கு, 1903ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் திகதி, திருச்சூரில் உள்ள 'அவர் லேடி ரொசாரி' (கத்தோலிக்) தேவாலயத்தில் ஞானஸ்தானம் வழங்கப்பட்டது. இதற்கான சான்றிதழை உறவினர்கள் வைத்துள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ண கிரிக்கெட்-2015

# நியூசிலாந்துடன் மோதுவது யார்? ஆஸி-இந்தியா இன்று பலப்பரீட்சை






உலக கோப்பை கிரிக்கெட் போட்டியின் 2ஆவது அரை இறுதி ஆட்டம் சிட்னியில் இன்று நடைபெறவுள்ளது. இதில் நடப்பு சம்பியனான இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் மோதுகின்றன.டோனி தலைமையிலான இந்திய அணி இந்த உலககோப்பை போட்டித் தொடரில் மிகவும் சிறப்பாக விளையாடி வருகிறது. தொடர்ந்து 7 வெற்றியை பெற்று அரை இறுதிக்கு 6ஆவது தடவயாக முன்னேறி இருந்தது.

அபாரமாக ஆடி வரும் இந்திய அணி அவுஸ்திரேலியாவை வீழ்த்தி 4ஆவது முறையாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுமா? என்று கோடிக்கணக்கான ரசிகர்கள் ஆவலுடன் எதிர் நோக்குகின்றனர். ஆனால் அவுஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவது என்பது சவாலானது. உலக கோப்பைக்கு முன்பு இந்திய அணி அவுஸ் திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும். 3 நாடுகள் போட்டியிலும் மோசமாக தோல்வியை தழுவியது.

அதில் இருந்து மீண்டுதான் உலக கோப்பையில் 'லீக்' ஆட்டங்களில் பாகிஸ்தான். தென்னாபிரிக்கா. ஐக்கிய அரபு எமிரேட்ஸ். மேற்கிந்தியத் தீவுகள். அயர்லாந்து. சிம்பாப்வே அணிகளையும். கால்இறுதியில் பங்காள தேசத்தையும் வீழ்த்தியது.

இந்திய அணியின் பட்டிங் வரிசை சிறப்பாக உள்ளது. முதல் 6 வரிசையில் உள்ளவர்கள் நல்ல நிலையில் உள்ளனர். தவான் 2 சதத்துடன் 367 ரன்களும். விராட் கோலி ஒரு செஞ்சரியுடன் 304 ரன்களும். ரோகித்சர்மா 1 சதத்துடன் 296 ரன்களும். ரெய்னா ஒரு செஞ்சரியுடன் 277 ரன்களும். டோனி 172 ரன்களும். ரகானே 164 ரன்களும் எடுத்துள்ளனர்.

அதே நேரத்தில் பலம் வாய்ந்த அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சை சமாளிப்பது இந்திய பட்ஸ்மேன்களும் சவாலாக இருக்கும்.

பட்டிங்கை போலவே பந்துவீச்சும் நல்ல நிலையில் காணப்படுகிறது. 7 ஆட்டத்திலும் இந்திய பவுலர்கள் எதிர் அணிகளை 'ஓல்அவுட்' செய்து சாதனை படைத்துள்ளனர்.

வேகப்பந்தில் முகமது ஷமி முன்னிலையில் உள்ளார். அவர் 17 விக்கெட் கைப்பற்றி இருக்கிறார். உமேஷ் யாதவ் (14 விக்கெட்). மொகித்சர்மா (11 விக்கெட்) ஆகியோர் சிறப்பான நிலையில் உள்ளனர்.

சுழற்பந்தில் அஸ்வின் முதுகெலும்பாக உள்ளார். அவர் 12 விக்கெட் வீழ்த்தி இருக்கிறார். சிட்னி ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு ஏற்ற வகையில் இருக்கலாம். எனவே அதை அவர் சரியாக பயன்படுத்திக் கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோல ஜடேஜாவும் அவருக்கு உறுதுணையாக இருப்பார்.

பட்டிங். பவுலிங். பீல்டிங் ஆகியவற்றில் ஒருங்கிணைந்து இந்திய வீரர்கள் செயற்பட்டால் தான் அவுஸ்திரேலியாவை வீழ்த்த இயலும். உலக கோப்பையில் 7 முறை அவுஸ்திரேலியாவிடம் தோற்றுள்ளது. 3 தடவை மட்டுமே வெற்றி பெற்று இருந்தது. கடைசியாக கடந்த உலக கோப்பையில் இந்திய அணி கால்இறுதியில் வீழ்த்தி இருந்தது.

ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவால் இந்த முறையும் வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கையில் இந்திய வீரர்கள் உள்ளனர். உலக கோப்பையை கைப்பற்ற வாய்ப்புள்ள அணிகளில் ஒன்றாக கருதப்படும் அவுஸ்திரேலியா வலுவான நிலையில் உள்ளது.

பட்டிங் பவுலிங் பீல்டிங்கில் சமபலத்துடன் உள்ளது. அந்த அணியின் மிடில் ஆர்டர் பட்ஸ்மேன் மக்ஸ்வெல் அபாயகரமானவர். 1 சதம். 2 அரை சதத்துடன் அவர் 301 ரன்கள் எடுத்துள்ளார். மேலும் வோர்னர் (288 ரன்). ஸ்டீவன் சுமித் (241 ரன்). ஆரோன் பிஞ்ச் (199 ரன்). வாட்சன் (178 ரன்). கப்டன் கிளார்க் போன்ற சிறந்த பட்ஸ்மேன்களும் உள்ளனர்.

பந்துவீச்சில் ஸ்டார்க் இந்திய பேட்ஸ்மேன்களுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருப்பார். அவர் 18 விக்கெட் கைப்பற்றி உள்ளார். ஜான்சன் (10 விக்கெட்). ஹாசல்வுட். கும்மின்ஸ். பல்க்னெர் போன்ற சிறந்த பவுலர்களும் அந்த அணியில் உள்ளனர்.

இரு அணிகளும் கடைசியாக சிட்னி மைதானத்தில் ஜனவரி 26ஆம் திகதி மோத இருந்த ஆட்டம் மழையால் இரததானது. இந்த மைதானத்தில் இந்திய அணி 4 ஆட்டத்தில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. 12 போட்டியில் தோற்றது. இறுதிப்போட்டியில் நுழைய இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் கடுமையாக போராடும் என்பதால் இந்த ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெற்றி பெறும் அணி இறுதிப்போட்டியில் நியூசிலாந்தை வருகிற 29ஆம் திகதி சந்திக்கிறது. இன்றைய ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 9 மணிக்கு தொடங்குகிறது. ஸ்டார் ஸ்போர்ட்ஸ். தூர்தர்சனில் இந்தப்போட்டி நேரடியாக ஒளிபரப்பப்படுகிறது. (க)




## கோலியை உற்சாகப்படுத்த சிட்னி பறந்தார் அனுஷ்கா



உலகக்கிண்ண அரையிறுதிப் போட்டியில் களமிறங்கும் இந்திய வீரர் விராட் கோலியை உற்சாகப்படுத்த அவரது காதலி அனுஷ்கா சர்மா சிட்னி சென்றுள்ளார்.இந்திய. அவுஸ்திரேலிய அணிகள் மோதும் உல கக்கிண்ண அரையிறுதிப் போட்டி இன்று வியாழக்கிழமை அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெறுகிறது.இந்திய வீரர்க ளின் மனைவிகள். காதலிகள் ஆகியோர் அவுஸ் திரேலியா செல்ல இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் தடை விதித்திருந்தது.

இந்தியா காலிறுதிப் போட்டியில் வெற்றி பெற்றதையடுத்து வீரர்களின் மனைவிகள் மற்றும் காதலிகள் அவுஸ்திரேலியாவுக்கு சென்ற வண்ணம் உள்ளனர்.இதைத் தொடர்ந்து இந்திய அணியின் துணை அணித் தலைவர் கோலியின் காதலி அனுஷ்கா சர்மாவும் சிட்னி கிளம்பி சென்றுள்ளார்.

முன்னதாக இந்திய அணி அவுஸ்திரே லியாவில் சுற்றுப்பயணம் செய்தபோது அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத் தில் கோலியை ஊக்குவிக்க அனுஷ்கா சிட்னி சென்றார். அந்த ஆட்டத்தில் இந்தியா சொதப்பியது.

இந்நிலையில் அரையிறுதி ஆட்டத்தி ற்கும் அனுஷ்கா அங்கு சென்றுள்ளதால். இந்தியாவின் நிலைமை என்ன ஆகப் போகிறதோ என்றும், கோலி சொதப்பா மல் இருந்தால் சரிதான் எனவும் இந்திய ரசிகர்கள் புலம்பி வருகின்றனர்.(க)

## ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III-2015 ஸ்கந்தாஸ்ரார் காலிறுதிக்கு தகுதி

சிறிலங்கா கிரிக்கெட் போட்டி பிரிவு III சுற்றுப் போட்டியில் ஓர் அணியை தெரிவு செய்வதற்கான தகுதிகாண் போட்டிகள் அண் மையில் நடை பெற்றது.

அப்போட்டியில் ஸ்கந்தாஸ்ரார் அணி, யாழ். பல்கலைக்கழக அணியை 3 விக் கெட்டுக்க ளால் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல் கலைக் கழக அணி 27.4 ஓவர்களில் சகல இலக்கு களையும் இழந்து 137 ஓட்டங்களை பெற்றனர்.

குருகுலசூரியா 11 டணன் ஜெயக்குமார–24, ரொமேஸ்–26, டிக்ஸன் 17 ஓட்டங்களை பெற்றனர்.

விஷ்ணு பிரகாஸ்–02, புறுசோத் –01, கதிஜோன்–05, மிதுஸன்–02 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தாஸ ரார் அணி 36.4 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 141 ஓட்டங்களை பெற்றனர்.

துபிஸன்–28, சன்ஜீவன்–52, சயந் தன்–15, சிறிகஜன் ஆட்டமிழக்காது–12 ஓட்டங்களை பெற்றனர். சுஜன்தன், விதுஷ், குருகுலசூரியா தலா 1 இலக்குகளையும் டிக் ஸன், தரணி தரன் தலா 2 இலக்கினையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற ஸ்கந்தாஸ ரார்அணி, கிறாஸ்கொப்பர்ஸ், மானிப் பாய்பரீஸ் அணிகளுக்கிடையில் நடை பெறும் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் காலிறுதிப் போட்டி யில் கலந்து கொள்வார் கள் என்பது குறிப்பி டத்தக்கது.

இப்போட்டியின் மூலம் தரவரிசைப் பட்டியலுக்கு ஸ்கந்தாஸ்ரார் அணி 7.71 புள்ளிகளையும் யாழ்.பல்கலைக்கழகம் 2.07 புள்ளி களையும் பெற்றுக் கொண்ட னர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்து போனவனின் செருப்புக்காக காத்திருப்பவன் வெறுங்காலுடனே நடக்க வேண்டி வரும். -டேனிஷ் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பாட்டி-காகம்-நரி தமிழர்-சம்பந்தர்-ரணில்

பாட்டி வடை சுட்ட கதை இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. கிரேக்க நாட்டுக்குரிய இக்கதை தென்னாசிய நாடுகள் முழுவதிலும் பரவி அறியாதார் எவரும் இல்லை என்றாயிற்று.

ஒரு மரத்தின் கீழ் பாட்டி வடை சுட்டுக் கொண்டிருந்தாள். காகம் ஒன்று வடையைக் கொத்திச் சென்று மரத்தில் உட்கார்ந்திருந்தது.

அந்நேரம் அந்தப் பக்கமாக நரி ஒன்று வந்தது. காகத்தின் வாயில் வடை இருப்பதைக் கண்ட நரி, காக்கையாரே! நீ நன்றாய் பாட்டுப் பாடுவீராமே! எங்கே ஒரு பாட்டுப் பாடும் பார்க்கலாம் என்றது.

நரியின் வார்த்தையை உண்மை என்று நம்பிய காகம் வாயைத் திறந்து கா... கா... என்றது. அவ்வளவுதான் காகத்தின் வாயில் இருந்து வடை கீழே விழ, அதை நரி கௌவிக் கொண்டோடியது.

இந்தக் கதையில், நரியின் தந்திரம் தோற்கடிக்கப்பட்டதாக மாற்றவேண்டும் என நவீன சிந்தனையாளர்கள் நினைத்தனர்.

காக்கையாரே! எங்கே ஒரு பாட்டுப்பாடும் பார்க்கலாம் என்று நரி கூறியபோது, காகம் வாயில் இருந்த வடையை தன் காலில் வைத்துக் கொண்டு, கா... கா... என்று கரைய, ஏமாற்றத்துடன் நரி சென்றது என கதையை மாற்றியமைத்தனர்.

மாற்றம் வேண்டும் என்பதற்கான ஒரு ஏற்பாடே இது அல்லாது வேறொன்றும் இல்லை.

ஏமாற்றம் களையப்படவேண்டும் என்று நினைத்திருந்தால், பாட்டி தான் சுட்ட வடையை ஒரு பாத்திரத்தால் மூடி வைத்திருந்தார். இதனால் காகம் வடையைத் தூக்கவும் முடியவில்லை. நரியின் அவ தந்திரத்திற்குச் சந்தர்ப்பமும் இல்லாமல் போயிற்று என்பதாகக் கதை மாற்றப்பட்டிருக்க வேண்டும் என்பது நம் சிற்றறிவின் சிந்தனை.

ஏதோ! கதை எப்படி மாற்றப்பட்டாலும் எங்களுக்குத் தெரிந்த கதை, பாட்டி சுட்ட வடையை காகம் கொத்திச் செல்ல, காகத்தின் வாயில் இருந்த வடையை தனது புத்தியைப் பயன்படுத்தி நரி தனதாக்கிக் கொண்டது என்பதுதான்.

ஆக, பாட்டி-காகம்-நரி என்ற கதையில் முதலாவதாக ஏமாந்தது பாட்டி. இரண்டாவது ஏமாற்றம் காகத்திற்கு. இந்த வரிசையில் முதல் இழப்பு பாட்டிக்கு என்பதை எவரும் மறுக்க முடியாது.

பாட்டி சுட்ட வடைக் கதையை நம் நாட்டுக்கு ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழ் அரசியல் தலைவர்களால் ஏமாந்தவர்கள் தமிழ் மக்கள். தமிழர்களை நம்ப வைத்து பதவியை தமது பக்கமாக்கிக் கொண்டவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர்.

இரா.சம்பந்தரை ஏமாற்றி எல்லாவற்றையும் பறித்தெடுத்து, சர்வதேச விசாரணையுமில்லை; போர்க்குற்றமுமில்லை என்பதாக சமகால நிலைமையை ஏற்படுத்தியவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இந்த நிலைமையை வைத்துக் கொண்டு ஒரு நுண்ணறிவு மாதிரி அமைப்பு ஒன்றைத் தயாரித்தால்,

**பாட்டி-காகம்-நரி**
**தமிழர்-சம்பந்தர்-ரணில்**

என்பதாக அது அமையும்.

கதையில் பாட்டியும் தமிழரும் பாவம் என்பது இப்போதாவது புரியவரும்.

ஏமாற்றத்தைத் தடுக்க வேண்டியது காகமோ, சம்பந்தரோ அல்ல. பாட்டியும் தமிழருமே அதைச் செய்யவேண்டும். ஏனெனில் வடையின் நட்டம் பாட்டிக்கு. உரிமையின் இழப்பு தமிழருக்கு.

## முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசம் அணியத் தடை!

மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசங்கள் அணிந்து கொண்டு செல்வதற்கு ஏப்ரல் 2ஆம் திகதி முதல் தடை விதிக்கப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னர் முகத்தை முழுமையாக மறைத்து தலைக்கவசம் அணிய தடை விதிக்க அரசாங்கம் தீர்மானித்து பின்னர் அதனை வாபஸ் பெற்ற நிலையில் தற்போது மீண்டும் அத்திட்டத்தை செயற்படுத்துவதென தீர்மானித்துள்ளது. கடத்தல்கள், கொலை, கொள்ளைகள் போன்ற குற்றச் செயல்களைப் புரிவோர் இத்தகைய தலைக்கவசங்களை அணிந்து கொண்டே மேற்கொள்கின்றனர்.

இதனாலேயே இத்தகைய தலைக் கவசங்கள் அணிவது தடை செய்யப்படுகிறது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-11)

## படையினருக்கு பொது மன்னிப்பு

படைகளில் இருந்து தப்பியோடியவர்களுக்கு இலங்கையின் முப்படைத் தளபதிகளின் அனுமதிக்கு அமைய பொது மன்னிப்பு வழங்குமாறு மைத்திரிபால சிறிசேன ஆலோசனை வழங்கியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இராணுவ நிறைவேற்று பணிப்பாளர் மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க ஜனாதிபதியின் இத்தீர்மானம் குறித்த தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவத்திலிருந்து தப்பியோடிய வீரர்களை கடந்த அரசாங்கம் தேடி பிடித்து கைது செய்து வந்த நிலையில் புதிய அரசாங்கம் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்க முடிவு செய்துள்ளது.

இந்த நிலையில் குறித்த வீரர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பொது மன்னிப்பு வழங்கப்படும்.

பிரதான நான்கு முறைகளின் அடிப்படையில் படையில் இருந்து விட்டோடியவர்களுக்கே பொது மன்னிப்பு அளிக்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## அமைச்சர் டிலான் மீது குற்றச்சாட்டுக்களில்லை

### அமைச்சர் தலதா அத்துகோரள

அமைச்சர் டிலான் பெரேரா மீது குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்படவில்லை. இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மீதே குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் துறை அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

பணியகத்தில் பல்வேறு ஊழல் நடவடிக் கைகள் இடம்பெற்றுள்ளன. எனினும் அதற்கு முன்னர் பணியகத்துக்கு பொறுப் பாக இருந்த அமைச்சர் டிலான் பெரேரா மீது குற்றம் சுமத்த முடியாது.

பணியகத்தின் ஊழல்களில், பயிற்சி நிலையத்துக்கான அடிக்கல் நாட்டுக்காக 12.6 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டமை, வெசாக் பஜனைக்காக 5.6 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டமை, கிறிஸ்மஸ் நிகழ்வுக்காக 1.1 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டமை, பொதுமக்கள் மத்தியில் பிரசாரத்துக்காக 36.2 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டமை என்பவையும் அடங்குவதாக தலதா அத்துகோரள மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-5)

## இந்தியக் குழு யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

இந்திய வெளியுறவுத்துறையின் புதிய பயிற்சி அதிகாரிகள் உள்ளடங்கிய 7 பேர் கொண்ட குழுவினர் நேற்று யாழ்.மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டு பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கைக்கு நேற்று முன்தினம் வந்த இக்குழுவினர் நேற்று யாழ். மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டு இந்திய துணைத்தூதரகத்தினருடன் இணைந்து பல்வேறு சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தனர்.

அதன்படி நேற்று காலை வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதன்போது வடக்கு மாகாணத்தின் முன்னேற்றங்கள் மற்றும் தற்போதுள்ள பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்து கொண்டனர்.

தொடர்ந்து யாழ்.மாவட்டத்தின் புதிய அரச அதிபர் வேதநாயகத்தை சந்தித்து இங்குள்ள நிலைவரம் குறித்தும் அறிந்து கொண்டதுடன் தேவைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டனர்.

அத்துடன் நகரில் உள்ள விடுதியொன்றில் வர்த்தக சங்கத்தினருடனான சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டதுடன் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இந்திய அரசு நிதி உதவிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையினையும் சங்கத்தினர் விடுத்திருந்தனர்.


மேலும் இந்திய அரசின் நிதி உதவியில் செயற்பட்டுவரும் குருநகரில் உள்ள வலை உற்பத்தி நிலையத்தினையும் பார்வையிட்டுள்ளனர். (எ-11)

## சத்திய தரிசனம்



### நேர்மையே சிறப்பு

- உங்களுக்குப் பிறர் செய்த தீமை, பிறருக்கு நீங்கள் செய்த நன்மை இரண்டையும் மறந்து விட முயலுங்கள்.
- எதிர்பார்ப்பு நிறைவேறாவிட்டால் வருந்தாதீர்கள். கடவுளின் விருப்பம் இதுவே என திருப்தி கொள்ளுங்கள்.
- பண்பாடு இல்லாத மனித வாழ்வு இறக்கை இல்லாத பறவைக்குச் சமமானது.
- வானுக்கு நிலவு அழகு தருவது போல மனிதனுக்கு நேர்மையே சிறப்பைத் தருகிறது.
- எங்கும் அன்புப்பயிரை விதையுங்கள். சேவை என்னும் தண்ணீரால் அதை வளரச் செய்யுங்கள்.




## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத்தகவல்கள்


### ஐஸ்வர்யங்கள் சேர்க்கும் அறுகம்புல் வழிபாடு!

அறுகம்புல்லை தூர்வை என்பார்கள். அதை இலட்சுமி சொரூபமாக பாவிக்கவேண்டுமென்று வேதம் உபதேசிக்கிறது. தூர்வையைப் புகழும் வகையில் வேதத்தில் பல மந்திரங்கள் உள்ளன. அறுகம்புல்லை தினமும் பகவானுக்கு அர்ப்பணித்தபிறகு தலையில் வைத்துக்கொள்வதால், கெட்ட கனவுகள் விலகி, நன்கு உறக்கம் வரும். துர்க்கையைத் தவிர ஏனைய எல்லா தேவதைகளுக்கும் தூர்வையால் அர்ச்சனை செய்வது மிகவும் சிறந்தது. துர்க்கையை அறுகம்புல்லினால் அர்ச்சனை செய்யலாகாது. உலகிலுள்ள ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சிறப்புண்டு. அவ்வகையில் தூர்வையை ஆராதிக்கும் தினம் பாத்ரபத (ஆவணி) மாதத்தின் சுக்லபட்ச அஷ்டமி. இதற்கு தூர்வாஷ்டமி என்று பெயர். இந்த தூர்வாஷ்டமி விரதத்தை எல்லோரும் கடைப்பிடிக்கலாம். குறிப்பாக பெண்கள் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். இவ்விரதம் பெண்களுக் கென்றே விதிக்கப்பட்ட ஓர் உன்னதமான விரதமாகும். இவ்விரதத்தைக் கடைப்பிடிப்பதால் சகல சௌபாக்கியங்களும் ஏற்படும். நமது தேசத்தை வளமாக வைத்துக்கொள்வதற்கும் எல்லா இடத்திலும் உணவு, நீர், ஆடை நிறைவாகக் கிடைப்பதற்கும் நீண்ட ஆயுளுடைய புத்திமான்களான- வீரர்களான புத்திரர்களைப் பெறுவதற்கும் நினைத்த காரியங்கள் நிறைவேறுவதற்கும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கவேண்டும். இந்த தூர்வாஷ்டமி விரத பூஜாவிதி பவிஷ்ய புராணத்திலும், மதனரத்னத்திலும் கூறப்பட்டுள்ளது. தூர்வாஷ்டமி அன்று காலை நித்ய கர்மாக்களை முடித்துக்கொண்டு, நித்ய பூஜையையும் செய்தபிறகு இவ்விரதத்தைச் செய்ய வேண்டும். பூஜையறையை சுத்தம்செய்து கோலமிட்டு விளக்கேற்றி, சுத்தம் செய்யப்பட்ட பலகையின்மேல் கோலமிட்டு, சுத்தமான இடத்தில் விளைந்த அறுகம்புல்லைப் பறித்துவந்து அப்பலகையின்மேல் பரப்பி, அதன்மேல் சிவலிங்கம் (இருந்தால் விசேஷம்) அல்லது படம் ஏதாவது ஒன்றை வைத்துப் பூஜிக்க வேண்டும். பூஜைக்கு எல்லாவிதமான இலைகளையும் மலர்களையும் எடுத்துக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.இந்துக்கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட சிவராமலிங்கம் ஞாபகார்த்த நூலகம் மாணவர்களின் பாவனைக்கென அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. கடந்த வருடம் க.பொ.த.உயர்தர பரீட்சையில் கணிதத்துறையில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற மாணவன் பா.டாருகீசன் நாடாவெட்டி திறந்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.(படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)



யாழ்.வேலணை சரஸ்வதி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்ற போது...




கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அரசாங்க அதிபராக மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு கரைச்சி பிரதேச செயலகத்தில் பிரியாவிடை நிகழ்வு அண்மை யில் நடை பெற்ற போது...




இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளையினால் தெல்லிப்பழை அன்ன பூரணி மண்டபத்தில் கிளை முகாமையாளர் திருமதி சுமங்களா பிரபாகரன் தலைமையில் அண்மையில் மகளிர் தின விழா இடம்பெற்ற போது...





யாழ்.புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடை பெற்ற போது....

நிகழ்வின் நிழல்கள்



யாழ்.அல்வாய் அம்பாள் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இளைப்பாறிய அதிபர் எஸ். சந்திரசேகரம் மாணவரின் கல்வி வளர்ச்சிக்கென ஒரு இலட்சம் ரூபாவினை வங்கியில் வைப்புச் செய்து அதன் பத்திரத்தை பாடசாலை ஆ.சூசைநாதரிடம் கையளித்த போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு விசாரணை நடத்தி ஐ.நாவிடம் அறிவிக்க வேண்டும்

## இராஜாங்க நிதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப் பட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட் டுக்கள் தொடர்பில் உள்நாட்டில் விசாரணை நடத்தி அதன் முன்னேற்றத்தை வரும் செப் ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் அறிவிப்பது முக்கியம் என்று இலங்கையின் இராஜாங்க நிதி அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு காணாமல் போனோரை கண் டறிவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஆணைக் குழுவின் இடைக்கால அறிக்கை தற்போது தயாராகியுள்ள நிலையில், அதனை மக்கள் பார்வைக்காக வைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மகிந்த சமரசிங்க இராஜாங்க நிதி அமைச்சராக, அமைச்சரவை பொறுப் புக்களை ஏற்கும் முதல் நாளான நேற்று ஊட கவியலாளர்களிடம் பேசியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னைய மகிந்த ராஜபக்ஷ அரசாங்க த்தின் போது, மனித உரிமைகள் அமைச் சுக்கு பொறுப்பாக இருந்த மகிந்த சமரசிங்க, ஐக்கிய நாடுகள் சபை கூட்டங்கள் பலவற் றில் இலங்கையின் பிரதிநிதியாக பங்கேற்று வந்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேர வையால் இலங்கைத் தொடர்பில் மார்ச் மாதம் வெளியிடப்படவிருந்த பிரேரணை எதிர் வரும் செப்ரெம்பர் மாதத்திற்கு பிற்போடப்பட் டமையானது மைத்திரிபால அரசுக்கு கிடை த்துள்ள மிகப் பெரிய வெற்றி என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டிரு ந்தால் இலங்கைக்கு எதிராக பொருளாதா தடை கொண்டுவரவும் வாய்ப்பு ஏற்பட்டிரு க்கும் என அமைச்சர் சமரசிங்க தெரிவித்தார்.

குறிப்பாக, இன்று இலங்கையின் பொரு ளாதாரம் வீழ்ச்சியடைந்து வருவதாக பலர் குற்றஞ்சாட்டுகின்ற நிலையில், ஒருவேளை பிரேரணை கொண்டுவரப்பட்டு பொருளாதார தடை விதிக்கப்பட்டிருந்தால் இலங்கையின் பொருளாதாரம் முற்றாக இல்லாமல் போயிரு க்கும் எனவும் கூறினார்.


மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்ற குறுகிய காலத்திற்குள் சர்வதேச த்திடமிருந்து கிடைத்துள்ள வாய்ப்புக்கள் இலங்கைக்கு முக்கியமானதாக இருக்கிறது என கூறிய அவர் ஒரு தரப்பினர் மட்டுமல் லாது அனைவரும் தங்களது ஒத்துழைப்பை இலங்கைக்கு தர முன்வந்துள்ளமை தற் போதைய அரசாங்கத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதாகவும் சுட்டிக்காட்டியுள் ளார். (எ-11)

## நவிண்டில் கலைமதி அரையிறுதிக்கு தகுதி

நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழ கம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தும் jaffna challengers cup உதைபந்தாட்ட சுற்று தொடரில் (22.03.2015) நடைபெற்ற சுப்பர் 8 ஆட்டத்தில் ஊரெழு ரோயல் விளையாட்டு கழகத்தை எதிர்த்து விளையாடிய நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறு திக்கு தெரிவாகியது. இரு அணிகளும் சம பலத்துடன் பலப்பரீட்சை நடத்தின. வெற்றி பெறும் அணி அரையிறுதிக்கு தெரிவாகும் என்ற நிலையில் ஆட்டம் தொடங்கியது.

ஆரம்பம் முதல் அனல் பறந்த ஆட்டத்தில் கலைமதி அணி வீரர் விஜேந்திரன் (3-வது நிமிடம்) கோல் ஒன்றை போட்டார். பின்னர் ரோயல் அணி சார்பில் கஜகோபன் 7-வது நிமிடத்தில் கோல் ஒன்றை போட ஆட்டம் சம நிலையில் சூடு பிடித்தது. இடைவேளையின் பின் 27-வது நிமிடத்தில் கலைமதி வீரா கோல் ஒன்றை போட்டர். பின்னர் இறுதி நேரத்தில் ரோயல் அணி வீரா கஜகோபன் 42-வது நிமிடத்தில் கோல் போட்டு ஆட்டத்தை சமப் படுத்த ஆட்டம் இறுதியை நெருங்கியது. இறுதி நிமிடத்தில் கலைமதி அணி சார்பில் சத்திய சீலன் ஒரு கோல் போட்டு அதிர்ச்சி அளிக்க கலைமதி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

# ஆஸியை வீழ்த்தாவிட்டால் விளையாடியதில் அர்த்தமில்லை கொந்தளிக்கும் ஹோலி



அவுஸ்திரேலியாவை அரையிறுதியில் வீழ்த்தாவிட்டால் இவ்வளவு காலம் அவுஸ் திரேலியாவில் விளையாடியதில் அர்த்த மில்லை என்று விராட் ஹோலி தெரிவித்து ள்ளார்.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்த இந்திய அணி 2 டெஸ்ட்களை இழ ந்து, 2 டெஸ்ட்களை சமன் செய்தது.

மேலும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட்டில் ஒரு போட்டியில் கூட வெற்றி பெறவில்லை. ஆனால், உலகக்கிண்ணத்தில் இதுவரை ஆடிய 7 போட்டிகளிலும் இந்தியா வென்று அசத்தியுள்ளது.

இதைத் தொடர்ந்து அரையிறுதி ஆட்டத் திலும் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற இந்திய அணி தீவிர பயிற்சியை எடுத்து வருகிறது.

இந்நிலையில் அரையிறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவை அடித்து நொறுக்கி வெற்றி பெற வேண்டும் என்று இந்திய அணி யின் துணைத் தலைவர் விராட் ஹோலி மார் தட்டி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறுகையில், இந்தியா உலகக்கிண்ணதில் விஸ்வரூபம் எடுத்து விளையாடி வருகிறது. அவுஸ்திரேலியாவை இப்போது அடிக்காவிட்டால் பின்னர் எப்போது தான் அடிக்க முடியும்.

இந்திய அணி தொடர்ந்து 7 போட்டி களிலும் வெற்றி பெற்று அசத்தி இருக்கிறது. 7 போட்டிகளிலுமே எதிரணிகளை ஆல்-அவுட் செய்துள்ளோம் என்றால், எங்களது பந்து வீச்சா ளர்களின் திறமைதான் அதற்கு காரணம்.

எங்களது பந்து வீச்சாளர்கள் புத்திசாலித் தனத்துடன், ஆக்ரோஷமாகவும் பந்து வீசுகி றார்கள். இதை பார்க்கவே மகிழ்ச்சியாக உள்ளது என்று தெரிவித்துள்ளார். (க)

# மீண்டும் வருவார் மகிந்த உறுதிப்படுத்தினார் விமல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியில் அல்லது புதிய கட்சியின் ஊடாக மீண்டும் அரசியலுக்கு வரு வது உறுதி என தேசிய சுதந்திர முன்னணி யின் தலைவர் விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

வானொலி ஒன்றிற்கு நேறறுக் காலை வழ ங்கிய செவ்வியிலேயே இவ்வாறு அவர் குறிப் பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் நாரஹேன்பிட்டியவில் வைத்து ஊடகமொன்றிற்கு தான் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி ஊடாக மாத்திரமே அரசியலுக்கு வருவேன் என தெரிவித்திருந்தார்.

நான் மிக உண்மையாகவும் உறுதியாக வும் தெரிவிக்கிறேன் எங்கள் ஜனாதிபதி நாட் டின் தலைவர் மகிந்த அரசியலுக்கு வருவார், அவர் வரமாட்டார் என நினைத்திருந்தால் நாங்கள் பேரணி நடத்துவதற்கு எங்களுக் கென்ன பைத்தியமா என விமல் வீரவன்ச கேள்வியெழுப்பியுள்ளார்.

பொதுத்தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் பெயர் பலகையை பிடித்துக் கொண் டிருப்பவர்கள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சுதந்திரக் கட்சியில் பேரட்டியி டுவதற்கு இடமளிக்கமாட்டார்கள்.

பொதுத்தேர்தலில் அமைச்சர் பதவிக்கு விருப்பமென்றால் சுதந்திரக் கட்சியில் போட்டி யிடுமாறு சிலர் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

மகிந்த அமைச்சர் பதவிக்காக பொதுத் தேர்தலில் போட்டியிட தேவையில்லை. பிரதம வேட்பாளராக சுதந்திரக் கட்சியில் நியமிக்க முடியுமா இல்லையா என்பதனை எங்களுக்கு உறுதியாக தெரிவிக்க வேண்டும்.

எப்படியிருப்பினும் மகிந்த ராஜபக்ஷ பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில் எவ்வித மாற்ற மும் இல்லை, அவர் போட்டியிடுவது உறுதி என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். (எ-11)

# தோல்விக்கு நானே காரணம்; கண்ணீர் வடிக்கும் டி வில்லியர்ஸ்



நியூசிலாந்து அணியுடான தோல்விக்கு நானே காரணம் என தென்னாபிரிக்க அணித் தலைவர் டி வில்லியர்ஸ் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், உலகக் கிண்ணத்துடன் நாடு திரும்பி, எங் கள் நாட்டு கிரிக்கெட் இதயங்களை மகிழ் விக்க வேண்டும் என்று விரும்பினோம். ஆனால் வாய்ப்பு இருந்தும் அதை செய்ய தவறிவிட்டோம். இதனால் மிகுந்த ஏமாற்ற மும், அதிர்ச்சியும் அடைந்துள்ளேன்.

தோல்வியால் நாங்கள் எந்த அளவுக்கு உணர்ச்சிவசப்பட்டிருக்கிறோம் என்பதை விவ ரிப்பது கடினம், வேதனையால் துடிக்கிறோம்.

முக்கியமான கட்டத்தில் கோரி அண்டர் சனை நான் ரன் அவுட் செய்ய தவறியதும், ஆட்டத்தை இழப்பதற்கு முக்கிய காரணம் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

மொத்தத்தில் சிறந்த அணி வெற்றி பெற் றிருக்கிறது, களத்தில் நாங்கள் எல்லா வகை யிலும் போராட்டத்தை வெளிப்படுத்தினோம். வீரர்களிடம் இதற்கு மேல் எதுவும் கேட்க முடியாது. அவர்களை நினைத்து பெருமைப் படுகிறேன் என்று தெரிவித்துள்ளார். (க)

# இந்திய வீரர்களை சீண்டிப் பார்ப்பேன் மிரட்டல் விட்ட மிட்செல் ஜோன்சன்

உலகக்கிண்ண அரையிறுதியில் இந்திய வீரர்களை சீண்டி ஸ்லெட்ஜிங்கில் ஈடுபடு வேன் என்று அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர் மிட்செல் ஜோன்சன் மிரட்டல் விடுத்துள்ளார்.


எதிரணியை சீண்டி பார்ப்பதை அவுஸ் திரேலிய அணி எப்போதும் வழக்கமாக கொண்டிருக்கிறது.

சமீபத்தில் நடந்து முடிந்த அவுஸ்திரேலிய டெஸ்ட் போட்டியில் மிட்செல் ஜோன்சன், இந் திய வீரர் ரோஹித் சர்மாவை வம்பிழுத்தார். இதன் பிறகு சக வீரர் வோர்னரும் தகராறில் ஈடுபட்டார்.

இந்நிலையில் இன்று சிட்னியில் நடக்கப் போகும் போட்டியில் இந்திய வீரர்களை வம் பிழுக்கப் போவதாக மிட்செல் ஜோன்சன் தெரி வித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், பாகிஸ் தான் வீரர் வஹாப் ரியாஸ் மற்றும் வோட்சன் இடையே நடந்த ஸ்லெட்ஜிங் பிரச்சினை ஆட்டத்தையே சுவாரசியமாக மாற்றியது. அதுபோன்ற ஆட்டத்தைதான் நான் விரும்பு கிறேன்.

விளையாட்டில், இதுபோல ஸ்லெட்ஜிங் செய்வது சகஜமானது. அப்போதுதான், விளையாட்டில் ஒரு பொழுதுபோக்கும், திரில் லும் இருக்கும்.



இந்தியாவுக்கு எதிரான அரையிறுதி போட்டியில், இதுபோன்ற சுவாரசியத்தை நீங்கள் அதிகம் எதிர்பார்க்கலாம்.

ஒருவேளை இந்தியாவுக்கு எதிரான போட்டியில் வோர்னர் எதுவும் பேசாமல் இரு ந்தாலும், நான் சீண்டல் செய்யத்தான் போகி றேன். ஸ்லெட்ஜிங் செய்யும் முதல் ஆளாக நான் தான் இருப்பேன் என்று தெரிவித்துள்ளார்.

விளையாடி வெற்றி பெற முடியாத சூழ் நிலை ஏற்படும்போது, எதிரணி வீரர்களின் கவனத்தை சீர்குலைக்க அவுஸ்திரேலிய அணியினர் இவ்வாறு குறுக்கு வழியை நாடி வருவது காலம்காலமாக தொடருகிறது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜித ஒரு பொய்யர் ; மகிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு) அமைச்சர் ராஜித சேனாரத்ன போலியான பிரசாரங்களை செய்து வருகின்றார் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நாரஹேன்பிட்டியில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுடன் இடம்பெற்ற சந்திப்பையடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தன்னிடம் 5 வாகனங்கள் மாத்திரமே காணப்படுகின்றன எனவும், அதற்கு மேலான வாகனங்கள் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு 6 வாகனங்களும், பாதுகாப்பிற்காக 213 பொலிஸ், இராணுவ வீரர்களும் வழங்கப்பட்டுள்ளதாக அண்மையில் அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். அத்துடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க விற்கு நீதிமன்ற உத்தரவிற்கமைய குறைந்தளவிலான வாகனங்களும், பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (எ-11)

## யாழிற்கு...

அத்துடன் யாழ்.மாவட்டச் செயலகத்தில் மாவட்ட, பிரதேச செயலாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளும் அவர், பின்னர் பெண் தலைமைத்துவ குடும்பங்கள், புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள், மீள்குடியேறிய மக்கள், மீனவர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்திக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார், முஸ்லிம் பிரதிநிதிகளையும் இதன்போது பிரதமர் சந்திக்கவுள்ளார்.

மறுநாள் 28 ஆம் திகதி நெடுந்தீவுக்குச் செல்லும் அவர், நயினாதீவு நாகதீப விகாரையில் வழிபாடுகளை மேற்கொள்வார்.

தொடர்ந்து பலாலியில் இராணுவம், விமானப்படை, கடற்படை ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடவுள்ளார். அத்துடன், பிரதமரது யாழ்.விஜயம் முடிவுக்கு வருகின்றது.

மறுநாள் 29 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்துக்குச் செல்லும் பிரதமர் அங்கும் நிகழ்வுகளில் கலந்துகொள்வதுடன், பல சந்திப்புக்களையும் மேற்கொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## மகிந்த ராஜபக்ஷவின்...

சிறுபான்மையின அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய தேசிய அரசாங்கத்தை ஆரம்பித்துள்ளமை பாராட்டத்தக்கது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் புதிய ஜனாதிபதி முன்னாள் அரசாங்கத்தில் காணப்பட்ட அச்சுறுத்தும் கொள்கைகளில் இருந்து தனது நாட்டை வெளிக்கொண்டு வருவார் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அத்துடன் மகிந்த அரசாங்கத்திலிருந்ததை விடவும் தற்போதைய அரசாங்கத்தில் ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்தல், சமத்துவமான பொருளாதார வளர்ச்சி, இனப்பிரச்சினையை குறைத்தல் ஆகியவற்றை நிலைநிறுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், அவரது கூட்டணியும் வெகு விரைவில் அபிவிருத்தி உதவி, சிவில் சமூகம் மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு ஆதரவு வழங்குதல் உள்ளிட்ட விரிவான ஆட்சி சீர்திருத்த திட்டத்தில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர் என சுட்டிக்காட்டியுள்ளதுடன்,

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் உள்நாட்டு பொறுப்புகூறும் உள்ளக பொறிமுறையை உருவாக்கவும், வடக்கு, தெற்குக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அமெரிக்க அரசாங்கம் பூரண ஒத்துழைப்பை வழங்கும் எனவும் நிஷா பிஸ்வால் தனது உரையில் தெரிவித்துள்ளார். (எ-11)

## எதிர்க்கட்சித் தலைவர்...

முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சியான மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவருமான தினேஷ் குணவர்த்தனவை எதிர்க்கட்சித் தலைவராக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்தால் சர்வதேசத்தில் கூட்டமைப்பின் கருத்துகளுக்குக் கூடிய வரவேற்பு கிடைக்கும் என்றும், எதிர்க்கட்சித் தலைவர் அடுத்த பிரதமர் பதவிக்குச் சமமானவர் என்றும் அரசை அவர்கள் எச்சரித்தும் உள்ளனர்.

இதேவேளை, தானே எதிர்க்கட்சித் தலைவர் என்றும், இதனை எவராலும் மாற்றமுடியாது என்றும் தற்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருக்கும் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைத்தால் தமது நடவடிக்கை என்ன என்பது குறித்து கருத்தித் தெரிவித்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை நாம் நாடவும் இல்லை அந்தப்பதவி வேறொரு கட்சியில் உள்ளவருக்குச் சென்றடையக் கூடாது என்று நாம் எண்ணவும் இல்லை. வேறொரு கட்சியில் உள்ளவர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பொறுப்பேற்றால் அதனை நாம் எதிர்க்கவும் மாட்டோம்.

ஆனால், நாடாளுமன்ற விதிமுறைகளின்படி எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே என்ற நிலைமை வருமானால் அந்தப் பதவியை நாம் ஏற்பதா, இல்லையா என்று எமது கட்சி கூடி ஆராய்ந்து இறுதி முடிவெடுக்கும்.

நாடாளுமன்றத்துக்கென விதிமுறைகள் உள்ளன. அந்த விதிமுறைகளே எதிர்க்கட்சித் தலைவர் பதவி யாருக்கு என்பதைத் தீர்மானிக்கும். எனவே, தனிப்பட்டவர்களின் கருத்துகள் செல்லுபடியற்றதாகும் என்றார். (எ-11)

## அரச அதிபர் பதவி...

இதுவரை காலமும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றி வந்த சுந்தரம் அருமைநாயகம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற்று சென்றதனையடுத்தே வேதநாயகன் கடமையேற்றுகொண்டார்.

ஆரம்பத்தில் நெடுந்தீவு, தெல்லிப்பழை, சண்டிலிப்பாயில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றி 2003 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் 2007 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராகவும் 2009 ஆம் ஆண்டு முல்லைத்தீவு அரசாங்க அதிபராகவும் 2010 ஆம் ஆண்டு மன்னார் அரசாங்க அதிபராகவும் பின்னர் இரண்டு வருடங்களாக மீண்டும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராகவும் ஒருவருடம் முல்லைத்தீவு அரசாங்க அதிபராகவும் கடமையாற்றி தற்போது யாழ்.மாவட்ட அரசாங்க அதிபராக கடமையேற்றுள்ளார்.

புதிய மாவட்டச் செயலாளரை வரவேற்கும் நிகழ்வு யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று காலை நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய மாவட்டச் செயலாளர் கூறுகையில்.

யாழ்.மாவட்டத்தில் முன்னர் அரச சேவையில் கடமையாற்றியவன் என்றவகையில் இங்குள்ள மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான கஷ்டங்கள் தொடர்பில் நான் நன்கு அறிவேன்.

யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேற்றப் பிரச்சினைகள் அதிக முள்ள வலிகாமம் மற்றும் தென்மராட்சிப் பிரதேசங்களில் கடமையாற்றியவன் என்பதன் அடிப்படையில் இடப்பெயர்வின் போதும் கடமையாற்றியவன் என்ற அடிப்படையிலும் எனக்கு இங்குள்ள மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான பிரச்சினைகள் நன்றாகவே தெரியும்.

யாழ்.மாவட்டத்திற்கு வந்துள்ள நான் நேர்மையான சேவையினை வழங்குவதற்கு அனைத்து தரப்பினரிடமிருந்தும் ஒத்துழைப்பைக் கோருகிறேன் என்றார். (எ-4)

## முன்னாள் அமைச்சர்...

மக்கள் போராட்ட இயக்கத்தின் அமைப்பாளர்களுமான லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் கடந்த 2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதியன்று ஆவரங்காலில் வைத்து கடத்தப்பட்டு காணாமல் போயிருந்தனர்.

சர்வதேச மனிதவுரிமைகள் தினமன்று யாழ்.நகரில் காணாமற்போனோர் தொடர்பில் உண்மை நிலையினை வெளியிடக்கோரி போராட்டம் ஒன்றினை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளினை முன்னெடுப்பதற்காகவே குறித்த இருவரும் மோட்டார் சைக்கிளில் பருத்தித்துறை வீதிவழியாக யாழ். நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

ஆவரங்கால் பகுதியில் குறித்த இருவரும் வந்து கொண்டிருந்த போது திடீரென காணாமல் போயிருந்தனர்.

இதில் இருவரும் காணாமல் போன இடத்திலிருந்து அவர்கள் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் மட்டும் மீட்கப்பட்டு இருந்தது.

இக்கடத்தல் சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு யாழ்.நீதவான் நீதிமன்றிலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கில் எதிர் மனுதாரர்களாக முன்னாள் இராணுவத்தளபதி ஜெகத் ஜெயசூரிய, யாழ்.மாவட்டத்தின் முன்னாள் இராணுவத்தள பதி மஹிந்த ஹத்துருசிங்க, அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சட்டமா அதிபர் ஆகியோர் உள்ளனர்.

இந்நிலையில் குறித்த வழக்கு கொழும்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் குறித்த சம்பவம் யாழில் நடைபெற்றதனால் குறித்த வழக்கினை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்.நீதி மன்றத்துக்கு பணித்திருந்தது.

வழக்கு விசாரணைகள் கடந்த நான்கு வருடங்களாக நடைபெற்று வந்த நிலையில் வழக் கோடு சம்பந்தப்பட்டவர்களின் வாக்கு மூலங்களும் பதிவு செய்யப்பட்டிருந்தன.

வழக்கு நடைபெற்றுக் கொண்டு இருக்கும்போது லலித், குகன் ஆகியோர் காணாமால் போகவில்லை என்றும் அவர்கள் உயிரோடுதான் இருக்கின்றனர் எனவும் முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டியொன்றினை அளித்திருந்தார்.

இப்பேட்டியின் பிரதியொன்றினை வழக்கின் மனுதாரர்கள் யாழ். நீதிமன்றில் சான்றாக சமர்ப்பித்திருந்தனர்.

இது தொடர்பில் அமைச்சர் கெஹலியவிடம் விசாரணை மேற்கொள்வதற்கு கடந்த வழக்கு தவணைகளின் போது இரண்டு தடவைகள் மன்றில் சமுகமளிக்குமாறு அழைப்பாணை அனுப்பியிருந்தது.

எனினும் நேற்றைய தினமும் அமைச்சர் மன்றில் ஆஜராகாத காரணத்தினால் மீண்டும் மூன்றாவது தடவையாகவும் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

யாழ் .நீதிமன்றில் நேற்றையதினம் நடைபெற்ற இவ்வழக்கில் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகளான நிரான் அங்ஹிட்டல், நுவான் போப்பகே ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். (எ-4)


# வேலைவாய்ப்பு

GOLDEN GROUP COMPANY க்கு

- ஐந்து வகையான பதவி வெற்றிடங்கள்
- கல்வித் தகைமை
  - O/L, A/L விரும்பத்தக்கது.
  - தங்குமிடம் இலவசம்.
  - முந்தும் 12 பேருக்கு முன்னுரிமை.
  - பதவிக்கான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
  - ஆர்வமுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:- 0776219536/ 0774301972/077 0516480

(9897)



SIKARAM கனடா
Express Entry Visa

தொழில்வாய்ப்புடன் நிரந்தர குடியுரிமை

Financial, Business, Sales & Insurance Managers, Accountants, Auditors... முதல் Supervisors Administrative Officers, Management Assistants, Wholesale & Retail Managers, Chefs, Bakers வரை

150க்கு மேற்பட்ட தொழில் நிலைகளுக்கு 180,000*க்கு மேற்பட்ட வெற்றிடங்கள்

கனேடிய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மூலம் புள்ளி அடிப்படையில் உங்கள் விண்ணப்ப தகைமையை மதிப்பீடு செய்து, கனேடிய முகவர் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்

100% பாதுகாப்பான ஏற்பாடு

ஏற்கனவே விண்ணப்பித்து பயனடைந்தவர்கள் பற்றிய மேலதிக விபரங்களை அறிந்தகொள்ள

FREE Assessment | www.sikaram.lk

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

Sikaram (Pvt) Ltd.
No.2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.(வைத்தியசாலை பின்புறம்)
Tel: 077 36 16 798
021 222 00 11


## சந்திரிகா...

ரங்கள் தகவல் வெளியிட்டுள்ளது.

அது தொடர்பில் களுத்துறை மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ரத்னசிறி விக்ரமநாயக்க இராஜினாமா செய்வதற்கு தற்பொழுது இணங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எப்படியிருப்பினும், இதற்கு முன்னர் நீதிமன்ற தீர்ப்பிற்கமைய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் பாராளுமன்ற பயணம் தொடர்பாக குழப்ப நிலை ஏற்பட்டுள்ளதாக அவருக்காக செயற்படுகின்ற சட்டத் தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-11)

## சீனா பயண...

உள்ளிட்ட குழுவினர் சீனாவுக்கு பயணித்துள்ளனர்.

சீன ஜனாதிபதி ஸீ ஜின்பிங் விடுத்துள்ள அழைப்பின் பேரில் நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம்மேற்கொண்டுள்ளார்.

இலங்கை ஜனாதிபதியை வரவேற்க, அங்கு வரவேற்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சீன தலைநகர் பீஜிங்கில் இன்று நடைபெறவுள்ள அரச நிகழ்வில் கலந்து கொள்ளும் இலங்கை ஜனாதிபதி, அதனையடுத்து சீன ஜனாதிபதியுடன் இருதரப்பு பேச்சு வார்த்தையில் ஈடுபடவுள்ளார்.

மேலும் சீன அரசின் உயர்மட்ட அதிகாரிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்.

அத்துடன், இரு நாட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் பல ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடவுள்ளார். (எ-11)

## திவிநெகுமவில்...

கள் தொடர்பில் 34 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், அந்த முறைப்பாடுகள் தொடர்பில் அந்த திணைக்களத்தின் இயக்குநரிடம் விசாரணை நடத்தியுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவை விசாரிப்பதற்கான தேவை எழுந்துள்ளதாகவும், அவர் தற்போது வெளிநாட்டில் வசித்துவருவதாகவும் ருவான் குணசேகர கூறினார்.

திவிநெகும திணைக்களத்தின் 'நிதி மோசடி தொடர்பில் பொலிஸார் கடுவலை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்துக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளனர்.

இதன்படி,. வெளிநாட்டில் வசித்துவரும் பசில் ராஜபக்ஷவை இலங்கைக்கு அழைப்பதற்கான உத்தரவொன்றை நீதிமன்றத்தின் ஊடாக பெறுவதற்கு தீர்மானித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

முதற்கட்டமாக, பசில் ராஜபக்ஷவை தொடர்புகொண்டு விசாரணைகளுக்கு சமுகமளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கவுள்ளதாகவும், அதற்கு அவர் ஒத்துழைப்பு அளிக்காவிட்டால் சர்வதேச பொலிஸாரின் உதவியைப் பெற்று அவரை நாட்டுக்கு அழைத்துவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி 8-ம் திகதி நடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து, பசில் ராஜபக்ஷ இலங்கையிலிருந்து வெளியேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org